விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபத்து நான்கு — Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 பங்குனி 25 சனிக்கிழமை (07.04.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 110

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## ஜெனிவாவில் கைவிட்டதால்

# இந்தியாவுடன் செய்த ஒப்பந்தங்களை இரத்து செய்ய இலங்கை அரசு முடிவு!

## முதல் அடி ஐ.ஓ.சி. ஒப்பந்தத்திற்கு

(கொழும்பு)

**இலங்கைக்கு எதிராக ஜெனிவாவில் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை ஆதரித்து இந்தியா வாக்களித்ததையடுத்து, இந்தியாவுடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களை படிப்படியாக இரத்துச்செய்ய இலங்கை அரசு முடிபெடுத்துள்ளதாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.**

ஜெனிவா மனிதவுரிமைப் பேரவையில் அமெரிக்க பிரேரணைக்கு இந்தியா ஆதரவு அளித்ததால் இந்தியாவை பழிதீர்க்கும் செயற்பாடுகளை அரசாங்கம் தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகின்றது.

இதன் ஒரு கட்டமாக இந்திய எண்ணெய் நிறுவனத்துடன் (ஐ.ஓ.சி.) செய்து கொள்ளப் பட்டுள்ள ஒப்பந்தத்தை இரத்துச் செய்வதற்கு தேவையான ஆலோசனைகள் பெறப்பட்டு வருகின்றன.

இந்தியாவை பழிதீர்க்கும் நோக்கில் இந்தியாவிற்கிடையிலான வர்த்தக உறவுக்ளில் இடைவெளியை அதிகரித்துக் கொள்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. (24ஆம் பக்கம் பார்க்க)



சிலையான பின்பும் அகிம்சைக்கு சோதனை!

மட்டக்களப்பில் அமைக்கப் பட்டிருந்த மகாத்மாகாந்தியின் உருவச் சிலையின் தலை துண்டிக் கப்பட்டநிலையில் இருப்பதை படத்தில் காணலாம்.

## த.தே.கூட்டமைப்புக்கு அரசுடன் ஒத்துபோகும் மனநிலை உள்ளது

### நேஸ்பி பிரபு கருத்துரைப்பு

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் போக்கில் மாற்றம் தென்படுவதாகவும் அரசாங்கத்தின் அதிகாரப் பகிர்வுக்கான முயற்சிகள் தொடர்பில் திறந்த மனப்பாங்கு, ஒத்துப்போகும் தன்மை, நல்லபிப்பிராயம் என்பவற்றை வெளிப்படுத்துவதாகவும் பிரித்தானிய நாடாளுமன்றத்தின் இலங்கை நட்புறக்கழகத்தின் ஸ்தாபகரான நேஸ்பி பிரபு மைக்கல் மொரிஸ் கூறியுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரை நான் சந்தித்தேன். யாழ்ப்பாணத்தில் சில நல்ல வேலைகள் செய்யப்படுவதாக அவர் ஏற்றுக் கொண்டார். (24ஆம் பக்கம் பார்க்க)

## ஆளும்கட்சி அமைச்சர்கள் மந்திரவாதிகளா?- ரில்வின்



(கொழும்பு)

ஆளும்கட்சியின் அமைச்சர்கள் மந்திர வாதிகளை போன்று செயற்பட்டு வருவதாக ஜே.வி.பியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

ஒவ்வொருவரும் ஒவ்வொருவிதமான வித்தைகளை எமக்கு காண்பிக்கின்றனர் என தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

அமைச்சர் பந்துல குணவர்த்தன 2500 ரூபாயைக்கொண்டு ஒருமாதம் சீவிக்க கூடிய மந்திரத்தை எமக்குக் கற்றுத்தருவதாக குறிப்பிடுகின்றார்.

மற்றொரு மந்திரவாதியான விமல் வீரவன்ச (24ஆம் பக்கம் பார்க்க)

## எதிர்க் கட்சிகளின் மேதின நிகழ்வு த.தே.கூ. தலைமையில் யாழில்

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் எதிர்க்கட்சிகளின் மேதினம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையில் நடைபெறவுள்ளதாக முடிபெடுக் கப்பட்டுள்ளது.

எதிர்வரும் மேதினத்தையொட்டி, எதிர்க்கட்சிகளினால் யாழ்ப்பாணத்தில் பொதுக்கூட்டமும், பேரணியும்நடத்துவதென முதன்மை எதிர்க்கட்சியான ஐ.தே.க. வினால் முடிபெடுக்கப்பட்டிருந்தது.

இதன்படி இந்த மே தினத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் இணைத் துக் கொள்ளுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டது.

அத்துடன் கூட்டமைப்பை இணைத்துக் கொள்வதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

இந்நிலையில், கொழும்பில் உள்ள எதிர் கட்சித் தலைவர் அலுவலகத்தில், மே தினம் குறித்து பேச்சுவார்த்தை இடம்பெற்றது.

இப்பேச்சுவார்த்தையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் கலந்து கொண்டது.

இதில், மே தினக் கூட்டமானது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையில் நடைபெறவும், அதற்கான ஏற்பாடுகள்யாவையும் கூட்டமைப்பே (24ஆம் பக்கம் பார்க்க)

## தொண்டு நிறுவன பணியாளர் 17 பேரின் கொலை

### புதிய இராஜதந்திர முயற்சியில் பிரான்ஸ்

(கொழும்பு)

பட்டினிக்கு எதிரான இயக்கம் என அழைக் கப்படும்சர்வதேசஉதவி முகவரகத்தின், பிரெஞ்சு கிளையுடன் இணைந்து வேலை செய்த 17 ஊழியர்கள் மூதூரில் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணையை முன்னெடுப் பதில் புதிய இராஜதந்திர முன்னெடுப்புக் களை பிரெஞ்சு தூதரகம் ஆரம்பித்துள்ளது.

இந்த சம்பவம் இடம்பெற்று 6 வருடங்கள் கடந்துள்ள போதிலும் கொலைகள் தொடர்பான விசாரணையின் தற்போதைய நிலைபற்றி பேசுவதற்காக பிரெஞ்சு தூதுவர் கிறிஸ்ரைன் றொபிக்கொன், சட்டமா அதிபரை சந்தித்துள்ளார்.

மாவிலாறு துருசுகளை தமிழீழ விடுதலைப்புலிகள் மூடியதை தொடர்ந்து ஆரம்பித்த யுத்தத்தின் ஆரம்பக் கட்டத்தில் இந்த உதவி நிறுவனப் பணியாளர்கள் கொல்லப்பட்டனர்.

இந்த விசாரணைகளுக்கு நடந்தவை பற்றி, பிரெஞ்சு (24ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் மேற்கொண்ட அழிவை ஒருபோதும் மறக்கமுடியாது



### அமைச்சர் பசில் உரை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் பயங்கரவாத நடவடிக்கைகளை ஒரு சில மேற்குலக நாடுகள் சரியென காண்பிப்பதற்கு முயற் சித்து வருவதாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ குற்றஞ்சாட்டியுள்ளார்.

முன்னாள் தமிழீழ விடுதலைப் புலிகளை புனர்வாழ்வளித்து சமூகத்துடன் இணைத்த போதும் அவர்களால் மேற்கொள்ளப்பட்ட அழிவுகளை ஒருபோதும் மறக்கமுடியாது எனவும் அமைச்சர் தெரிவித்தார். (24ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# நீங்கள் எம்முடன் இருக்க வேண்டும் இல்லை எனில் எதிரிதான்






## தமிழ்த் தரப்பின் நிலைப்பாடு இது என்கிறார் ஹக்கீம்

(கொழும்பு)

நீங்கள் என்னுடன் இருக்க வேண்டும். இல்லையெனில் எதிரிதான் என்ற நிலைப் பாட்டிலேயே சில தீவிரவாத தமிழ் உணர் வாளர்கள் உள்ளனர் என்று நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் இரண்டாவது நாளாக நடைபெற்ற ஜெனிவா தீர்மானம் தொடர் பிலான ஒத்திவைப்பு பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரை நிகழ்த் துகையிலேயே அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித் துள்ளதாவது,

நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசு களை நாம் நடைமுறைப்படுத்தி வருகை யில், சரியான நேரத்தில் அமையாத பிரகட னமாகவே ஜெனிவாத் தீர்மானம் அமைந் துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஜெனிவா மாநாட்டில் கலந்து கொள்ளாது என அறி விக்கப்பட்டதையடுத்து கூட்டமைப்பு நாடாளு மன்ற உறுப்பினர் ஒருவரின் கொடும்பாவி பல்கலைக்கழகமொன்றில் எரிக்கப்பட்டது.

அண்மையில், நான் இலக்கிய விழாவொ ன்றுக்கு அழைக்கப்பட்டிருந்தேன். நான் அங்கு சென்றதால் என்னை விமர்சித்து இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட் டிருந்தது.

தமிழர்களுக்கு எதிராக ஜெனிவா சென் றிருந்தேன் என விமர்சிக்கப்படுகின்றது. நல்லிணக்க உணர்வுடன்தான் நான் ஜெனிவா சென்றேன். எமக்கு ஆதரவாக வாக்களித்த நாடுகளுக்கு இங்குள்ள பிரச்சினை என்ன வென்பது நன்கு தெரியும்.

நான் தமிழர்களுக்கு எதிராகப் பேசுவ தற்கு இலக்கிய விழாவுக்குச் செல்லவில்லை. இந்தியாவின் நட்பைக்கூட புரிந்து கொள்ள முடியாதநிலையில்தீவிரவாத தமிழ் உணர்வாளர் கள் உள்ளனர். நீங்கள் என்னுடன் இருங்கள் இல்லையேல் எதிரிதான் என்ற கொள்கை யிலேயே அவர்கள் உள்ளனர்.

இணக்கப்பாடு ஏற்படவேண்டுமானால் அது உள்நாட்டிலேயே ஏற்பட வேண்டும். வெளித்தலையீடுகள் இருத்தல் கூடாது என நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

இதேவேளை இவ்விவாதத்தில் கலந்து கொண்ட அமைச்சர் டிலான் பெரேரா உரை நிகழ்த்துகையில்,

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை நாம் ஏற்றுக்கொண் டுள்ளோம். அதன் சிபாரிசுகள் அமுல்படுத்தப்பட்டு வருகின்றது. இந்நிலையில், எமக்கு அழுத்தம் பிரயோகிக்கப் படுகின்றது.

சோறு சாப்பிடும் போது இந்தா சாப் பிடு, சாப்பிடு எனத் திணிப்பது போல் தான் நாம் நடவடிக் கைகளை முன் னெடுக்கும் தறுவா யில் அநாவசிய மான முறையில் அழுத்தம் தரப்ப டுகின்றன.

இரண்டாம் தரப்பினராக இருக்க முடியாது எனக் கூறும் தமிழ்த் தேசி ய்க் கூட்டமைப்பு, தமிழ் மக்களை இர ண்டாம் தரப்பினர் எனக் குறிப்பிட்ட சரத் பொன் சேகா வுடன் கைகோர்த்து செயற்பட்டதேன்? என கேள்வியெழுப் பினார். (ந-8,11)

## வணிகமாணி III பெறுபேறு வெளியானது

இறுதியாக நடைபெற்ற யாழ்.பல்கலைக் கழக வணிகமாணி III பரீட்சைக்கான பெறு பேறுகள் வெளியாகியுள்ளதாக வெளிவாரி பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகின் இணைப் பாளர் க.சிவராஜா அறிவித்துள்ளார்.

பெறுபேறுகளை வெ.ப.ப.பரீட்சைகள் அலகில் பார்வையிட முடியும். (ந)





### மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ 1973-ல் பிறந்த உள்ளூர் ஆட்சி மன்றத்தில் வேலைபார்க்கும் மணமகனுக்கு சைவ போசன மணமகள் தேவை. நட்சத்திரம் பூரட்டாதி கிரகபாவம்18

யாழ். இந்து கௌரவ 1975 ஆண்டு ஆரம்பத்தில் பிறந்த பூசம் நட்சத்திரம் 10 கிரக பாவம் உடைய லண்டன்PR உள்ள மணமகனுக்கு சைவ போசன மணமகள் தேவை. மணமகன் தற்போது வந்துள்ளார்.

யாழ். இந்து கௌரவ 1988 ஆம் ஆண்டு பிறந்த மணமகனுக்கு அசைவ போசன மணமகள் தேவை. மணமகன் உயர்கல்வி கற்பதற்கு லண்டன் சென்றுள்ளார். நட்சத்திரம் சதயம்.

லண்டன்PR உள்ள மணமகள்தேவை

தொடர்புக்கு: 078 3017290
077 4232836
ஞாயிறு தவிர 021 321 2961

(சி-6286)

### மகாதேவா ஆச்சிரம சைவச் சிறுவர் இல்லம்
### இலவச தையல் பயிற்சி

**விதவைகளினதும் யுவதிகளினதும் வாழ்வாதாரத்தை மேம்படுத்த ஓர் அரிய சந்தர்ப்பம்**

தங்களுக்கான சுயதொழில் வாய்ப் பினை பெற்றுக் கொள்ளும் பொருட்டு இலவச தையல் பயிற்சிநெறி ஒன்று மகா தேவா ஆச்சிரம சைவச் சிறுவர் இல்லத்தில் நடைபெறவுள்ளது. மதிய உணவு மற்றும் தேநீர், பயிற்சிக் காலத்தின்போது வழங்கப்படும்.

முறையான பயிற்சிபெற்று தேர்வில் சித்தியடைந்து தையல் தொழிலில் உண் மையாக ஈடுபட விரும்புபவர்களுக்கு தையல் இயந்திரம் வழங்க தமிழ் பொறியியலாளர் நிறுவனம் ஆலோசிப்பதாக கூறியுள்ளனர். இதனைப் பயன்படுத்தி வருமானம் பெற முயற்சி செய்யாதுவிடின் மீளப் பெறப் படும் என்ற நிபந்தனையின் அடிப் படையில் வழங்கப்படும்.

இதில் கலந்துகொண்டு பயனடைய விரும் புபவர்கள் 10.04.2012 திகதிக்கு முன்னர் ஜெயந்திநகர் கிராம அலுவலரிடம் தங்கள் பதிவுகளை மேற்கொள்ளும்படி வேண்டப்படுகிறீர்கள்.

.....சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்....

**தி. இராசநாயகம்**
**தலைவர்**
**மகாதேவா ஆச்சிரம சைவச் சிறுவர் இல்லம்**
**ஜெயந்திநகர், கிளிநொச்சி.**

(சி-6293)

### தரம் 5 மாணவர்களுக்கான
### புலமைப் பரிசில்-2012
### மாதிரிப் பரீட்சை
### புலமைச் சிட்டு-02

(நாவலர் வெளியீடு)

(ஞாயிறுதோறும் நடைபெறும் இப்பரீட்சை விரும்பிய 6 நேரங்களில்
காலை 8.00, 9.00, 10.00,
மாலை 2.00, 3.00, 4.00

**புலமைச் சிட்டு-01 இல் அதிகூடிய புள்ளி பெற்றோர்**
- ந.வதனி -177 (யா/புனித திரேசா மகளிர் கல்லூரி)
- த.கவுதமன்-173 (யா/புனித ஜோன் பொஸ்கோ)
- தே.திருக்குமரன்-170 (யா/புனித ஜோன் பொஸ்கோ)

அடுத்த பரீட்சை : 08.04.2012

தொடர்புகளுக்கு:
**புதிய நாவலர் கல்வி நிலையம்**
**ஆனைப்பந்தி சந்தி, யாழ்ப்பாணம்.**
T.P.: 0774598440

(சி-6292)

### EASY ENGLISH

ஆசிரியர்: சண்முகம் முத்துலிங்கம்
YAALH ENGLISH ACADEMY
யாழ். நகரில் வகுப்பிட அனுசரணை:
புதிய உயர் கல்லூரி
விபரங்களுக்கு :0773212711

(7379)

### 2013 BIOLOGY MARKS LIST - 09th

| | முழுப் பெயர் | புள்ளி | பாடசாலை |
|---|---|---|---|
| 1 | நினுஜா தயாபரன் | 94 | J/ V.G.H.S |
| 2 | தாரணி கோகழிநாதன் | 90 | J/ V.G.H.S |
| 3 | பிரியந்தினி சத்தியசீலன் | 85 | J/ V.G.H.S |
| 4 | இந்துஜா சிவசுந்தரம் | 81 | J/ V.G.H.S |
| 5 | யோகராஜா சாருஜன் | 81 | J.H.C |
| 6 | சு.மோனிஷா | 81 | J/ V.G.H.S |
| 7 | பழனிவேல் லக்ஸ்மன் | 79 | J.H.C |
| 8 | ஷம்யா சிவானந்தன் | 78 | J/ V.G.H.S |
| 9 | கருணாகரன் பிரணவன் | 78 | J/K.H.C |
| 10 | கோஜியா திருலோகநாதன் | 77 | J/ V.G.H.S |
| 11 | யாழினி சிவலட்சணம் | 75 | J/ V.G.H.S |
| 12 | சற்குணம் சிறிபவன் | 74 | J/S.P.C |
| 13 | லன்சி டொன்பொஸ்கோ | 74 | M/P.C.C |
| 14 | வர்த்தனி சுஸ்ருதன் | 72 | J/C.G.C |
| 15 | பிரியதர்சினி இராஜரட்ணம் | 72 | J/ U.G.C. |
| 16 | ருக்ஷிகா புவனேந்திரராஜா | 71 | J/ V.G.H.S |
| 17 | பவானி ஸ்கந்தராஜா | 69 | J/ V.G.H.S |
| 18 | இராஜேந்திரன் கஜானன் | 68 | J.H.C |
| 19 | சோதிதாசன் வெண்ணிலவன் | 68 | J.H.C |
| 20 | ஜெயக்குமார் அமிர்தன் | 67 | J.H.C |
| 21 | பரமேஸ்வரன் சாஸ்வதன் | 67 | J.H.C |
| 22 | சாலினி செல்வரட்ணம் | 66 | J/ U.G.C. |
| 23 | பிரியங்கா புஸ்பகாந்தன் | 61 | J/ V.G.H.S |
| 24 | ப்ருதுவி கதிர்காமலிங்கம் | 61 | J/ H.L.C |
| 25 | செல்வரத்தினம் குகனேசன் | 61 | J.H.C |


(8123)

**சு.பொன்திவாகரன்**

SCIENCE POINT *JAFFNA*
SCIENCE CORNER *JAFFNA*
BIOLOGY PARK *MANIPAY*


## மரண அறிவித்தல்

### வல்லிபுரம் திருநாவுக்கரசு (சர்க்கரை)



புலோலி மேற்கு கார்த்திகேசர் வீதியை சேர்ந்த வல்லிபுரம் திருநாவுக்கரசு (சர்க்கரை) 04.04.2012 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலம்பர் வல்லிபுரம் தெய்வானைப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகனும் சரஸ்வதியின் அன்புக் கணவரும், ஆழ்வாப்பிள்ளை தங்கம்மா ஆகியோரின் அன்பு மருமகனும், காலஞ்சென்றவர்களான துரைசிங்கம், சீனிக்குட்டி, செல்வ ராசா, பாக்கியம், திருப்பதி, தங் கம்மா மற்றும் கிருஸ்ணபிள்ளை, சூரியப்பிரகாசம், சந்திரப்பிரகாசம் ஆகியோரின் சகோதரரும், சாந்தினி, திருச்செல்வம், திருக்குமார், தயாளினி, சறோஜினி, திருப்பவானந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும், இராசேந்திரம் (லண்டன்), லோகேஸ்வரி, கிருபானந்தி, (ஜேர்மனி), இராசகுமார், தர்ஷிகா (லண்டன்), ஜெயராஜ் (நோர்வே) ஆகியோரின் அன்பு மாமனாரும் சாரதா விஜிதா, மயூரன், சுஜீவன், சனுஷா, சயந், அபிராமி, சுனுஜா, சிந்தூரி, திரிசிக்கா, பவானிக்கா, தாமரா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நாளை 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் பருத்தித்துறை சுப்பர்மடம் இந்து மயா னத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கார்த்திகேசர் வீதி;**
**புலோலி மேற்கு.**

(சி-6291)

**தகவல்:**
**குடும்பத்தினர்**

# இன்று ஒரு தகவல்

## கீதையும் நிர்வாகமும்

அரசாங்க உத்தியோகம் பார்க்கும் ஒருத்தர் பகவத் கீதையை படித்து கொண்டு உட்கார்ந்திருந்தார். "சேர் நீங்கள் பார்க்கிற உத்தியோகத்துக்கும் படிக்கிற புத்தகத்துக்கும் கொஞ்சம் கூட சம்பந்தம் இருப்பதாக தெரியவில்லையே..." என்றேன்.

" என்ன அப்படி சொல்லி விட்டீர்கள். இதில் கர்ம யோகத்தை பற்றி பேசும்போது மூன்று தத்துவங்கள் வலியுறுத்தப்படுகிறது. நிர்வாகிகளெல்லாம் அதைக் கொஞ்சம் புரிந்து கொண்டால் நல்லது" என்றார்.

"அது என்னங்க... மூன்று தத்துவங்கள்?" என்றேன். அவர் சொல்ல ஆரம்பித்தார்.

" எதிலும் பற்றற்று இருத்தல் – இது முதலாவது தத்துவம். பலனை எதிர்பார்த்து செய்யாமை– இது இரண்டாவது தத்துவம்.

எதையும் ஈஸ்வர அர்ப்பணமாகச் செய்தல்– இது மூன்றாவது தத்துவம்" என்றார்.

எனக்கு ஒன்றும் புரியவில்லை.

" இதற்கும் நிர்வாகத்திற்கும் என்ன சம்பந்தம்?" என்றேன்.

" விபரமாக சொல்கிறேன் கேளுங்கள்" என்றார். அதன் பின் சொன்னார்.

முதல் தத்துவத்தின் கருத்து என்ன? எதிலும் பற்றற்றிருத்தல் என்றால் ஒருஅலுவலக மேலாலர் யார் மீதும் பற்றற்று எல்லோரையும் சரிசமமாக நடத்த வேண்டும்.

இவர் நமக்கு வேண்டியவர். அவர் நமக்கு வேண்டாதவர். என்ற எண்ணம் எல்லாம் அவருக்கு வரக்கூடாது.

ஒரு அலுவலகம் என்று இருந்தால் அங்கே கோள் சொல்லுவதற்கென்று சில பேர் இருப்பார்கள்.

திறமையாக வேலை செய்பவர்களைக் கூட இவர்கள் மோசமாக அதிகாரிகளிடம் சொல்லி வைத்து விடுவார்கள். மேலதிகாரி இதைக் கேட்டு நடக்க ஆரம்பித்தால் வேலைதான் வீணாகப் போய்விடும்.

சரி! இப்பொழுது அந்த இரண்டாவது தத்துவத்திற்கு வருவோம். அது என்ன சொல்கிறது? பலனை எதிர்பார்த்து எதையும் செய்யாதே! என்றால் பலனே வேண்டாம்– என்று இதற்கு அர்த்தம் கொள்ளக் கூடாது.

இலாபம் வந்தாலும் சரி, நட்டம் வந்தாலும் சரி, மனம் ஒரு சீராக இருக்க வேண்டும். நட்டம் வந்தால் அதற்கு என்ன காரணம் என்பதை ஆராயவேண்டும்... அதை விட்டு விட்டு... சோர்ந்து போய் உட்கார்ந்திருக்கக்கூடாது. அல்லது வேலை செய்பவர்களை வீட்டிற்கு அனுப்பலாமா என்று யோசிக்க கூடாது.

அதேபோன்று இலாபம் வந்தால் அதற்காக துள்ளிக்குதிக்கக் கூடாது. அப்படி செய்யும் போது கவனக்குறைவு ஏற்பட வாய்ப்புண்டு. இது அடுத்த வருட நட்டத்திற்கு காரணமாகிவிடும்.

மூன்றாவது தத்துவம்– எதையும் ஈஸ்வர அர்ப்பணமாக செய்தல்.

ஓர் அலுவலகத்தில் வேலை பார்க்கும் ஒருவரிடம் போய் "நீங்கள் யாருக்காக வேலை செய்கிறீர்கள்?" என்று கேட்டேன்.

"என்ன சேர் இப்படிக் கேட்கிறீர்கள்? நான் எனக்காகத்தான் வேலை செய்கிறேன்" என்றார்.

"அப்படியா சொல்கிறீங்கள்?" என்றேன்.

"ஆமாம்! முதலாம் திகதி சம்பளம் வாங்குகிறேன் அல்லவா... அதற்காகத்தான் வேலை செய்கிறேன்" சம்பளத்துக்காக வேலை செய்கிறோம் என்று நினைக்காமல் இந்த நிறுவனத்தின் முன்னேற்றத்துக்கா வேலை செய்கிறோம்– என்று நினைப்பு வர வேண்டும். அதன் மூலமாக இந்த நாட்டை வளப்படுத்துகிறோம் என்ற நினைப்பு வர வேண்டும்.

ஈஸ்வர அர்ப்பணம் என்றால் அதுதான்.

செய்யும் தொழிலே தெய்வம்.

இவ்வளவையும் அந்த நண்பர் என்னிடம் விபரமாகச் சொல்லி விட்டு,

"இப்பொழுது சொல்லுங்கள் சேர்... கீதையின் கர்ம யோகத்திற்கும் காரியாலய நிர்வாகத்திற்கும் சம்பந்தம் உண்டா... இல்லையா?" என்றார்.

நீங்கள் சொல்லுவது சரிதான் என்று சொல்லிவிட்டு எழுந்து வெளியில் வந்தேன். பின்னர் நினைத்துப் பார்த்தேன்.

இப்பொழுதெல்லாம் அலுவலகங்கள் இப்படியா இருக்கின்றன? ஒருத்தர் கேட்டார்:

"என்ன இது? உங்கள் அலுவலக தினவரவுப்புத்தகத்தில் பென்சிலை கட்டிப்போட்டிருக்கிறீர்கள்? இவையெல்லாம் கூடவா திருடிக் கொண்டு போய்விடுவார்கள்..." என்றார்.

"இது 36 ஆவது பென்சில்" என்றார் அவர்.

"எங்கள் அலுவலகத்திலும் கூட பென்சில் திருட்டுப்போவதுண்டு. ஆனால், அதை இப்படி தினவரப்புத்தகத்தில் கட்டிப்போடுவது இல்லை" என்றார் இவர்.

"ஏன்?" என்று கேட்டார்.

"அப்படிச்செய்தால் தினவரவுப்புத்தகத்தையும் சேர்த்து தூக்கிக் கொண்டு போய்விடுகிறார்கள் சேர்" என்றார் இவர்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# பிரதேச செயலகங்களுக்கான திவிநெகும புத்தாண்டுச்சந்தை

(யாழ்ப்பாணம்)

பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் வாழ்வெழுச்சி புத்தாண்டு சந்தையானது யாழ்.மாவட்டத்தில் உள்ள சகல பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் இரு தினங்கள் நடைபெறவுள்ளதாக சமுர்த்தி உதவி ஆணையாளர் எஸ்.சிவசிறி அறிவித்துள்ளார்.

இச்சந்தையானது உள்ளூர் உற்பத்தியாளர்கள் தங்கள் உற்பத்திப் பொருட்களை இலகுவாக சந்தைப்படுத்துவதற்கும் பொதுமக்கள் புத்தாண்டு காலத்தில் தங்களுக்கு தேவையான பொருட்களை சகாய விலையில் பெற்று பயனடைவதற்கும் நல்லதொரு சந்தர்ப்பமாக அமையும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் பிரதேச செயலகப்பிரிவு ரீதியாக புத்தாண்டுச்சந்தை நடைபெறும் தினங்கள் தொடர்பான விபரங்கள் வருமாறு, நாளை ஞாயிற்றுக்கிமையும் நாளை மறுதினம் திங்கட்கிழமையும் கரவெட்டி பிரதேச செயலகத்திற்குட்பட்ட மக்களுக்கான புத்தாண்டுச்சந்தை நெல்லியடி மிச்சல் விளையாட்டுக்கழக மைதானத்திலும் நாளை மறுதினம் திங்கட்கிழமையும் மறுநாள் செவ்வாய்க்கிழமையும் பருத்தித்துறை பிரதேச செயலகத்திற்குட்பட்ட மக்களுக்கான புத்தாண்டுச்சந்தை ஐக்கிய விளையாட்டுக்கழக மைதானத்திலும் சங்கானை பிரதேச செயலகத்திற்குட்பட்ட மக்களுக்கான புத்தாண்டுச் சந்தை பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயத்திலும் நல்லூர் பிரதேச செயலகத்திற்குட்பட்ட மக்களுக்கான புத்தாண்டுச்சந்தை திருநெல்வேலிச்சந்தி வை.எம்.சி.ஏ. கட்டடத்திலும் மருதங்கேணி பிரதேச செயலகத்திற்குட்பட்ட பல நோக்குக் கூட்டுறவுச்சங்க கட்டடத்திலும் நடைபெறவுள்ளது.

மேலும் எதிர்வரும் 10 ஆம், 11 ஆம் திகதிகளில் யாழ்ப்பாண பிரதேச செயலகத்திற்குட்பட்ட மக்களுக்கு குருநகர் அரச தொடர் குடியிருப்பு விளையாட்டுக்கழக மைதானத்திலும் கோப்பாய் பிரதேச செயலகத்திற்குட்பட்ட மக்களுக்கு கோப்பாய் கந்த சுவாமி கோவிலிலும் தெல்லிப்பழை பிரதேச செயலகத்திற்குட்பட்ட மக்களுக்கு பிரதேச சபைக்கான சந்தைக் கட்டடத்திலும் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்திற்குட்பட்ட மக்களுக்கு மானிப்பாய் பிரதேச சபை மண்டபத்திலும் நெடுந்தீவு பிரதேச செயலகத்திற்குட்பட்ட மக்களுக்கு நெடுந்தீவு மகா வித்தியாலய மைதானத்திலும் வேலணைப் பிரதேச செயலகத்திற்குட்பட்ட மக்களுக்கு பிரதேச செயலகத்திற்கு அண்மையிலும் நடைபெறவுள்ளது.

அத்தோடு ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்திற்குட்பட்ட மக்களுக்கு ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியிலும் காரைநகர் பிரதேச செயலகத்திற்குட்பட்ட மக்களுக்கு சைவ மகா சபைக் கட்டடத்திலும் சாவகச்சேரி பிரதேச செயலகத்திற்குட்பட்ட மக்களுக்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி கட்டடத்திலும் உடுவில் பிரதேச செயலகத்திற்குட்பட்ட மக்களுக்கு இணுவில் பழைய சந்தைக் கட்டடத்திலும் நடைபெறவுள்ளன.

இப்புத்தாண்டுச் சந்தையை இலங்கை சமுர்த்தி அதிகா ரசபை, கமநல அபிவிருத்தி திணைக்களம், கூட்டுறவுதிணைக்களம் ஆகிய னவும் சமுர்த்தி ஆணையாளர் நாயகத் திணைக்களமும் ஒன்றிணைந்து செயற்படுத்துகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 40 | 40 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 60 |
| பச்சைமிளகாய் | 50 | 40 | 30 |
| தக்காளி | 25-30 | 30 | 20 |
| மரவள்ளிக் கிழங்கு | 30 | 30 | 30 |
| கோவா | 25 | 10 | 20 |
| கரட் | 40 | 30 | 30 |
| பூசணி | 30 | 20 | 20 |
| புடோல் | 25 | 40 | 40 |
| வாழைக்காய் | 30-35 | 20 | 30 |
| சின்ன வெங்காயம் | 40-50 | 40-70 | 70 |
| பெரிய வெங்காயம் | 75 | 80 | 70 |
| பாகற்காய் | 90 | 100 | 80 |
| வெண்டிக்காய் | 50 | 60 | 60 |
| கருணைக் கிழங்கு | -- | 70 | 70 |
| பயற்றங்காய் | 80 | 100 | 45 |
| லீக்ஸ் | 50 | 70 | 70 |
| பீற்றூட் | 25 | 20 | 25 |
| கறிமிளகாய் | -- | 60 | 50 |
| முருங்கைக்காய் | 250-300 | 300 | 300-400 |
| போஞ்சி | 40 | 70 | 70 |
| கத்தரிதம்புள்ள | -- | 30 | 10 |
| கீரை – 1 பிடி | 15 | 20 | 15 |
| தேசிக்காய் | 40 | 60 | 40 |
| தேங்காய் (ஒன்று) | 15-35 | 25 | 30 |

# இராசி பலன்

07.04.2012
(பங்குனி 25, சனிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.07 மணிக்கு
பிரதமை முன்னிரவு 11.25 மணிவரை
சித்திரை பின்னிரவு 12.01 மணிவரை
இராகுகாலம் 9.07-10.37 மணிவரை
சுபநேரம் 3.07-4.37 மணிவரை
சஷ்டி விரதம்.

**மேடம்** கந்தன் வழிபாட்டால் அதிர்ஷ்ட வாய்ப்புக்களை வரவழைத்துக் கொள்ள வேண்டிய நாள், விருந்தினர் வருகையுண்டு, தொழிலில் கூட்டாளிகள் ஒத்துழைப்பு கிடைக்கும், செல்வாக்கான நாள்.

**இடபம்** பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமைகள் வந்து சேரலாம், உடல் நலம் சீராகும், கடன்சுமை குறையும், ஆடம்பரப் பொருட்களின் சேர்க்கையுண்டு.

**மிதுனம்** பெருமைகள் வந்து சேர கந்தனை வழிபட வேண்டிய நாள், பிள்ளைகளின் வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சி வெற்றி பெறும், சான்றோர்களின் சந்திப்புண்டு, குடும்பத்தில் குதூகலம் கூடும்.

**கடகம்** வாகன யோகமுண்டு, பெற்றோர் மீது பிரியம் கூடும், தொழில் முன்னேற்றம் அதிகரிக்கும், நம்பிக்கைகள் நடைபெற வள்ளிமணாளனை வழிபட வேண்டிய நாள்.

**சிங்கம்** அரசியல் செல்வாக்கு மேலோங்கும், சந்தித்த நண்பர்களால் வளர்ச்சி கூடும், வீடு, மனை சம்பந்தப்பட்ட வகையில் ஆதாயம் கிடைக்கலாம், சகோதரர் வழியில் நன்மையுண்டு.

**கன்னி** மக்கள் போற்றும் வாழ்வமைய விக்கினேஸ்வரனை வழிபட வேண்டிய நாள், பணத்தேவைகள் பூர்த்தியாகும், உடல் நலம் சீராகி உற்சாகத்தோடு பணி புரிவீர்கள், வாக்கு மேன்மையுண்டு.

**துலாம்** திடீர் பயணத்தால் பணவரவு ஏற்படலாம், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், குடும்ப பெரியவர்களின் சொற்களைக் கேட்டு நடப்பது நல்லது, சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**விருச்சிகம்** காரியங்களில் வெற்றிபெற கணபதியை வழிபட வேண்டிய நாள், பயணங்களால் பலனுண்டு, பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், மனச்சஞ்சலங்கள் அதிகரிக்கும், சயன சுகக்குறைவான நாள்.

**தனுசு** பொதுவாழ்வில் புகழ் கூடும், விலையுயர்ந்த பொருட்கள் வீடு வந்து சேரும், தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும், அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் வந்து சேர வேண்டிய நாள்.

**மகரம்** கனவுகள் நனவாக கற்பக மூர்த்தியை வழிபட வேண்டிய நாள், புதிய பொருட்கள் வாங்க போட்ட திட்டங்களில் முன்னேற்றம் ஏற்படும், பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம்.

**கும்பம்** தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள், தொழிலில் உயரதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள், தந்தை வழியில் தனவரவுண்டு, திடீர் பயணங்களால் நன்மையுண்டு, பித்த சம்பந்தமான வியாதிகள் ஏற்படலாம்.

**மீனம்** கவலைகள் தீர கந்தனை வழிபட வேண்டிய நாள், உறவினர்கள் வழியில் சுப செலவுகளை சந்திக்கலாம், உடல் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், நண்பர்களுடன் பழகும்போது கவனம் தேவை.

வளவன்

## மகுடம் சஞ்சிகை அறிமுகவிழா

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் பொது நூலக உள்ளூராட்சி மறுசீரமைப்பு 2012 செயற்றிட்ட மகுடம் சஞ்சிகை அறிமுக நிகழ்வு இன்று சனிக்கிழமை மாலை 3 மணிக்கு சுன்னாகம் பொது நூலகத்தில் யா/ கீரிமலை நகுலேஸ்வரா வித்தியாலய அதிபர் சு.ஸ்ரீகுமரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் வலி.தெற்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா பிரகாஷ் சஞ்சிகையினை வெளியிட்டு வைக்க வலி. வடக்கு பிரதேச சபைத் தவிசாளர் சோ. சுகிர்தன் முதற்பிரதியை பெற்றுக்கொள்வார்.

ஆய்வுரையினை யா/ ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஆசிரியர் ம.பா. மகாலிங்கம், யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி ஆசிரியர் பி. குகபரன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (அ)

# திருவடிநிலை, காட்டுப்புலக்கடல் பகுதியில் மீன்பிடிக்க அனுமதி வழங்குமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

திருவடிநிலை, காட்டுப்புலம் போன்ற இடங்களில் மீன்பிடிக்க கடற்படையினர் தடைவிதித்துள்ளனர். இதுவிடயத்தில் தமக்கு உரிய தீர்வைப் பெற்றுத்தருமாறு கோரி கெங்காதேவி கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கத்தவர்கள், பாராளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமாருக்கும் யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமாருக்கும் மகஜர் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார். இம்மகஜரில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,




நாங்கள் 1992 ஆம் ஆண்டில் திருவடிநிலை, காட்டுப்புலம் போன்ற இடங்களில் இருந்து இடம்பெயர்ந்து வந்தவர்கள். கடந்த கால யுத்த காலத்திலும் மீன்பிடித்தொழிலை எவ்வித தடையுமின்றி இக் கடற்பரப்பில் செய்து வந்தோம்.

அண்மைக்காலத்தில் பெரும்பான்மையினத்தவரால் பெரிதாகக் கட்டுப்பட்டுள்ள விகாரைப் பகுதிக்கான கடலிலும் மீன்பிடித் தொழிலை மேற்கொண்டு வந்தோம்.

பின்னர் கடற்படையினரால் அப்பகுதியில் நாம் மீன்பிடிப்பதற்கான அனுமதி மறுக்கப்பட்டது.

களங்கண்டி மீன் வகைகள் அதிகமாக உள்ள இடம் மேற்குறிப்பிட்ட கடல் பகுதியாகும். ஏனைய பகுதியைப் போலன்று இக் குறிப்பிட்ட கடல் பகுதியில் அதிகளவு மீன்களை நாம் பிடித்து வந்தோம்.

தற்போது எமது தொழிலை இழக்க வேண்டிய நிலையிலும் வருமானத்தைப் பெற முடியாத நிலையிலும் உள்ளோம்.

இதுபற்றி கடிதம் ஒன்றை கடற்படையினருக்கு கையளித்திருந்தோம். அதற்கான பதிலும் இதுவரை எமக்குக் கிடைக்கவில்லை.

எனவே, தாங்கள் உரிய நடவடிக்கை எடுத்து இப்பகுதிகளில் நாம் மீன்பிடிக்கக் கூடிய வசதிகளை செய்து தருமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கின்றோம். எமது வாழ்வாதாரம் முழுக்க மீன்பிடித்தொழிலையே நம்பியுள்ளது என அந்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# யாழ்.நகரில் இதுவரை 30 வரையிலான விபத்துச்சம்பவங்கள் பதிவாகியுள்ளன

### யாழ்.நகர போக்குவரத்து பொலிஸார் தெரிவிப்பு

யாழ்ப்பாணத்தில் இவ்வருட முற்பகுதியில் மட்டும் 30 வரையான விபத்துக்கள் தொடர்பான முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக யாழ். பொலிஸ் நிலைய போக்குவரத்து பிரிவு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ் எண்ணிக்கையானது ஏனைய இடங்களில் ஏற்படும் விபத்துச் சம்பவங்களினை விட மிகக் கூடுதலானதாகும் எனவும் தெரிவிக்கின்றனர்.

தற்போது காணப்படும் விபத்து எண்ணிக்கைகளை விட அதிகரிக்கக்கூடிய சந்தர்ப்பங்கள் காணப்பட்டபோது போக்குவரத்து பொலிஸாரின் சேவை மூலம் அவை குறைக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடுகின்றனர்.

வாகனப்பெருக்கம் எனக் கூறப்பட்டாலும் அதற்கு அப்பால் வாகனங்களினை செலுத்துவோர் வீதியில் போக்குவரத்து விதிகளினை கடைப்பிடிக்காமை காரணமாகவே தற்போது யாழில் விபத்துக்கள் அதிகரிக்கின்றன.

18 வயதிற்கு குறைந்த சிறுவர்களும் மோட்டார் சைக்கிளினை மிக வேகமாக செலுத்தி விபத்துக்குள்ளாகின்றனர்.

இவை எல்லாவற்றினையும் பொலிஸார் தான் கட்டுப்படுத்த வேண்டும் என்றால் அது முடியாத காரியம்.

சிறுபிள்ளைகளுக்கு மோட்டார் சைக்கிளினை வாங்கிக் கொடுக்கும் பெற்றோர்கள் முதலில் இதனைச் சிந்திக்க வேண்டும்.

இவ்வீதிகள் சிறியனவாக காணப்படுகின்ற போதும் தலைக்கவசம், ஆசனப்பட்டி போன்றவற்றை அணியாமல் செல்லும் சந்தர்ப்பத்தில் ஏற்படும் விபத்துக்களின் பாதிப்புக்கள் பெரியதாகவே உள்ளன. ஆசனப்பட்டி அணியாமல் செலுத்துபவர்கள் தற்போது அதிகரித்துள்ள நிலையில் அதனைக் கட்டுப்படுத்துவதற்கு ஆசனப்பட்டி அணியாதவர்களுக்கான அபராதத் தொகையினை ஆயிரம் ரூபாவாக உயர்த்தியுள்ளது அரசு.

அபராதத்தொகையினை செலுத்திவிட்டு மீண்டும் அதே தவறினை விடுவதனால் விபத்துக்கள் அதிகரிக்கவே செய்யும்.

விபத்துக்களில் இருந்து தம்மையும் பிறரையும் தவிர்க்கும் படியாக வாகன உரிமையாளர்கள் வாகனங்களினை செலுத்த வேண்டும் என அவர்கள் மேலும் தெரிவித்தனர். (அ-4)

## ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி வடக்கு பிரதேச ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம் எதிர்வரும் 11 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பாராளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் தலைமையில் நடைபெறவுள்ளது.

எனவே, பிரதேச திணைக்கள தலைவர்களும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளும் தவறாது சமுகமளித்து ஒத்துழைக்குமாறு வடமராட்சி பிரதேச செயலாளர் இ.த. ஜெயசீலன் அறிவித்துள்ளார்.

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச செயலகப் பிரிவிற்கான பிரதேச மட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டமானது நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 10 மணிக்கு பாராளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் தலைமையில் நல்லூர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (அ)

# ஊடகவளங்கள் மற்றும் பயிற்சி மையத்தின் திரைப்படவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையத்தின் ஆவணத் திரைப்பட விழா இன்று சனிக்கிழமை யாழ்ப்பாணம் ஜும்மா பள்ளிவாசல் ஒழுங்கை ஊடக வளங்கள் பயிற்சி மையத்தில் நடைபெறவுள்ளதாக அதன் பணிப்பாளர் தே. தேவானந் அறிவித்துள்ளார்.

இதில் பர்மா நாட்டின் ஜனநாயகப் போராட்டம் தொடர்பான புலனாய்வு வீடியோ ஆவணங்களை அடிப்படையாகக் கொண்ட பர்மா வி.ஜே. என்ற ஆவணத்திரைப்படமும் தென் ஆபிரிக்க மக்கள் போராட்டத் தலைவர் நெல்சன் மண்டேலாவின் வாழ்க்கையில் நடந்த முக்கிய விடயங்களை அடிப்படையாகக் கொண்ட ஆவணத்திரைப்படம் மண்டேலா ஆபிரிக்காவின் தந்தை என்ற திரைப்படமும் திரையிடப்படவுள்ளது.

இத்திரைப்படக்காட்சிகள் காலை அமர்வு காலை 10 மணிக்கும் மாலை அமர்வு மாலை 2 மணிக்கும் மேற்படி கற்கை நிலையத்தில் நடைபெறவுள்ளது.

திரைப்பட ஆர்வலர்கள், ஊடகத்துறை மாணவர்கள் இந்த திரைப்பட விழாவில் பங்குபற்றுவதோடு மேலதிக தகவல்களுக்கு 021 2229873 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ள முடியும்

இந்த இரண்டு திரைப்படங்களும் பல சர்வதேச திரைப்பட விருதுகளை பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண கல்வி வலயத்தில் ஆங்கில ஆசிரியர் வெற்றிடமுள்ள பாடசாலைகளுக்கு பகுதி நேர ஆங்கில ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டவுள்ளதாக யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் வை. செல்வராஜா அறிவித்துள்ளார்.

க.பொ.த. (உ/த) பரீட்சையில் 3 பாடங்களில் சித்தியும் க.பொ.த. (சா/த) பரீட்சையில் ஆங்கில பாடத்தில் ஏ அல்லது பி சித்தியுமுள்ளவர்கள் மற்றும் இளைப்பாறிய ஆங்கில பயிற்சி பெற்ற அல்லது ஆங்கிலத்தை ஒரு பிரதான பாடமாக கொண்ட பட்டதாரி ஆசிரியர்கள் விண்ணப்பிக்க முடியும்.

இதற்கான விண்ணப்பங்கள் அனைத்தையும் வலயக் கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு எதிர்வரும் 18 ஆம் திகதி புதன்கிழமைக்கு முன்னதாக அனுப்பி வைக்க வேண்டும் எனவும் அவர் கேட்டுள்ளார். (அ-2)





யா/கோப்பாய் தெற்கு கந்தவேள் தமிழ்க் கலவன் பாடசாலைவல்லுநர் போட்டி அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் மாணவர்களின் அணிவகுப்பு நிகழ்வினையும் படங்களில் காணலாம்


அதிநவீன ஆடைத்தெரிவுகளுக்கு....
அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள்
ஸ்ரைல் பார்க்
எடுப்பான தோற்றம் பெற...
சித்திரைப் புதுவருடத்தை முன்னிட்டு வெளிநாட்டில் இருந்து இறக்குமதிசெய்யப்பட்ட புத்தம் புதிய அழகிய ஆடைத்தெரிவுகளுக்கு இன்றே நாடவேண்டி இடம்
நிறைவான தெரிவு
நியாயமான விலையில்
STYLE PARK
சிறுவர் முதல் பெரியவர்வரையான ஆடைத் தெரிவுகளுக்கு
ரகங்கள் பலவிதம்
தரத்தில் முதலிடம்
STYLE PARK
HNB கிரடிற்காட் மற்றும் டெபிட் காட் வாடிக்கையாளர்களுக்கு 10% விலைக்கழிவு வழங்கப்படும்.
இச் சலுகை ஏப்ரல் 13 வரை மட்டுமே
STYLE' PARK
STYLE PARK
NO-171,K.K.S ROAD,
Jaffna.
(SC-5959)

# எங்கிருந்து அழுத்தம் வந்தாலும் எம்மை அசைக்க முடியாது

## ஊடக அமைச்சர் சவால்

(கொழும்பு)

நாட்டின் அடையாளத்திற்கு பங்கம் ஏற்படாத வகையில் பல்வேறு செயற்றிட்டங்களை முன்னெடுத்தோம். எமக்கென தனித்துவமொன்று இருக்கின்றது. நாட்டின் அடையாளத்திற்கு பிரச்சினை ஏற்படின் மேற்குலகத்திலிருந்து அல்ல எங்கிருந்து அழுத்தம் வந்தாலும் அடிபணியோம் என்று அரசாங்கம் தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் நடைபெற்ற வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் அமைச்சரவையின் பதில் பேச்சாளரும் பிரதி அமைச்சருமான லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், கற்றறிந்த பாடங்களுக்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்றுவது தொடர்பில் அதியுயர் சபையில் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் மக்களுக்கு தெரியப்படுத்தியுள்ளார். அதில் தெரிவுக்குழுவே முதற்படியாகும்.

ஒவ்வொருவர் கூறுவதையும் எம்மால் அமுல்படுத்த முடியாது. நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்தும் நடைமுறை தொடர்பில் அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் தெளிவுபடுத்தியுள்ளார். அதன் அடிப்படையில் அடுத்தகட்ட நடவடிக்கைகள் நகர்த்தப்படும்.

நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையின் பரிந்துரைகளை அமுல்படுத்த முடியாது என்று எவ்விடத்திலேயும் கூறவில்லை. அதில் 160 பரிந்துரைகள் இருக்கின்றன. அவை தொடர்பில் அரசாங்கம் மதிப்பிட்டுகொண்டிருக்கின்றது.

மேற்குலகத்திலிருந்து அல்ல. எங்கிருந்து அழுத்தம் வந்தாலும் எமது நாட்டின் அடையாளத்திற்கு பிரச்சினை ஏற்படின் எந்தவொரு அழுத்தத்திற்கும் அடிபணியோம் என்றார். (அ-2)

## அம்பாள் நகரில் உபதபாலகம்

(ஒட்டுசுட்டான்)

கிளிநொச்சி அம்பாள் நகர் உப- தபாலகம் அண்மைக் காலமாக சொந்தக் கட்டடமின்றி தற்காலிகமாக ஒரு இல்லத்தில் இயங்கி வந்தது. தற்போது அதற்கென ஒரு சிறிய கட்டடம் இரணைமடு அருள்மிகு ஸ்ரீ கனகாம்பிகை அம்மன் ஆலயத்திற்கு முன்னால் அமைக்கப்பட்டு அதனூடாக மக்களுக்கு தனது சேவையை வழங்கி வருகின்றது.

இப்பகுதி வாழ் மக்களுக்கு தமது தபாலக சேவையினை இலகுவாக வழங்குவதற்கு தபாலகம் முன்வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2-258)

## ஆணைக்குழு முன் சாட்சியமளித்த அம்பாறை யுவதிக்கு விசாரணை?

(அம்பாறை)

நல்லிணக்க ஆணைக்குழு முன் அரச படைகளுக்கும் ஒட்டுக் குழுக்களுக்கும் எதிராக சாட்சியமளித்த தமிழ் மக்கள் சிலரை நாளை மறுதினம்4 ஆம் மாடிக்கு விசாரணைக்காக வருமாறு அரச புலனாய்வுப் பிரிவினர் பொலிஸாரின் ஊடாக நேற்று முன்தினம் அழைப்பு விடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

4 ஆம் மாடிக்கு விசாரணைக்காக செல்வதற்கு தங்களுக்கு அச்சமாக இருப்பதாகவும் இந்த விசாரணையை தங்களது சொந்த இடங்களில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்து தரும்படியும் குறித்த அழைப்பாணையைப் பெற்றுக் கொண்ட அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த யுவதி மனித உரிமை அமைப்பினூடாக குற்றப்புலனாய்வு பிரிவினருக்கு அறிவித்துள்ளதாக அறிய வருகின்றது. (அ-2)

## ஆணைக்குழுவின் அறிக்கை குறித்து அரசிடம் தெளிவான நிலை இல்லை

### தே.ப. தேசிய இயக்கம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

அரசாங்கம் கொள்கையின்றி செயற்பட்டு வருவதாக தேசப்பற்றுடைய தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாச அமரசேகர தெரிவித்துள்ளார்.

கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை பரிந்துரைகளை அமுல்படுத்துவதா அல்லது இல்லையா என்பதனை அரசாங்கம் தெளிவுபடுத்த வேண்டும்.

ஆணைக்குழு அறிக்கை தொடர்பில் அரசாங்கத்திடம் தெளிவான கொள்கை கிடையாது என அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி. போன்ற கட்சிகள் ஆணைக்குழு அறிக்கை தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ளன. எனினும் அரசாங்கம் தனது நிலைப்பாட்டை இதுவரையில் வெளியிடவில்லை. இந்நிலையில் கொழும்பில் இன்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் மக்கள் இது தொடர்பில் அரசாங்கத்திடம் கேள்வி எழுப்ப வேண்டுமென குணதாச தெரிவித்துள்ளார். (அ-2)

## கஞ்சா வைத்திருந்தவர்களுக்கு இருபதாயிரம் ரூபா அபராதம்

(யாழ்ப்பாணம்)

கஞ்சா வைத்திருந்த குற்றத்திற்காக இருவர் யாழ். நீதிமன்றில் அபராதமாக 20 ஆயிரம் செலுத்தினர்.

யாழ். நகர்ப்பகுதியில் குறித்த இருவரும் ஆயிரத்து 200 மில்லிகிராம் கஞ்சா பக்கெற்றுக்களை வைத்திருந்தனர் என குற்றஞ் சாட்டப்பட்டு குறித்த இருவரும் யாழ். பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு யாழ். நீதிமன்றில் நேற்று முன்தினம் ஆஜர்படுத்தப்பட்டனர்.

தென்பகுதிச் சிங்களர்வர்களாகிய இருவரையும் பொலிஸார் கைது செய்து யாழ். நீதிமன்றில் ஆஜர்படுத்தினர்.

இவர்களை விசாரணை செய்த யாழ். நீதவான் மா. கணேசராசா குறித்த இருவருக்கும் தலா 10 ஆயிரம் ரூபா அபராதம் வழங்கித் தீர்ப்பளித்தார். (அ-2-4)

## மலேசிய தமிழர்களுக்கு நாடு கடந்த அரசு நன்றி தெரிவிப்பு

(கொழும்பு)

ஐ.நா.மனித உரிமைச் சபையினை மையப்படுத்தி மலேசியத் தமிழர்கள் மேற்கொண்ட போராட்டங்களுக்கும் அரசியற் செயற்பாடுகளுக்கும் நாடு கடந்த அரசாங்கத்தின் பிரதமர் வி. உருத்திரகுமாரன் நன்றி தெரிவித்துள்ளார்.

மலேசியாவின் செம்பருத்தி ஊடகத்திற்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு நன்றி தெரிவித்தார்.

ஐ.நா.மனித உரிமை சபையில் சிறிலங்கா தொடர்பில் அமெரிக்காவினால் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணைக்கு மலேசியா ஆதரவளிக்காது என்ற நிலைப்பாட்டினை மலேசிய அதிகாரிகள் தெரிவித்திருந்த போது அதற்கு தங்களது கடுமையான எதிர்ப்பினை வெளிப்படுத்தி தொடர்ச்சியான போராட்டங்களையும் அரசியற் செயற்பாடுகளையும் மலேசியத் தமிழர்கள் முன்னெடுத்திருந்தனர்.

மலேசியத் தமிழர்கள் தனித்து தமிழர்களின் போராட்டமாக அல்லாமல் மலே இன மக்களையும் மலேசிய சீன இன மக்களையும் ஒன்றிணைத்து மேற்கொண்ட போராட்டத்தினை பாராட்டியதோடு இத்தகைய உணர்வுபூர்வமான செயற்பாடுகள் ஊடாகவே இலங்கைக்கு ஆதரவளிக்காது மலேசியா நடுநிலை வகித்தது என அவர் குறிப்பிட்டார். (அ-2)

## சாட்சிகளை பாதுகாக்கும் சட்டம் இயற்றப்படவேண்டும்

### சர்வதேச ஜூரிகள் சபை வலியுறுத்து

சாட்சிகளை பாதுகாக்கும் சட்டமானது சர்வதேச நியமங்களுக்கு அமைய இயற்றப்பட்ட வேண்டுமென சர்வதேச ஜூரிகள் சபை கோரிக்கை விடுத்துள்ளது.

சாட்சியங்களை பாதுகாக்கும் சட்டத்தை உருவாக்கும் அரசாங்கத்தின் திட்டம் பாராட்டுக்குரியது என சர்வதேச ஜூரிகள் சபையும் கொழும்பை மையமாக கொண்டு இயங்கி வரும் சட்ட மற்றும் நம்பிக்கை அமைப்பும் வரவேற்றுள்ளது.

சாட்சியங்களை பாதுகாக்கும் சட்டமானது சர்வதேச தர நியமங்களுக்கு நிகரான வகையில் அமைய வேண்டுமென சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.


குற்றச் செயல்களில் பாதிக்கப்பட்டோர் மற்றும் சாட்சியங்களை பாதுகாக்கும் சட்டம் தொடர்பான வரைவுத் திட்டத்தை அரசாங்கம் பகிரங்கப்படுத்தப்பட வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அவசர அவசரமாக இந்தச் சட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ-2)



பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்படும் திவிநெகும திட்டத்தின் மூன்றாம் கட்டம் நேற்று முன்தினம் நாடளாவிய ரீதியில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வு அலரி மாளிகையின் தோட்டத்தில் இடம் பெற்றது. பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ மரம்ஒன்றை நாட்டி அதற்குநீர் ஊற்றுவதைப் படத்தில் காணலாம்.

# அமைதியற்று கொந்தளிக்கும் நேரங்களில்



ஆன்மீகம் 28

இப்போது எப்படி தன்னம்பிக்கையைக் கொண்டுவருவது? எளிமையைக் கடைப்பிடிப்பதன் மூலமாக! நான் ஒரு உதாரணம் சொல்லுகிறேன். இங்கிலாந்திலிருந்து வந்த ஒரு தோட்டக்கலை நிபுணர் பெங்களூரிலுள்ள நம் ஆச்சிரமத்திற்கு வந்தார். அவர், "குருஜி நான் ஒரு பூந்தோட்டத்தை உருவாக்கப்போகிறேன்" என்று சொன்னார். அவர் பலவிதமான விதைகளையும் பூங்கன்றுகளையும் தொட்டிகளையும் அவற்றிற்குத் தேவையான உரத்தையும் கொண்டு வந்தார். நிறையப் பணம் செலவழித்தார். மிக ஆக்கபூர்வமாக உழைத்தார். ஆனால், 3-4 மாதங்களுக்குப் பிறகும் ஒன்றுகூட துளிர்க்க வில்லை! கனகபுராவிலிருந்து, ஒரு கிராமவாசி சில விதைக்ளை நிலத்தில் தூவினார். மிக அற்புதமான அழகான மலர்கள் மிக சீக்கிரமே பூத்தன. அந்த நிபுணர், அவருடைய அதீத ஆர்வத்தில்,. அவற்றிற்குத் தேவையாதைவிட அதிக உரம் போட்டிருந்தார்; அதிக தண்ணீர் ஊற்றியிருந்தார். ஆகவே, அந்தச் சுற்றுச் சூழலுக்கு அவை ஒத்துவராததால் செடிகள் வேரூன்றவேயில்லை; பலன் கிட்டவில்லை. ஆனால், நிபுணராகவோ, தோட்டக்காரராகவோகூட, இல்லாத அந்த எளிய கிராமவாசியால் மலர்களை மலரவைக்க முடிந்தது.


எளிமையான விடயங்களிலிருந்து, எளிமையான மனிதர்களிடமிருந்து, ஏன் குழந்தைகளிடமிருந்துகூட. எதையும் கற்றுக்கொள்ளத் தயாராக இரு. எதையும் கற்றுக்கொள்ளத் தயாரக இருக்கும்நிலை, உன்னில் படைப்புத்திறனையும், தன்னம்பிக்கையையும் கொண்டு வருகிறது.

அமைதியற்ற நேரங்களில் மனம் கொந்தளிக்கக்கூடாது. நேரம் கொந்தளிப்பானதாக இருக்கலாம்; ஆனால், மனம் கொந்தளிப்பாக இருந்தால், அது ஒரு பெரிய தடை- முட்டுக் கட்டைப்போலாகிவிடும். *பகவத் கீதை* சொல்வதைப்போல் இந்த உலகம் அநித்யா- (மாற்றங்கள் நிறைந்தது) இந்த உலகில், எல்லாமே மாறிக் கொண்டிருக்கின்றன. சந்தோசம் இங்கே, இந்தப் பொருளில், இந்த விடயத்தில், இந்த சூழலில் அல்லது இந்த நேரத்தில் இருப்பதாக நினைக்காதே, நீதான் ஆனந்தம்.

இதை அடைந்ததும்-மேலே- செல், செய், செயற்படு...

யோகம் என்றால், திறம்படச் செய்தல். எல்லாமே சரியாக நடந்து கொண்டிருந்தால், திறமைக்கு அவசியமில்லை. தேவை இருக்கிறதா? எப்போது உனக்கும் திறமை தேவை?

நீ ஒன்று எப்படி நடக்கவேண்டும் என்று நினைத்தாயோ அப்படி நடக்காதபோதும், நீ விரும்பும் வகையில் இல்லாதபோதும், உனக்கும் திறமை தேவை. நீ எப்படி இந்தத் திறமைகளை வளர்த்துக் கொள்ளலாம்? யோகம்தான் வழி. யோகம்- உடல், மனம், மூச்சு அனைத்தையும் ஒருங்கிணைக்கிறது.



பார், இப்போது நான் பேசிக் கொண்டிருக்கின்றேன். நான் சொல்பவை எல்லாம் எத்தனை பேருக்கு மனதில் பதிகிறது? உன் மனம் ஏற்கனவே எதிலாவது ஈடுபட்டிருந்தால், என் வார்த்தைகள் எல்லாவற்றையும் நீ கேட்கிறாய்- அவை அப்படி யே வெளியே போய்விடுகின்றன. ஒரு சிறு எண்ணம் மனதில் தேங்கி, தடையுண்டு போகிறது. நீங்கள் எல்லோரும் இங்கிருக்கிறீர்களா? எல்லோரும்? நான் பேசுவதை நிறுத்தும்போது, நீ விழிப்படைகிறாய். சரியா? இதை கவனித்தாயா? நம் மனதை நாம் ஆளுவது ஒரு திறமை. அதுதான் யோகம். சுயநிர்வகம்.

இது கார் ஓட்டுவதைப்போன்றது. நீ கார் ஓட்டும்போது, நீ விரும்பும் வழியில் போகவேண்டுமானால் மிகக் கவனமாக இருக்கவேண்டும்.

அமைதியற்ற நேரங்களை அனுகூலமாக்கிக் கணத்தில் செயற்படும் மனம் வேண்டும். இந்த அனுகூலம் என்ற வாரத்தைகூட சிறு கவனக்குறைவைக் காட்டுகிறது; புரிந்துகொள். அந்தச் சூழலைச் சாதகமாகப் பயன்படுத்துவது என்று சொல்லலாம். எனினும், குறுகியகால நன்மையால் எந்தப் பயனும் இல்லை. அது துன்பம். ஒன்றை நல்லது என்றும், கெட்டது என்றும் எதை வைத்துத் தீர்மானிக்கலாம்? நல்லது, நீண்டகால நன்மையும், குறுகியகால துன்பத்தையும் தரும். தீயது நீண்டகால துன்பத்தையும் குறுகியகால நன்மையையும் தரும். கொந்தளிக்கும் காலத்தை நீ சாதகமாக்கிக்கொள்ள நினைத்தால், குறுகியகாலத்திற்கு நன்மை பயப்பதைத் தேர்வு செய்கிறாயா?அல்லது நீண்ட காலத்துக்கு நன்மை தருவதை தேர்வு செய்கிறாயா? சாதகமாகத் தெரிவது பாதகமாகவும் இருக்கலாம்- நமது பார்வையில் தெளிவு மிகவும் அவசியம்.

கடைசியாக, முழுமையான நுண்ணிய உள்ளுணர்வு, (அந்தர்ஞானம்) உள்ளது. அந்த உள்ளுணர்வு இல்லையெனில் உன்னால் எதையும் சாதிக்க முடியாது. இந்த நுண்உள்ளுணர்வு பெறும் எண்ணங்களில்லை. உள் ஆழத்திலிருந்துவரும் சக்தி, உணர்ச்சி, புத்திசாலித்தனத்தின் கலவை, இசைவும், ஆராய்ந்துணரும் புத்தியும் தேவை.

பூஜ்ஜ ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர்

இந்த இசைவு ஏற்படும்போது நம்முடைய நுண்உள்ளுணர்வு ஆற்றல் அதிகரிக்கும். மேலும் நன்றாக புன்னகை செய்யலாம். நாம் மலர்ந்து புன்னகைக்கும்போது நம் உள்ளுணர்வு, ஆக்கும் திறன் காருண்யம், எல்லோரையும் தன்னுடையதாக எண்ணும் பாவம்போன்ற மிகச்சிறந்த நற்பண்புகள் எல்லாவற்றையும் நாம் அடைவோம்.

(தொடரும்)

# உங்கள் கைரேகை பலன்கள்

28


## ரேகைகளும் கிரகங்களும்

### சந்திராதிக்கம்

சந்திர ஆதிக்கமுள்ளவர் நெட்டையாக இருப்பார். தேகம் சதை பற்றியும் பாதம் மிகப்பெரிதாயும் அமைந்திருக்கும். பொதுவாய் பெருத்த சரீரமுடையவராயிருப்பார். இது தேக பலத்துக்கு ஆதரமன்று. இவருக்கு சித்தவிருத்தியெல்லாம் பிரவிர்த்தியற்ற பகற்கனவாய் ஆகாயக்கோட்டையாகவுமிருந்துவரும் பொதுவாய்ச் சோம்பல் அதிகரிக்கரித்திருக்கும் சுபாவ்முடையவர். கூட்டத்திலிருக்க இசைவாரன்றி தனித்திருக்க இஷ்ப்படுவார். கிட்டாத வஸ்துவுக்கே யோசிப்போராதலால், திருப்தியுண்டாவதில்லை. கனவு காண்பதில் வெகு பிரியம். எப்பொழுதும் கூர்ந்த புத்தியுடனிருப்பார். தன்னை உலகில் தனத்த மனிதராய் உணர்வர். சந்திராதிக்கருக்கு ஜலத்தில் விருப்பமதிகம். இவர்களுக்குத் தன்னம்பிக்கை குறைவாதலால், எதற்கும் தாம் பொருத்தமற்றவரென நினைத்திருப்பார். சந்திராதிக்க முள்ளோருக்கு ஆயுள் ரேகையில் காணப்படும் புள்ளி, கிராஸ், தீவு, நட்சத்திரக்குறி, இவைகளைக்கொண்டு நோய்களைக் கூசாமல் சொல்லலாம். சந்திராதிக்கருக்கு வாயுப்பிடிப்பு சம்பந்தமான நோய்களிலிருக்கும். இதை வலைக்குறி, கிராஸ் இவைகளால் அறியலாம்.

சந்திரமேட்டின் முற்பகுதியிலும் நோவுக்கான குறிகளைக் காணலாம். இந்தக்குறிகள் அந்தந்த முற்பகுதியின் அடியில் காணப்படும். மேற்பகுதி இறுதி வயிற்று நோயையும், நடுப்பகுதி இறுதி வாயு ரோகத்தையும் கடைப்பகுதி இறுதி முக்கியமாய் ஸ்திரீ (பெண்) களுக்குள்ள நோய்களையும் குறிக்கும்.

சந்திராதிக்கத்தினால் கெட்டவர்களுக்குத் துர்க்குணங்களுமுண்டு. நெட்டையாயிரார். கண்ணிலிருந்து நீர் வடியும். உடல் வெளுத்திருக்கும். எப்பொழுதும் வாயாடியாகவும் பொய்யராகவும் கற்பிதமாய்ப் பேசுபவராகவுமிருப்பார். மற்றவர்களை ஏமாற்றுவதைவிடத் தன்னை வஞ்சித்துக்கொள்வார். சந்திரமேடு அளவுக்கு மிஞ்சி உயரமாயிருந்தால், உன்மத்தராய் விடுவர். சந்திரமேடு உயர்ந்தும் உள்ளங்கை மிருதுவின்றிக் கொட்டியாயிருந்தும், அழுத்தமாகப் பதிந்து செங்குத்தான ரேகைகள் அல்லது நட்சத்திரக்குறி காணப்பட்டிருந்தாலும், சதாகாலமும் சிந்தை வசத்தராயும், இடைவிடாது யோசனையால் மனோராஜ்யத்துக்குட் பட்டிருப்பர். சந்திரமேடு எவ்வளவு உயர்ந்துள்ளதோ, அவ்வளவுக்கு மனோராஜ்யம் செய்பவராயும், மனோ சாந்தியற்றவராயும் காணப்படுவார். சந்திரமேடு மிக உயர்ந்துள்ளபோது உண்டாகும் சித்தப்பிரமை நடுக்கத்தினால் அல்லது நோயால் ஏற்பட்டதெனக் கருதலாகாது. அளவுக்குமிஞ்சி எல்லையற்ற சிந்தனைக்குள் ஆழந்துவிட்டதால், எவ்வித பரிகாரத்துக்கும் உட்படாது.




சக்தி

(தொடரும்)

# வடபகுதி வேளாண்மையும் அது சார்ந்த முதலீடுகளும்

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு...

18- X



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

முதலீடு செய்வது பற்றி பல கோணங்களில் பல மாதிரி அலசி ஆராய்ந்து கொண்டிருக்கின்றோம். வடபகுதி வேளாண்மை பற்றியும் அதில் இனி வருங்காலத்தில் செய்ய வேண்டிய முதலீடுகள் பற்றியும் கலந்துரையாடி வரும் இக்கட்டுரைத் தொடரில் இன்று மூலிகைகள் மற்றும் அவற்றில் செய்யக் கூடிய முதலீடுகள் பற்றியும் பார்க்கலாம்.

மூலிகைகள் மேல் செய்யக்கூடிய முதலீடுகள் என்றுமே ஆதாயத்தையும் சமூக முன்னேற்றத்தையும் இன்னும் சுகாதார மேம்பாட்டையும் தரக்கூடியன. எங்களூர் மூலிகைகள் எங்களது வளம். எமது கலை, கலாசார, சமய வாழ்வியலுக்கூடாக இன்னும் எமது பாரம்பரிய உணவுப் பழக்கத்துடன் ஒன்றிணைந்து இருப்பவை. இன்னும் ஒருபடி மேலே போய் எமது அடையாளத்துக்குரியவையும் கூட.

மூலிகைகள் அடிப்படையில் தாவரங்கள், இன்னும் பயிர் வகைகள். அவற்றை விருத்தி செய்தல், அறுவடைசெய்தல், அதிலுள்ள பீடை, நோய் பிரச்சினைகள், அவற்றை பதப்படுத்தல், சேமித்தல் இவையனைத்தும் வேளாண்மைக்குள் அடங்குவனவாகும். இன்னும் இத்தாவரங்களிலுள்ள மருத்துவ குணத்திற்கு காரணமான இரசாயன சேர்க்கைகளை பீடை, நோய் எதிர்ப்பாக பயன்படுத்த முடியும்.

எமது சுதேச வைத்தியத்தை கட்டிக் காப்பத்தில் மூலிகை வளத்தை பேணுவது அதிமுக்கியமானது. இவ் வளத்தை பேணுவதுடன் அதில் செய்யும் ஒவ்வொரு முதலீடும் இதனை மேலும் அபிவிருத்தி செய்ய உதவும்.

உள்ளூர் தேவைக்கு பயன்படுத்தியவை போக உலக சந்தைக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய பல மூலிகைகள் எங்களூரில் உண்டு. இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட 40 மூலிகை வகைகள் இப்போது நிறுத்தப்பட்டுள்ளன. அவற்றை எங்கள் நாட்டிலேயே உற்பத்தி செய்து பயன்படுத்தும் நல்ல முயற்சியாக அரசாங்கத்தினால் இவ்வாறான முன்நகர்வு எடுக்கப்பட்டுள்ளதை குறிப்பிடலாம்.

வட பகுதியில் மூலிகைகளை உற்பத்தி செய்வதில் மாகாண சுதேச வைத்திய துறையும் விவசாயத் திணைக்களமும் முனைப்புடன் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றன. இவற்றுடன் யாழ்ப்பாண பல்கலைக்கழக சித்த வைத்திய துறையுடன் விவசாய பீடமும் விஞ்ஞான பீடத்தின் தாவரவியல் மற்றும் இரசாயனவியல் துறைகளும் மருத்துவபீடத்தின் நோயியல் மற்றும் உயிரிரசாயனவியல் துறைகளும் இணைகின்றன.

எங்களூரில் இருக்கின்ற மூலிகைகளின் வகைகள் அவற்றை சரிவர இனங்காணுதலுடன் அழிந்துபோகும் மூலிகை வகைகளை பேணிப் பாதுகாத்தலும் அவுசியமாகும்.

யர்ழ்ப்பாணத்தில் திருநெல்வேலியிலுள்ள விவசாய பயிற்சி நிலையத்திலுள்ள மூலிகைத்தோட்டம் , அராலி , நவக்கிரி இன்னும் கைதடி அரசினர் சுதேச வைத்தியசாலையில் உள்ளவற்றுடன் வன்னியில் கல்மடுவில் அமைந்துள்ள மூலிகைத்தோட்டங்கள் அனைத்தும் வடமாகாண சுதேச வைத்திய துறையின் முழுமையான செயற்பாட்டிலும் விவ சாய திணைக்களத்தின் பங்களிப்புடனும் அமையப்பெற்றவை. இவற்றின் உருவாக்கத் திற்கும் மேன்மைக்கும் எழுதும் இக்கைகளும் இணைந்து கொண்டமை பெருமைக்குரியதாகின்றது.

உள்ளூர் சுதேச மருத்துவ தேவைக்காக மூலிகைகளின் தேவை அதிகமாயுள்ள நிலையில் இவற்றை பயிரிட்டு அறுவடை செய்வது இக்காலத்திற்கான நல்ல தொழில்வாய்ப்பு. பயிர்ச்செய்கையினூடு இவற்றை வளர்ப்பது எங்களூர் விவசாயிகளுக்கு வருவாயை ஈட்டித் தரும் வீட்டுத்தோட்டங்களிலும் பண்ணைகளிலும் இன்னும் வயல் நிலங்களிலும் இவ்வரிய மூலிகை வகைகளை வளத்த்து பயன் பல பெறலாம். பெண்களை தலைமைத்துவமாக கொண்ட குடும்பங்களுக்கு மூலிகை வகைகளை தெரிந்து அவரவர் வீடுகளிலேயே வளர்ப்பது வருவாயை தரக்கூடியது.

தங்களது கையிலே தங்கியிருக்கும் இச்சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுப்பது முதலீடு செய்யும் அனைத்து நல்லுள்ளங்களினதும் கடமையாகும். பல வகை மூலிகைகளை எங்களூரில் வளர்க்கலாம்.

அவற்றிற்கு சிறந்த கேள்வியுமுண்டு. சிறுகுறிஞ்சா, அமுக்கிரா, திப்பிலி, வல்லாரை, இஞ்சி, மஞ்சள் இப்படி இந்த வரிசை நீண்டு கொண்டே போகிறது. பொதுவாக வீடுகளில் வீட்டுத்தோட்டத்தில் வளர்க்கக்கூடிய இம் மூலிகைத்தரவாங்களுக்கான முதலீட்டை ஒரு வீட்டை மையப் படுத்தியோ அல்லது கிராமத்தை ஒருங்கிணைத்தோ செய்யலாம்.

உற்பத்தியாகும் மூலிகைத் தாரவங்களை கொள்வனவு செய்வதற்கான கட்டமைப்பை உருவாக்கினால் அவ்வூர் மக்களும் பயன்பெற்றதாக இருக்கும். அப்ரதேசமும் வளர்ச்சியுறும் இன்னும் முதலீடுசெய்தவருக்கான ஆதாயமும் கிடைக்கும்.

எங்களூர் சுதேச வைத்தியத்தை மேன்மையுறவைப்பததில் நிச்சயமாக இதில் செய்யும் முதலீடு முக்கிய பங்களிக்கும். இன்னும் எங்களுறவுகள் சுகாதாரமான வாழ்வியலுக்குள் இயற்கையுடனிணைந்த வாழ்வுக்கும் இட்டுச் செல்லும் சிறந்த கைங்கரியமாகும்.

அழிந்து போகும் பல அரிய மூலிகை வகைகளை பேணிப் பாதுகாப்பதிலும் முதலீடு செய்பவர்கள் முன்வரலாம். எங்களூர் மூலிகைகளை இன்னும் மூலிகைத்தோட்டங்களைமைத்து பாதுகாப்பது அவசியம்.

தவறின் வெளியூரவர் தமது என முத்திரையும் குத்திவிடுவர். இப்பிராந்தியத்தின் சொத்துக்களான தாவரவகைகள் விலங்கினங்கள், உயிரிகள் அனைத்துமே பாதுகாக்கப்பட வேண்டும். இதற்காக அவற்றுக்கான தாவரவியல் பூங்காக்கள், சரணாலங்கள், மூலிகைத்தோட்டங்கள், நுண்ணங்கிகளுலகம், வண்ணத்துப்பூச்சி பூங்கா என அனைத்துமே அறிவியல் கண்ணோட்டத்துடன் நிறுவப்பட வேண்டும்.

என்னினிய உறவுகளே வாருங்கள். அனைத்து கைகளும் ஒன்றி ணைந்தால் இது சாத்தியமே. இங்கெல்லாம் செய்யப்படும் முதலீடுகள் அனைத்தும் வடபகுதியின் அபிவிருத்திக்கும் மக்களின் நல்வாழ்வுக்கும் நல்லுறுதியாக இருக்கும்.

வெறுமனே ஆதாயம் தேடும் முதலீடு சமூக நல விருத்திக்கு பங்களிக் காது. எமது பிரதேச அபிவிருத்தியின் நோக்கம் அங்கே நிறைவு செய்யப்படவும் வேண்டும். முயற்சியுடையார் இகழ்ச்சி அடையார். (வளரும்)

# ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுலாக்க வேண்டும் என்பதே அரசாங்கத்தின் நோக்கம்

(கொழும்பு)

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு அறிக்கை பரிந்துரைகள் அமுல்படுத்தப்படும் என அரசாங்கம் உறுதியளித்துள்ளது. ஆணைக்குழு அறிக்கை பரிந்துரைகளை அமுல்படுத்துவதில் எவ்விதமான எதிர்ப்புகளும் கிடையாது என அரசாங்கம் நேற்று முன்தினம் பாராளுமன்றில் அறிவித்துள்ளது.

ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்த வேண்டும் என்பதே அரசாங்கத்தின் நோக்கமாக அமைந்துள்ளது என ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றப்பட்டமை தொடர்பில் நடைபெற்ற விவாதத்தில் கலந்து கொண்ட அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் நோக்கம் குறித்து சந்தேகம் நிலவி வருவதாக குறிப்பிட்டுள்ளார். மனித உரிமை பேரவை தீர்மானத்தில் வேறும் உள்நோக்கங்கள் காணப்பட்டிருக்கலாம் என சுட்டிக்காட்டியுள்ளார்,

உண்மையைக் கண்டிறியும் ஆணைக்குழுவின் பரிந்துரைகளை முழுமையாக அமுல்படுத்த வேண்டும் என ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது . எனினும் ஆணைக்குழுவின் பரிந்துரைகள் அனைத்தையும் அமுல்படுத்த முடியாது என அரசாங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

சில விடயங்களில் ஆணைக்குழு தனது எல்லையை மீறிச் செயற்பட்டுள்ளதாக அரசாங்கம் குறிப்பிட்டுள்ளது.

இலங்கையின் அரசியல் தலைவர்கள் மற்றும் இராணுவத் தலைவர்களுக்கு எதிராக யுத்தக் குற்றச்சாட்டுக்களை முன்வைத்து நடவடிக்கை எடுக்கும் ஆரம்பகட்ட நடவடிக்கையாகவே ஐக்கிய நாடு கள் மனித உரிமைப் பேரவை அமர் வுத் தீர்மானத்தை அரசாங்கம் நோக் குவதாக அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# தெற்காசிய ஆசிரிய அபிவிருத்தி நிலையம் இலங்கையில்

## அமைச்சரவை அங்கீகாரம்

தெற்காசிய ஆசிரிய அபிவிருத்தி நிலையத்தை இலங்கையில் நிறுவ அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக அமைச்சரவை பேச்சாளரும் தகவல் ஊடகத்துறை பதில் அமைச்சருமான லஸ்மன் யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளர்.கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன சமர்ப்பித்த யோசனைக்கே அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

194 நாடுகள் அங்கத்துவம் வகிக்கும் யுனெஸ்கோ நிறுவனம் உலகளாவிய ரீதியில் கல்வி அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

இந்நிலையில் தெற்காசிய ஆசிரிய அபிவிருத்தி நிலையத்தை இலங்கையில் நிறுவுமாறு கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன யுனெஸ்கோ நிறுவனத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளர். இதில் அதிகூடிய வாக்குகளின் அடிப்படையிலேயே இலங்கையில் நிறுவ இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது என்று அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த ஆசிரிய அபிவிருத்தி நிலையத்தை இலங்கையில் நிறுவுவதன் மூலம் ஆசிரியர் பயிற்சி, ஆசிரிய விரிவுரையாளர்கள், ஆசிரிய கல்வி தொழில்நுட்ப அபிவிருத்தி சம்பந்தமாக ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு இலங்கைக்கும் பலன் கிடைப்பதனாலேயே அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.(அ-2)

# இரண்டாம் உலக யுத்தம்

## ஒரு மீள்பார்வை ௯௩

### சோவியத்-ஜேர்மனிய போர்முனையின் பக்குவாட்டுப் பகுதிகளில் பாசிச ஜேர்மனியத் துருப்புகளின் முறியடிப்பு

லெனின்கிராட்-நோவ்கரத் நடவடிக்கை *(1944 ஜனவரி14 -மார்ச்1)*

கூர்ஸ்க் சமரிலும் தினேப்பர் ஆற்றிற்காக நடந்த சமரிலும் பாசிச ஜேர்மனியத் துருப்புகள் முறியடிக்கப்பட்டதன் பயனாய் 1944 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் எதிரியின் வடக்கு படைத்தொகுதியை முறியடித்து, லெனின்கிராட் நகரத்தின் முற்றுகையை முற்றிலுமாக அகற்றி லெனின்கிராட் பிராந்தியத்தை ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து விடுவிக்கும் நோக்கோடு லெனின்கிராட் மற்றும் நோவ்கரத் அருகே தாக்குதலைத் தொடுப்பதற்கு அனுகூலமான சூழ்நிலைகள் உருவாகின.


உயர்மட்ட பிரதானப் படைத் தலைமையகம் இந்நடவடிக்கையில் லெனின்கிராட் சேனையின் (தளபதி ஜெனரல் கோவரவ்) 42-வது, 47-வது படைகள், 2-வது முக்கிய தாக்குதல் படை, வோல்கவ் சேனையின் (தளபதி ஜெனரல் மெரெட்ஸ்கோவ்) 1-வது முக்கிய தாக்குதல் படை, 22-வது படை, செம்பதாகைப் பட்டம் பெற்ற பால்டிக் கப்பற்படை, லதோகா மற்றும் ஒனீகா இராணுவ (ப்ளீட்டுகள்) கடற்படை, தொலைதூர விமானப்படை ஆகியவற்றையும் கொரில்லாப்படை வீரர்களையும் ஈடுபடுத்தியது. சோவியத் தரப்பில் 12 இலட்சத்து 52 ஆயிரம் போர் வீரர்கள் இருந்தனர். 20 ஆயிரத்து 183 சாதரண மற்றும் மார்டர் பீரங்கி அமைப்புகளும் 1386 போர் விமானங்களும் இருந்தன.

பால்டிக் பிரதேசத்தில் கைதான ஜேர்மனியத்துருப்புகள்



அரை முற்றுகை நிலையிலிருந்த லெனின்கிராட், நோவ்க்ரத் பிரதேசங்களிலிருந்து லெனின்கிராட் மற்றும் வோல்ஹவ் சேனைகளின் இரண்டு பலம் மிக்க படைத்திரட்டுக்களைக் கொண்டு ஒரே படைத் திரட்டுக்களை முறியடிப்பது, பின்பு கின்கிசேப், லூகா திசைகளில் தாக்குதலைத் தொடர்ந்து இப்படையின் முக்கியச் சக்திகளை முற்றிலுமாகத் தோற்கடித்து லூகா ஆற்றின் எல்லைகளை அடைவது என்பதுதான் உயர்மட்ட பிரதான படைத் தலைமையின் திட்டமாக இருந்தது. மேற்கொண்டு இரண்டாவது பால்டிக் சேனையுடன் சேர்ந்த நார்வா, ப்ஸ்கோவ் திசைகளில் முன்னேறும்படியும் எதிரியின் 16-வது படையைத் தோற்கடித்து லெனின்கிராட் பிராந்தியத்திலிருந்து முற்றிலுமாக விரட்டியடிக்குமாறும் இச்சேனைகளின் துருப்புகளுக்குக் கட்டளையிடப்பட்டது.

பாசிச ஜேர்மனியத் துருப்பகளின் தற்காப்பு மிகப்பலமானதாக இருந்தது. கண்ணிவெடிகளாலும் முள்வேலிகளாலும் முடிமறைக்கப்பட்ட கான்கிரீட் மற்றும் மரத்தடுப்புகளால் ஆன பீரங்கி சுடுமிடங்கள் இதில் அடங்கியிருந்தன. பெரிய விட்டமுடைய பீரங்கிகளும் பாசிஸ்டுகளிடம் ஏராளமாக இருந்தன, இவற்றைக்கொண்டு தான் அவர்கள் லெனின்கிராட் நகரத்தைச் சுட்டனர். வடக்கு படைத் தொகுதியில் (தளபதி பீலட்மார்ஷல் ஜெனரல் கூஸ்லர், ஜனவரி இறுதியிலிருந்து கர்னல் ஜெனரல் லின்டெமன்) 7இலட்சத்து 41 ஆயிரம் ஆட்கள் இருந்தனர், 10 ஆயிரத்து 70 சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகளும் 385 டாங்கிகள், திடீர் தாக்குதல் பீரங்கிகளும் 370 விமானங்களும் இருந்தன. சோவியத் துருப்புகள் ஆட்சக்தியில் 1.7 மடங்கும் பீரங்கிகளில் 2 மடங்கும் டாங்கிகள், தானியங்கி பீரங்கி அமைப்புக்களில் 4.1 மடங்கும் போர் விமானங்களில் 3.7 மடங்கும் எதிரியை விஞ்சிநின்றன.



சோவியத் படையினரின் பி.எம்.13 மல்ரிபில் றொக்கெற் லோஞ்சர்

## தீர்மானகரமான வெற்றிகளின் ஆண்டு

நடவடிக்கைக்கான தயாரிப்புகளின் போது சோவியத் படைத் தலைமை சேனைகளின் உள்ளேயே படைகளை மாற்றியமைத்தது. 1943 நவம்பர் முதல் 1944 ஜனவரி வரை செம்பதாகை பட்டம்பெற்ற பால்டிக் கப்பற்படை 2-வது முக்கியத் தாக்குதல் படையையும் ஏராளமான ஆயுத, இராணுவத் தளவாடங்களையும் ஒரனியென்பாவும் தாக்குமுனைக்கு கொண்டுவந்தது.

இராணுவ நடவடிக்கைகளின் போக்கிற்கேற்ப லெனின்கிராட்- நோவ்கரத் நடவடிக்கையை 3 கட்டங்களாகப் பிரிக்கலாம். முதல் கட்டத்தில் (ஜனவரி 14-30) லெனின்கிராட் சேனையின் துருப்புகள் பால்டிக் கடற்படையின் உதவியோடு எதிரியின் நீண்டகால தற்காப்பைப் பிளந்து, எதிரியின் கிராஸ்னசேல்ஸ்னக்- ரோப்சினோ படைத் திரட்டை முறியடித்து, ஜனவரி 30 இறுதியில் லூகா ஆற்றிலிருந்த முன்கூட்டியே தயாரிக்கப்பட்ட எதிரியின் தற்காப்பு எல்லையை அடைந்தன. இதே கட்டத்தில் வோல்ஹவ் சேனையின் துருப்புகள் எதிரியின் நோவ்கரத் படைத் திரட்டை முறியடித்து, நோவ்கரத் நகரை கைப்பற்றி லூகாவை நோக்கி தாக்குதலைத் தொடங்கின. இரு சேனைகளின் முயற்சிகளால் லெனின்கிராட் நகரத்தை மாஸ்கோவுடன் இணைக்கும் இருப்புப்பாதை எதிரியிடமிருந்து விடுவிக்கப் பட்டது. 2-வது பால்டிக் சேனை தனது தீவிர நடவடிக்கைகளால் எதிரியின் 16- வது படையைக் கட்டிப்போட்டு இதை லெனின்கிராட், நோவ்கரத் அருகே அனுப்ப முடியாதபடி செய்தது.

நடவடிக்கையின் இரண்டாவது கட்டத்தில் (ஜனவரி 31-பெப்ரவரி15) பிரதானத் தாக்குதலை லூகா நகரைச் சுற்றிவளைத்து தென்கிழக்கிலிருந்து தொடுத்தது. பெப்ரவரி 16 வாக்கில் சோவியத் துருப்புகள் லூகா எதிர்ப்பு மையத்தைக் கைபற்றி, எஸ்தோனியக் குடியரசினுள் நுழைந்து ப்ஸ்கோவை நோக்கி முன்னேறின.

மூன்றாவது கட்டத்தில் (பெப்ரவரி 16- மார்ச்1) லெனின்கிராட் சேனையின் துருப்புகள் 2-வது பால்டிக் சேனையுடன் ( தாக்குதல் மண்டலம் குறுகியதை அடுத்து வோல்ஹவ் சேனை பெப்ரவரி 15-ஆம் திகதி கலைக்கப்பட்டு இதன் துருப்புகள் லெனின் கிராட் சேனைக்கும் 2-வது பால்டிக் சேனைக்கும் அளிக்கப்பட்டது) நெருக்கமாகத் தொடர்பு கொண்டு, தாக்குதலைத் தொடர்ந்து 18-வது படையையும் 16-வது படையின் கணிசமான பகுதியையும் முறியடிப்பதை முடித்து பலப்படுத்தப்பட்ட ப்ஸ்கோவ்-ஒஸ்த்ரோவ் பிரதேசத்தையும் இதன்

ஜேர்மனியர்களின் விமான எதிர்ப்புப் பீரங்கிநிலை



லெனின்கிராட் சேனை தன் முயற்சிகளை கின்கிசேப் திசையில் மேற்கு நோக்கி செலுத்தியது, வேறொரு பகுதியைக்கொண்டு லூகாவைத் தாக்கியது. வோல்ஹவ் சேனைதனது தெற்கேயிருந்த நோவரிஷேவ் மற்றும் புஸ்தோஸ்கா எல்லைகளையும் அடைந்தன. எதிரி லெனின்கிராடிலி ருந்து 220- 280 கி.மீ. தூரம் அப்பால் தள்ளப்பட்டான்.

(தொடரும்)

# வவுனியா தெற்கு வலயத்தின் தமிழ்த்தின போட்டி முடிவுகள்

(நேற்றைய தொடர்ச்சி....)

**தனி நடனம்**

**பிரிவு 4**

இ. அபராஜிதா (வவு/ சைவப்பிரகாச மகளிர் கல்லூரி), வ.கம்சினி (வவு/ தமிழ் மத்திய ம.வி), இ.மதுஷாலி (வவு/இறம்பைக்குளம் மகளிர் ம.வி)

**பிரிவு-5**

கி.துவாரகா (வவு/ தமிழ் மத்திய ம.வி), மா. மாதுரி (வவு/ சைவப்பிரகாச மகளிர் கல்லூரி), த.அபினா (வவு/இறம்பைக்குளம் மகளிர் ம.வி)

**குழு இசை**

**பிரிவு-1**

வவு/ பண்டாரிக்குளம் விபுலாநந்தாக் கல்லூரி, வவு/இறம்பைக்குளம் மகளிர் ம.வி, வவு/ இலங்கை திருச்சபை தமிழ் ம.வி

**பிரிவு-2**

வவு/இறம்பைக்குளம் மகளிர் ம.வி, வவு/ தமிழ் மத்திய ம.வி, வவு/ சைவப்பிரகாச மகளிர் கல்லூரி

**குழு நடனம்**

**பிரிவு-1**

வவு/இறம்பைக்குளம் மகளிர் ம.வி, வவு/ நெளுக்குளம் கலைமகள் ம.வி, வவு/ இந்துக்கல்லூரி

**நாட்டிய நாடகம்**

**திறந்தபோட்டி**

வவு/ வவுனியா தமிழ் மத்திய ம.வி, வவு/ பண்டாரிக்குளம் விபுலாநந்தாக்கல்லூரி

**நாட்டார் பாடல்**

**திறந்தபோட்டி**

வவு/ வவுனியா தமிழ் மத்திய ம.வி, வவு/ பண்டாரிக்குளம் விபுலாநந்தாக்கல்லூரி, வவு/ வீரபுரம் மணிவாசகர் வித்தி,

**மேடை நாடகம்**

**திறந்தபோட்டி**

வவு/வவுனியாதமிழ்மத்தியம.வி,வவு/சைவப்பிரகாசமகளிர் கல்லூரி, வவு/பூந் தோட்டம் ம.வி

**வில்லுப்பாட்டு**

**திறந்தபோட்டி**

வவு/ சைவப்பிரகாச மகளிர் கல்லூரி, வவு/ வவுனியா தமிழ் மத்திய ம.வி,வவு/ அண்ணாநகர் பரமேஸ்வரா வித்தி

**விவாதம்**

**திறந்தபோட்டி**

வவு/ வவுனியா தமிழ் மத்திய ம.வி, வவு/ பண்டாரிக்குளம் விபுலாநந்தாக் கல்லூரி, வவு/ சைவப்பிரகாச மகளிர் கல்லூரி

**தமிழ் அறிவு வினா விடைப்பேட்டி**

**திறந்தபோட்டி**

வவு/ பண்டாரிக்குளம் விபுலாநந்தாக் கல்லூரி, வவு/ இலங்கை திருச்சபை தமிழ் ம.வி, வவு/ பெரிய கோமரசங்குளம் ம.வி

**முஸ்லிம் நிகழ்ச்சி**

**திறந்தபோட்டி**

வவு/ வவுனியா முஸ்லிம் ம.வி, வவு/ வவுனியா தமிழ் மத்திய ம.வி

**சிங்கள மாணவர்களுக்கான தமிழ்பேச்சுப்போட்டி**

**பிரிவு-1**

செவ்வந்தி காஞ்சனா (வவு/ மடுகந்த ம.வி)

**சிங்கள மாணவர்களுக்கான தமிழ் உறுப்பெழுத்துப்போட்டி**

**பிரிவு-2**

நிர்மலா வக்சலா (வவு/அக்ரபோதி ம.வி), சுருசி பாக்கியா (வவு/ மடுகந்த ம.வி)

**பிரிவு-1**

கவிசா சந்தகெரணி(வவு/ மடுகந்த ம.வி), சாவிகா மதுவந்தி (வவு/அக்ரபோதி ம.வி), கௌசல்யா (வவு/ காமினி ம.வி)

**இசையும் அசைவும்**

தி.சுஜானி (வவு/இறம்பைக்குளம் மகளிர் ம.வி), கே. லிகிர்தா (வவு/ பூவரசங்குளம் ம.வி), செ. கேனுகா ( வவு/ தாண்டிக்குளம் பிறமண்டு வித்தி,

**தனி இசை**

**பிரிவு-2**

ச. பவதாரணி (வவு/ இலங்கை திருச்சபை தமிழ்.ம.வி), ஜெ. கேதாண்யா (வவு/இறம்பைக்குளம் மகளிர் ம.வி) , செ. சன்சியா (வவு/ மூன்று முறிப்பு அ.த.க. பாடசாலை)

**பிரிவு-3**

ர.ரதுசன் (வவு/ கந்தபுரம் வாணி வித்தி, ம.மயூராங்கி (வவு/ சைவப்பிரகாச மகளிர் கல்லூரி), க.தாட்சாயினி (வவு/இறம்பைக் குளம் மகளிர் ம.வி)

**பிரிவு 4**

ஞா. கிருஷிகா(வவு/ சைவப்பிரகாச மகளிர் கல்லூரி),ஜெ.சதுஜன்(வவு/ தமிழ் மத்திய ம.வி), கு.லக்சன் (வவு/ இந்துக்கல்லூரி)

**தனி இசை**

பி.டினூசா (வவு/இறம்பைக்குளம் மகளிர் ம.வி), கு.மிதுனா (வவு/கந்தபுரம் வாணி வித்தி), கு.காயத்திரி (வவு/நெளுக்குளம் கலைமகள் ம.வி)

**தனிநடனம்**

**பிரிவு 2**

ர.கர்ணிகா (வ்வு/இறம்பைக்குளம் மகளிர் ம.வி) , இ.சுகந்திகா (வவு/நெளுக்குளம் கலைமகள் ம.வி), க.ஜினுத்திரா (வவு/பூந் தோட்டம் ம.வி)

**பிரிவு-3**

அ.நிவேதிகா (வவு/ தமிழ் மத்திய ம.வி), ஸ்ரீவித்தகி (வவு/இறம்பைக்குளம் மகளிர் ம.வி), ச.ஸ்ரீசிந்துஜா (வவு/ சைவப்பிரகாச மகளிர் கல்லூரி) (முற்றும்)

## ஆன்மீகத் தேடலை வழிப்படுத்தும் தவக்காலம்

# தியாகம் நிறைந்த ஓர் அர்ப்பணமே இயேசுவின் சிலுவைப்பலி



**அருட் சகோதரர் றமேஸ் அ.ம.தி**

மனிதரின் உடல், மனம், ஆன்மா, உணர்வுகள் அனைத்தையும் விட உயர்ந்தது அவர்களது உயிராற்றல். வாழவேண்டும், செயலாற்றவேண்டும், சாதிக்க வேண்டும் என்னும் தாகம், பேரார்வம் ஒவ்வொருவருடைய ஆளுமையின் ஆழத்திலும் புதைந்து கிடக்கிறது. உலக வரலரற்றில் மனித வாழ்வை ஆழமாக ஆராய்கின்ற போது, இறைவனோடு, சமூகத்தோடு, குழுவோடு, தனிமனிதனோடு,இயற்கையோடு உள்ள உறவுகளை வளர்க்க வேண்டும் என்ற உணர்வு கொண்டவர்களை காணமுடிகிறது. இந்த உறவை வலுப்படுத்துவதற்காக சிலர் உள்ளத்தைக் கொடுப்பார்கள். சிலர் உள்ளத்திலிருந்து கொடுப்பார்கள். மேலாக உலகம் வாழ்வு பெற தனது உடலையும் இரத்தத்தையும் முழுமையாக கொடுத்தவரின் தியாக அன்பே அனைத்திலும் உயர்ந்தது.இதைத்தான் நம் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் சிலுவை மரணம் எமக்கு உணர்த்துகிறது.

இயேசு சிலுவையில் அறையப்பட்ட ஒரு குற்றவாளியைப்போல இறந்தார். சிலர் அவரை அரசியல் குற்றவாளியாக, சமய கொள்கைகளை மறுத்த துரோகியாக பார்த்தார்கள். நாட்டிற்கும் சமயத்திற்கும் எதிராக செயற்படுவோர் சரியான தண்டனை பெற வேண்டும் எனக் கருதியோர் இயேசுவின் சாவு பற்றி அதிகம் கவலைப்பட்டிருக்கமாட்டார்கள். ஆனால் இயேசுவின் வரலாற்றில் மனித ஆட்கள் மட்டுமே செயற்படவில்லை. இயேசுவின் வரலாறு கடவுள் இவ்வுலகில் மக்களோடு செய்து கொண்ட அன்பு உடன்படிக்கையின் தொடர் வரலாறு. எனவே ,கடவுளிடமிருந்து வந்த இயேசு தம் சொந்த விருப்பப்படி செயற்படாமல் தம்மை அனுப்பிய தந்தையின் விருப்பப்படியே செயற்பட்டார். தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றிய இயேசு தம் சொல், செயல், பணி வழியாக மக்களுக்கு நன்மை செய்து கொண்டே போனார். அவருடைய அன்பையும் இரக்கத்தையும் அனுபவித்து உணர்ந்த மனிதர் பலர் இருந்தனர். இயேசு யார் என்பதை அவர்கள் படிப்படியாக அறிந்து கொண்டார்கள். இயேசு ஆற்றிய பணியின் இறுதிக்கட்டம் அவருடைய சிலுவைச் சாவு ஆகும்.

சிலுவைச் சாவு இயேசு பெற்ற புதுவாழ்வுக்கு வழியாக அமைந்தது.எனவே, சிலுவையில் உயிர் துறந்த இயேசு ஏதோ ஒன்றை இழந்தவர்போல அல்லாமல் நமக்குத் தம்மையே மனமுவந்து கையளித்தார் என்பதே பொருத்தம்.தம்மை நமக்கு கையளித்த இயேசு தம் ஆவியை ஒப்படைத்தார். ஆவி என்பது உயிர் மூச்சைக் குறிக்கும். நாம் மூச்சுவிடும் போது உயிரோடு இருக்கிறோம் என்பது பொருள். மூச்சு நின்று போகும் வேளையில் உயிரும் நம்மை விட்டுப்பிரிந்து விடுகிறது. எனவே, இயேசு நமக்கு வழங்குகின்ற ஆவி அவர் நமக்கு தருகின்ற உயிரை குறிக்கின்றது. இயேசுவின் ஆவியைப் பெற்ற நாம் உயிர் வாழ்கிறோம். நமக்குப் புது வாழ்வு வழங்கப்பட்டது. நாம் பெற்ற வாழ்வை பிறரோடு பகிர்வது நம் பொறுப்பாகும். எனவே நாமும் இயேசுவைப் பின்பற்ற முயற்சி செய்வோம்.

# சிலைகளாய் மாறியபோதும் தாக்குதல்கள் தொடர்கின்றன



மட்டக்களப்பு நகரிலுள்ள மகாத்மா காந்தி மற்றும் சாரணர் இயக்கத்தின் ஸ்தாபகர் பேர்டன் பவல் ஆகியோரின் உருவச்சிலைகள் நேற்று அதிகாலை இனந் தெரியாதோரினால் உடைத்து சேதமாக்கப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு பொலிஸார் தெரிவித்தனர். மட்டக்களப்பு நகரில் மிக நீண்ட காலமாக இருந்த மேற்படி சிலைகள் ஒவ்வொன்றும் 20 மீற்றருக்குட்பட்டு அமையப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, மட்டக்களப்பு ஆனைப்பந்தி வித்தியாலயத்திலுள்ள சுவாமி விபுலானந்தர் மற்றும் மட்டக்களப்பு கல்வி வலயத்திலுள்ள புலவர் மணி பெரியதம்பிப்பிள்ளை ஆகியோரின் உருவச்சிலைகளும் இனந் தெரியாதோரினால் சேதமாக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை மட்டக்களப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, மட்டக்களப்பு - ஆரையம்பதி பிரதேசத்தின் பிரதான வீதியில் காணப்பட்ட சுவாமி விவேகானந்தரின் உருவச்சிலை கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் சேதப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# கஞ்சா கடத்திய இராணுவ கோப்ரல்

வடக்கிற்கு கஞ்சா போதைப்பொருள் கடத்திய இராணுவ கோப்ரல் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.குறித்த இராணுவ கோப்ரலிற்கு கஞ்சா விநியோகம் செய்த செவனகல பிரசேதத்தை சேர்ந்த இரண்டு இளைஞர்களையும் பொலிஸார் கைது செய்துள்னனர்.

மிகவும் நுட்பமான முறையில் கஞ்சா போதைப்பொருள் கடத்தப்பட்டுள்ளது. கல்கிரியாகம பொலிஸாரினால் குறித்த சந்தே நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். குறித்த இராணுவ உத்தியோகத்தர் கடந்த நான்கு ஆண்டுகளாக பெருமளவில் கஞ்சாப் போதைப்பொருளை கடத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (அ-2)

# விபத்தில் பலி

(கனகபுரம்)


வீதியில் நடந்து சென்று கொண்டிருந்த நபர் ஒருவரை பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் மோதிய விபத்தில் படுகாயமடைந்த நபர் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டபோது உயிரிழந்துள்ளார்.

இச் சம்பவம் நேற்று வியாழக்கிழமை காலை 8.10 மணிக்கு இடம்பெற்றுள்ளது. சம்பவத்தில் கல்மடு நகர் இராமநாதபுரத்தைச் சேர்ந்த சங்கரப்பிள்ளை சடாசிவம் (வயது 70) என்ற முதியவரே உயிரிழந்தவராவார். (அ-3-259)




# இடையனுக்கு அடித்த யோகம்

## அம்புலி மாமா கதைகள்



முன்னொரு காலத்தில் கடவுள் பக்தி மிகுந்த ஓர் அந்தணர் இருந்தார். பல புராணங்களைக் கற்றுத் தேர்ந்து கடவுளின் பெருமைகளை நன்கறிந்த அவர் மீது கிராமத்து மக்கள் மிக்க மதிப்பும் மரியாதையும் வைத்து இருந்தனர்.

ஒவ்வொரு செவ்வாயும் வெள்ளியும் அவர் உபந்நியாசங்கள் நிகழ்த்துவதுண்டு. அப்போது கிராமத்து மக்கள் திரளாக வந்து அவருடைய பிரசங்கத்தைக் கேட்டு உள்ளம் சிலிர்ப்பார்கள். தன் உபந்நியாசங்களைக் கேட்க வருபவர்களிடம் அவர் தட்சிணை எதுவும் கேட்பதில்லை.

ஆயினும் மக்கள் தாங்களாகவே அங்குள்ள ஒரு வெள்ளித்தட்டில் சில்லறைகளைப் போட்டுவிட்டுச் செல்வார்கள். இவ்வாறு பல ஆண்டுகளாகச் சேர்ந்த சில்லறைகள் கடைசியில் பெரிய தொகையாக மாறின.

தன்னிடம் தான் கேட்காமலே நிறையப் பணம் சேர்ந்து விட்டதைப் பார்த்த அந்தணர் அதைப் பயன்படுத்தி ஹரித்வார் சென்று வர விரும்பினார்.

ஒரு நாள் அவர் தன்னுடைய உபந்நியாசத்தை முடித்து விட்டு கூட்டத்தில் இருந்தவர்களை நோக்கி நீங்கள் ஹரித்வார் எனும் புனிதத் தலத்தைப் பற்றிக் கேள்



விப்பட்டு இருக்கிறீர்களா என்று தெரியாது. இந்துக்களாகிய நமக்கு அது மிக மிகப் புண்ணிய தலம். ஏனெனில் அங்கு மகா புனிதமான கங்கை நதி பாய் கிறது. நான் அங்கு சென்று கங்கையில் புனித நீராடிவிட்டு வரலாம் என்று விரும்புகிறேன்.

அங்கிருந்து திரும்பி வந்த பின் மீண்டும் நாம் சந்திப்போம் என்றார்.

பெரும்பாலோர் அவரை வணங்கி விடைகொடுத்து அனுப்பினர். மகா ஏழையும் படிப்பற்றவனுமான ஓர் இளைஞன் மட்டும் அவரை விட்டு நீங்காமல் நின்று கொண்டேயிருந்தான். அவனை அடையாளங்கண்டு கொண்ட அந்தணர் மாதவா? என்னப்பா? என்ன வேண்டும் உனக்கு? என்று கேட்டார்.

சுவாமி! ஹரித்வாருக்கு நானும் வரலாமா? என்று அவன் ஆவலுடன் கேட்டான். ஒரு சாதாரண ஆட்டிடையன் ஹரித்வார் வர ஆசைப்படுவது குறித்து அவருக்கு வியப்பு உண்டாயிற்று.

ஹரித்வார் வெகு தூரத்தில் உள்ளது. போய்த் திரும்ப பல நாட்களாகும். அதுவரை உன் ஆடுகளை யார் மேய்ப்பார்கள்? என்று கேட்டார் அவர். அது ஒன்றும் பிரச்சினை இல்லை என்றான். அப்படியானால் சரி! நாளைக்கே கிளம்பலாம் வா! என்றார் அந்தணர்.

ஆட்டிடையன் மாதவனைக் கூட்டிக் கொண்டு செல்லும் வழிஎல்லாம் ஹரித்வாரைப் பற்றியும் கங்கையில் நீராடி னால் கிடைக்கப் போகும் புண்ணியங்களை பற்றியும் விபரித்துக் கொண்டே சென்றார். அவர் சொன்னதை எல்லாம் மௌனமாகக் கேட்டுக் கொண்டான் மாதவன்.

ஹறித்வாரை நெருங்க நெருங்க அந்தணர் பெரிய குரலெடுத்து இறைவன் திருநாமத்தைக் கூச்சல் இட்டவாறு செல்ல மாதவன் இடித்த புளி போல் அமைதியாக வந்தான். கங்கை நதியை அடைந்ததும் பக்திப் பரவசத்தில் அந்தணர் அப்படியே தரையில் வீழ்ந்து வணங்கி கங்கைத்தாயே! உன்னைக் காண நான் என்ன பாக்கியம் செய்து இருக்கிறேன்! என்று சொல்லி நதியில் இறங்கி மந்திரங்களை உச்சரித்துக் கொண்டே கங்கை நீரை எடுத்துப் பருகினார்.

பின்னர் மாதவனை நோக்கி நான் முதலில் ஸ்நானம் செய்துவிட்டு வருகிறேன்.


அதன் பிறகு நீ செய்யலாம்! என்றவரை மாதவனின் பதில் திடுக்கிட வைத்தது. இதுதானா நீங்கள் பெரிதாகப் புகழ்ந்த கங்கை? நமது கிராமத்தில் ஓடும் நதியைப் போல் தான் இதுவும் இருக்கிறது. அதற்கும் இதற்கும் ஒரு வித்தியாசமும் இல்லை! என்றான் மாதவன்.கோபம் தலைக்கேறிய அந்தணர் அவனைத் திட்டி விட்டு பயபக்தியுடன் கங்கையில் நீராடினார். மாதவன் கூறிய சொற்களைக் கேட்ட கங்கை துணுக்குற்றாள். எல்லாரும் தன்னைப் புனித நதி என்று போற்றும்போது இவன் ஒருவன் மட்டும் தன் கிராமத்து நதியும் கங்கையும் ஒன்றுதான் என்று சொல்கிறானே என்று எண்ணினாள். அவனைக் காண்பதற்



காக ஒரு பெண் வடிவத்தில் வெளியே வந்த கங்கை மாதவா! நான் தான் கங்கை! எல்லா நதிகளையும் ஒன்றாகக் கருதும் உன் வெகுளித்தனம் எனக்குப் பிடித்து இருக்கிறது. நீ சொல்வது உண்மைதான்! எல்லா நதிகளுமே புனிதமானவைதான்! எங்கே உன் வாயைத் திற! என்றாள்.

உடனே மாதவன் தன் வாயைத் திறந்து காட்ட கங்காதேவி அவன் நாக்கினில் தன் விரலால் எழுதினாள் மாதவா! இனி உன்னுடைய நாவில் இருந்து அறிவுப்பூர்வமான சொற்கள் வெளிவரும். நீ ஒரு மேதாவியாக மாறுவாய்! பறவைகள் மிருகங்கள் பேசிக் கொள்வது கூட உன் செவிகளில் விழும். உன் வாழ்வில் ஒரு நல்ல மாறுதல் ஏற்படும்! என்று வாழ்த்திவிட்டு மறைந்தாள்.

சில கணங்கள் மாதவன் அப்படியே திகைத்துப் போய் நின்றான். தான் ஹரித்வாருக்கு வந்த நோக்கம் நிறைவேறி விட்டது என்று தோன்றியது. உடனே தன் கிராமத்தை நோக்கி நடக்கத் தொடங்



கினான். அப்போது எதிரே ஒரு பெரிய ஊர்வலம் வந்து கொண்டிருந்தது. ஊர்வலத்தின் முன்னணியில் ஒரு யானை தன் தும்பிக்கையில் மாலை ஏந்தி நடந்து வந்து கொண்டிருந்தது. ஒரு பக்கமாக ஒதுங்கிக் கொண்ட கள்வ-----ன் அங்கிருந்த சிலரிடம் ஊர்வலத்தைப் பற்றிக் கேட்டான்.அந்த ஊர் மன்னர் வாரிசில்லாமல் சமீபத்தில் இறந்து விட்டதாகவும் புதிய வாரிசைத் தேர்ந்தெடுக்கத் தான் பட்டத்து யானை மாலை ஏந்தி வருவதாகவும் அது யார் கழுத்தில் மாலையிடுகிறதோ அவனே புதிய மன்னனாக அறி விக்கப் படுவான் என்றும் அறிந்தான்.

யானையை வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்த மாதவன் அது தன்னருகில் வந்து திடீரென நின்றதும் திகைத்தான்.

மறுகணம் யானை உரத்த குரலில் பிளிறிக் கொண்டே மாலையை அவன் கழுத்தில் இட்டது சுற்றி இருந்த மக்கள் மாதவனைச் சூழ்ந்து கொண்டு எங்கள் புதிய மன்னர் நீங்களே! என்று மகிழ்ச்சியில் கூச்சலிட்டனர்.

தான் காண்பது கனவா என்று மாதவன் ஆச்சரியத்தில் மிதக்க மக்கள் அவனைத் தூக்கி யானையில் அமர்த்தினர். யானை அரண்மனை நோக்கித் திரும்ப மக்கள் அனைவரும் மன்னர் மன்னர் வாழ்க! என்று ஆரவாரம் செய்தனர்.

கங்கையில் நீராடிவிட்டு எழுந்த அந்தணர் கரையில் மாதவனைக் காணாமல் திகைத்தார். பிறகு எங்காவது அவன் தொலைந்து போகட்டும் என்று எண்ணிக் கொண்டு ஊர் திரும்பினார். வரும் வழியில் ஒரு பெரிய ஊர்வலத்தையும் பட்டத்து யானையின் மேல் வீற்றிருக்கும் மனிதனையும் கண்டு குழப்பத்திற்கு உள்ளானார். அவன் மாதவன் தான் என்று தெரிந்தும் பக்கத்தில் விசாரிக்க அவர்கள் அது எங்கள் புதிய மன்னர் என்று சொன்னதும் மாதவனுக்கு அடித்த குருட்டு யோகத்தை எண்ணி அவர் அதிர்ந்து போனார்.

# தமிழ்ச் சிறுவர்கள் மூவரை கொடுக்க மறுக்கும் நோர்வே

நோர்வேயில் வாழும் இலங்கை தமிழ் குடும்பமொன்று தமது குழந்தைகளை அந்நாட்டு சிறார் பராமரிப்பு அதிகாரிகள் தம்மிடம் திருப்பி தர மறுப்பதாக முறைப்பாடு செய்திருக்கிறது.

தமது 12 வயது பெண் பிள்ளையை அடித்து தண்டித்த சம்பவத்தின் பின்னரே பாடசாலையிலிருந்து தமது மூன்று பிள்ளைகளையும் அதிகாரிகள் அழைத்து சென்றுவிட்டதாக நோர்வே குழந்தைகள் பராமரிப்பு நிறுவனத்தின் கட்டுப்பாட்டிலுள்ள 3 குழந்தைகளின் தாயான ஜெக்லின் டிலாந்தினி கூறினார்.

குழந்தைகளுக்கு கையால் உணவூட்டுவது, ஒரே அறையில் உறங்கச் செய்வது போன்ற பழக்கங்கள் தவறானவை என்றும் அதிகாரிகள் கூறுவதாக அவர் தெரிவித்தார்.

உள்ளூர்நீதிமன்றமொன்று தமது பிள்ளைகளை சிறார் பராமரிப்பு நிறுவனத்திடமே ஒப்படைக்க வேண்டும் என்றும் தமிழ் கலாசார முறைப்படியே வளர்க்க வேண்டும் என்றும் உத்தரவிட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஆனால்,பல வாரங்களுக்கு ஒரு தடவையே தமது குழந்தைகளை பார்க்க அனுமதிக்கப்படுவதாகவும் பிள்ளைகளின் தாய் தெரிவித்தார். தமது 12 வயது மற்றும் 8 வயது பெண்பிள்ளைகளும் 6 வயது ஆண் பிள்ளையும் இவ்வாறு 5 மாதமாக தம்மிடமிருந்து பிரிக்கப்பட்டுள்ளதாகவும் பெற்றோர் கவலையுடன் தெரிவித்தனர்.

பிள்ளைகள் நோர்வே பிரஜைகள் என்ற போதிலும் தான் இலங்கை பிரஜை என்ற அடிப்படையில் நோர்வேயிலுள்ள இலங்கை தூதரகத்திடம் முறைப்பாடு செய்துள்ளதாக ஜெக்லின் டிலாந்தினி கூறினார்.

கலாசார ரீதியான கருத்து முரண்பாடு தான் இந்தப் பிரச்சினைக்கு காரணம் என்றும் அவர் முறையிட்டார்.

ஆனால், இந்திய பெற்றோர் சம்பந்தப்பட்ட இவ்வாறான பிரச்சினையொன்றின் போது குழந்தைகளின் பாதுகாப்பு குறித்த அச்சம் ஏற்பட்ட பின்னரே தாம் தலையிட வேண்டிய நிலை ஏற்பட்டதாக நோர்வேயின் சிறார் நல பாதுகாப்பு துறையினர் சுட்டிக்காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-11)


# 150 ஆவது பிறந்த ஆண்டு விழா

(யாழ்ப்பாணம்)

தாவடி இராம கிருஷ்ண சமதியும் இணுவில் கந்தசாமி கோயில் இளம் தொண்டர் சபையும் இணைந்து நடத்தும் சுவாமி விவேகானந்தரின் 150 ஆவது பிறந்த ஆண்டு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு இணுவில் கந்தசாமி கோயில் இளம் தொண்டர் சபை அறநெறிப் பாடசாலை மண்டபத்தில் இணுவில் இளம் தொண்டர் சபை அறநெறிப்பாடசர்லை தலைவர் கி.அஜந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கொழும்பு இராமகிருஷ்ணமிஷன் ஸ்ரீமத் சுவாமி இராஜேஸ்வரானந்தாஜி மகாராஜ், சிறப்பு விருந்தினராக நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் சி.சிவமோகன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

மேலும் இளம் தொண்டர் சபை அறநெறிப் பாடசாலை மாணவர்களின் ''எழுந்திரு விழித்துக் கொள்'' வில்லிசை நிகழ்வும் சித்திரப்படக் கண்காட்சியும் நடைபெறவுள்ளதாக இராமகிருஷ்ண மிஷன் நலன்புரி நிலையத்தினர் அறிவித்துள்ளனர். (அ-2)



மானிப்பாய் கட்டுடை அரசடி விநாயகர் ஆலய தேர்த்திருவிழா அண்மையில் இடம்பெற்றது. விநாயகப் பெருமான் தேரேறி பவனி வருவதை படத்தில் காணலாம். *(படம்:- அலுவலகச் செய்தியாளர்)*

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

2012.04 07

★ *1521*- பெர்டினென்ட் மகலன் பிலிப் பைன் சின் சேபு தீவை அடை ந்தார்.

★ *1541*-பிரான்சிஸ் சேவியர் போர்த்துக்கீ இந்தியாவுக்கான பயணத்தை மேற்கொண்டு லிஸ்பன் நகரில் இருந்து புறப்பட்டார்.

★ *1795*-பிரான்ஸ் மீற்றர் அளவு முறையை அறிமுகப்படுத்தியது.

★ *1827*-ஆங்கிலேயே வேதியியலாளர் ஜோன் வோக்கர் தான் கண்டு பிடித்த தீக்குச்சியை விற்பனை க்கு விட்டார்.

★ *1906*-வேசுவியஸ் மலை தீ கக்கியதில் நேப்பில்சில் பலத்த சேதம் ஏற்பட் டது.

★ *1906*-ஸ்பெயின் மற்றும் பிரான்ஸ் ஆகியவற்றின் கட்டுப்பாட்டில் மொரோக்கோ வந்தது.

★ *1927*-முதலாவது தொலைதூர தொலைக் காட்சி சேவை வோஷிங்டன் டிசி நியூயோர்க் நகரம் ஆகியவற்றிற் கிடையில் இடம்பெற்றது.

★ *1928*-வால்ட் டிஸ்னி தனது புகழ்பெற்ற கார்ட்டுன் பாத்திரமான மிக்சி எலியின் படத்தை வரைந்தார்.

★ *1939*-இரண்டாம் உலகப் போர் இத்தாலி அல்பேனியாவை முற்றுகையிட்டது.

★ *1942*-இரண்டாம் உலகப் போர்: ஆட்மி ரால்ட்டி தீவுகளை ஜப்பான் கைப்பற்றியது.

★ *1943*-யூதப் படுகொலைகள்: உக்ரேய்னில் டெரெபோவ்லியா என்ற இட த்தில் நாசிகள் ஆயிரத்து 10 யூதர்களை அரை நிர்வாணமாக்கி நகர வீதிவழியே அழைத்துச் சென்று பின்னர் அவர்களைச் சுட்டுக் கொன்று புதைத்தனர்.

★ *1945*-இரண்டாம் உலகப் போர்: உலகின் மிகப்பெரும் போர்க்கப்பலான ஜப்பானின் யமாட்டோ ஒக்கி னாவா அருகில் தென்கோ நட வடிக்கையின் போது அமெரிக் கப் கடற்படையினரால் மூழ் கடிக்கப்பட்டது.

★ *1946*-பிரான்சிடம் இருந்து சிரியாவின் விடுதலை அங்கீகரிக்கப்பட்டது

★ *1948*-உலக சுகாதார நிறுவனம் (WHO ஐக்கிய நாடுகள் சபையால் ஆரம்பிக்கப்பட்டது.

★ *1948*-சீனாவில் ஷங்காயில் பௌத்தமத தலம் ஒன்று எரிந்ததில் 20 புத்த குருக்கள் உயிரிழந்தனர்.

★ *1963*-யூகோஸ்லாவியா சோசலிசக் குடியரசாகியது. மார்ஷல் டீட்டோ ஜனாபதியானார்.

★ *1964*-ஐபிஎம் தனது (System/360 ஐ அறிவித்தது.

★ *1978*-யாழ்ப்பாணத்தில் இலங்கையின் பொலிஸ் அதிகாரி பஸ்தியாம் பிள்ளை உட்பட பல பொலிஸ் துறையினர் போராளிகளால் உயிரி ழந்தனர்.

★ *1978*-நியூத்திரன் குண்டு தயாரிக்கும் திட்டத்தை ஐக்கிய அமெரிக்கா கைவிட்டது.

★ *1983*-ஸ்ரோரி மஸ்கிரேவ், டொன் பீட்டர்சன் இருவரும் மீள் விண்ணோடத்தில் இருந்து விண்ணில் நடந்த முதல் வீரர்களானார்கள்.

★ *1989*-கொம்சொமோலெட்ஸ் என்ற சோவி யத் நீர்மூழ்கிக் கப்பல் நோர்வேயில் விபத்துக்குள்ளாகி மூழ்கியதில் 42 பேர் உயிரிழந்தனர்.

★ *1992*-ஸ்ருப்ஸ்கா குடியரசு விடுதலையை அறிவித்தது.

★ *1994*-ருவாண்டாவின் கிகாலியில் டுட்சி இனத்தவர்களை அழிக்கும் படலம் ஆரம்பமானது.

★ *2001*-மார்ஸ் ஒடிசி விண்கலம் ஏவப் பட்டது.

★ *2003*-அமெரிக்கப் படைகள் பக்தாத் நகரைக் கைப்பற்றினர். சதாம் உசேய்னின் அரசு இரு நாட்களின் பின்னர் வீழ்ந்தது.

★ *2007*-தமிழ்நாட்டில் சென்டுரில் நெடுஞ் சாலை அமைப்புக்கென கொண்டு செல்லப்பட்ட வெடி பொருட்கள் அடங்கிய வாகனம் ஒன்று வெடித்ததில் 16 பேர் கொல்லப்பட்டனர்.

**பிறப்புக்கள்**

★ *1889*-கப்ரியேலா மிஸ்ட்ரல், நோபல் பரிசு பெற்ற சிலி எழுத்தாளர் (இ.1957)

★ *1920*-ரவி சங்கர், சிதார், கலைஞர்

**இறப்புக்கள்**

★ *1761*-தோமஸ் பேயிஸ், ஆங்கிலேய கணிதவியலாளர் (பி.1702)

★ *2006*-வ.விக்னேஸ்வரன், தமிழீழ மாமனி தர் விருது பெற்றவர்

**சிறப்பு நாள்**

★ உலக சுகாதார தினம்



பரிசு மேல் பரிசும் கொண்டு
அனுகூலங்கள் பலவும் உண்டு
மலரும் தமிழ்ப் புத்தாண்டில்
செலான் வருது பரிசு கொண்டு
செலான் டிக்கிரி Plus சிறுவர்களுக்கான பெரிய ACCOUNT கணக்கில்
ரூ. 20,000
வைப்பு செய்யும் சிறுவர்களுக்கு
'Game Pad' ஒன்று
செலான் புதுவருட வைப்பில்
ரூ. 25,000
வைப்பு செய்யும் உங்களுக்கு
பெறுமதியான பிளெண்டர் ஒன்று
செலான் டிக்கிரி Plus சிறுவர்களுக்கான பெரிய ACCOUNT கணக்கில்
ரூ. 5,000
வைப்பு செய்யும் சிறுவர்களுக்கு
'டோர்க்கி டோய்' ஒன்று
புதுவருட பரிசுகளுக்கு மேலதிகமாக குடும்பத்துடன்
பரிசு மேல் பரிசு சீட்டிழுப்பில் பங்கு பெற,
இச் சித்திரைப் புத்தாண்டில் செலான் வங்கிக்கு வாருங்கள்.
புதுவருட வைப்பு ஒருவருட காலத்திற்கு வரையறுக்கப்படுவதுடன், பரிசுக் கொடுப்பனவு
2012 ஏப்ரல் 05 முதல் 30 வரை அல்லது கையிருப்பு உள்ளவரை மட்டுமே செல்லுபடியாகும்.
செலான் வங்கி
அன்புடன் அரவணைக்கும் வங்கி
*நிபந்தனைகள் உண்டு
துரித எண்: 011 200 88 88
(சி/6284)

# அதிசய உலகம்...


## உயிரைப் பணயம் வைத்து சாதிக்கும் வினோத மனிதர்



பொதுவாக இவ்வுலகில் பிறந்த ஒவ்வொரு மனிதர்களிடமும் சில வித்தியூரசமான திறமை மறைந்திருக்கும். அவ்வாறு மறைந்திருக்கும் திறமையினை சாதனை என்ற பெயரில் வெளிக் காட்டுவார்கள்.

சிலர் தம்முடைய திறமைகளை வெளியில் காட்டாமல் தமக்குள்ளே விட்டு விடுவார்கள். மோட்டார் சைக்கிளில் சாகசம் செய்வது என்பது ஒரு கலை. பளுதூக்கி அசத்துவது என்பது ஒருவகை விளையாட்டு. இது இரண்டினையும் வெவ்வேறு சந்தர்ப்பங்களிலும் நிகழ்வதற்கான வாய்ப்புக்களே அதிகம். அந்த வகையில் இவ்விரண்டு செயல்களையும் ஒரே நேரத்தில் நிகழ்த்தி மெய்சிலிர்க்க வைக்கிறார் திறமைசாலியான இளைஞர். Honda CBR 954RR என்ற அதிவேக மோட்டார் சைக்கிளில் ஒற்றைச் சில்லில் பயணித்துக் கொண்டு அதிக எடை ஒன்றையும் தூக்கி சாதிக்கும் மனிதரை படத்தில் காணலாம்.

## தனது பாதுகாப்பிற்காக விண்ணில் பறந்து பயணம் செய்த காண்டாமிருகம்



தென்னாபிரிக்காவின்ஜோகோப் நகரில் காண்டாமிருகம் ஒன்றின் கண்ணைத் துணியால் கட்டிவிட்டு அதனை கயிற்றில் கட்டி உலங்குவானூர்தி மூலம் இடம் நகர்த்தியுள்ளனர்.

நூற்றுக்கணக்கான அடிகள் உயரத்தில் பறந்து கொண்டிருந்த காண்டாமிருகம் ஏறத்தாழ 15 மைல் பயணத்தின் பின்னர் தரையிறங்கியது. பின்பு அங்கிருந்து ட்ரக் மூலம் 1000 மைல்கள் பயணம் செய்து லிம்போபோ மாகாணத்தை அடைந்தது.

2000ஆயிரம் கிலோ கிராம் நிறையுடைய இந்த காண்டாமிருகத்தின் பயணமானது அதனை காப்பாற்றும் பொருட்டு இடம் பெற்றதாகும். அதாவது கடந்த வருடம் தென்னாபிரிக்காவில் மட்டும் கொம்புக்காக 341 காண்டாமிருகங்கள் கொலை செய்யப்பட்டிருக்கின்றன. இதிலிருந்து பாதுகாக்கவே வான் பயணத்தை மேற்கொண்டது காண்டாமிருகம்.

## தமிழகத்தில் நபர் ஒருவரின் வயிற்றில் 4294 கற்கள்

இந்தியா மாநிலமானது தமிழ்நாட்டில் ஈரோடு மாவட்டத்தை அடுத்துள்ள ஆர்.என்.புதூரை சேர்ந்தவர் துரைசாமி வயது-62). இவர் விஏஓவாகா பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளார். இவர் கடந்த 10 ஆண்டுகளாக நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டிருந்தார். வாயு தொல்லையும் இருந்து வந்தது.


இதற்காக ஈரோடு வள்ளி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். ஸ்கான் செய்து பார்த்த போது அவரது பித்தப்பையில் கற்கள் அடைத்திருப்பது தெரியவந்தது.

டாக்டர் டி.கே. சாமி தலைமையிலான மருத்துவர்கள் குழு லேப்ராஸ்கோபி முறையில் அறுவை சிகிச்சை செய்து பித்தப்பையில் இருந்து 4294 கற்களையும் கடைசியாக பித்தப்பையையும் அகற்றினர்.

இது குறித்து டாக்டர் டி.கே. சாமி கூறுகையில், எங்கள் மருத்துவமனையில் அதிகபட்சமாக 80 கற்கள் வரை மட்டுமே அகற்றி உள்ளோம். தற்போது 4294 கற்கள் அகற்றப்பட்டு நோயாளி நலமுடன் உள்ளார்.

உலக அளவில் ஜேர்மனியை சேர்ந்த ஒரு மூதாட்டிக்கு 3110 கற்கள் அகற்றப்பட்டதே சாதனையாக இருந்து வந்தது. பித்தபையில் ஆயிரக்கணக்கான கற்கள் இருந்தும் எந்த உபாதையும் ஏற்படாவிட்டால் அகற்ற வேண்டியதில்லை. ஒரு கல் இருந்து உபாதை ஏற்படுத்தினால் அகற்றுவது தான் சிறந்தது என்றார்.

## காற்பந்தாட்டத்தில் கலக்கும் றோபோக்கள்



நவீன காலகட்டத்தில் மனிதன் பெரும்பாலான செயல்களுக்கு பக்கதுணையாக இருக்கும் றோபோக்கள் தற்போது பொழுது போக்கிலும் செயற்பட ஆரம்பித்துவிட்டது. ஜேர்மனியில் உள்ள மாக்டிபர்க் நகரில் றோபோக்கள் அணி இடையேயான சர்வதேச காற்பந்து போட்டி நடத்தப்பட்டது. இரு அணிகளுக்கிடையே அபாரமாக விளையாடும் றோபோக்களைப் படத்தில் காணலாம்.


## ஆங்கிலப் பத்திரிகை படிக்கும் அரியவகை விலங்குகள்



நாம் வாழும் உலகில் அன்றாடம் நடக்கும் விடயங்களை உடனுக்குடன் தெரிவிக்கும் இணையங்கள் பல பெருகியிருக்கும் இவ்வேளையில் பத்திரிகை மற்றும் செய்தித்தாள்களை விரும்பிப் படிப்பவர்களும் இன்னும் இருக்கத்தான் செய்கின்றனர்.

இவ்வாறு பத்திரிகை படிக்கும் மனிதர்கள் மட்டுமன்றி விலங்குகளும் தற்போது படிக்க ஆரம்பித்துவிட்டன. அவ்வாறு பத்திரிகை படிக்கும் விலங்கினைப் படத்தில் காணலாம்.

## ஹெலிகொப்டரைப் போல் இது கார் கொப்டர்




உங்கள் எல்லோருக்கும் ஹெலிகொப்டரை நிச்சயம் தெரிந்திருக்கும். ஆனால், நீங்கள் கார் கொப்டரை பார்த்ததுண்டா? ஆனால் இங்கே உள்ள கார் வடிவத்திலான ஹெலிகொப்டர் வானில் பறக்கும் காட்சியைத்தான் நீங்கள் பார்க்கப் போகின்றீர்கள். இந்தக் கார் வடிவத்திலான ஹெலிகொப்டர் 110mph வேகத்தில் செல்கின்றதாம்.

போக்குவரத்து நெரிசல் உள்ள நேரங்களிலோ அல்லது மலைகள், ஆறுகள், கடல்களை கடக்க வேண்டிய நேரத்திலோ நீங்கள் இலகுவாக இந்த கார் கொப்டர் மூலம் கடக்க முடியும் என்று இதனை உருவாக்கிய dutch boffins என்பவர் தெரிவித்துள்ளார்.

தற்போதைய காலத்தில் எல்லா விடயங்களும் சாத்தியம் என்று அடித்துக் கூறுகின்றார் இவர். பரிசோதனை ஓட்டத்தின் பின்னர் ஒரு வருடத்துக்குள்ளாக இந்த கார் கொப்டர் சந்தைக்கு வர உள்ளது. இதன் ஆரம்ப விலை 175000 பவுண்களாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# தமிழ் பாரம்பரிய அரங்கில் புதிய முயற்சி

3

பொதுவாக குழந்தை சண்முகலிங்கம் ஆரம்ப நிலை நடிகர்களின் நடிப்பு வெளிப்பாட்டை கூட்டுவதற்குக் கையாளும் நுட்பமாக ஒரு நடிகனின் பாத்திரத்தை ஏனைய நடிகர்கள் நடித்துக் காட்ட விடப்படுவர். இம்முறைமை குறித்த நடிகனுக்கு தனது பாத்திரம் பற்றிய பல்வேறு எண்ணப்பாங்குகளை கண்டறியவும் புறவயமாக நின்று பார்க்கவும் வாய்ப்பளிக்கிறது. இந்நுட்பம் "கண்டனன் சீதையை" நாடகத்தில் ஆரம்ப நிலை நடிகர்களுக்கான பயிற்சிகளில் உள்ளது.

இந்நாடகத்தில் இரண்டு உச்சமான தருணங்களை அதிகம் ஆர்வம், உணர்வு தூண்டப்படும் இடங்களாக கொள்ளலாம். அனுமன் சீதையைக் காணுதல் மற்றது இராவணனும் அனுமனும் சந்தித்தல். அனுமன் சீதையைக்காணுமிடத்தில் நெஞ்சைத் தொடுமளவிற்கு அனுமன் பாத்திரத்தின் நடிப்பு இருந்தது. அதேபோல இராவணனும் அனுமனும் சந்தித்து வரும் "யாரடா குரங்கே" என்ற பாடற்பகுதியின் வெளிப்பாடுகள் பொருத்தப்பாட்டோடும் ஈர்ப்போடும் இருந்தது. மேலும் "என்னத்திற்கு பரதன் படை வந்தது" என்ற பாடலின் அமைப்பாக்கம் மிகச் சிறப்பாக வந்திருந்தது. அதிக ஆட்களுள்ள காட்சியை அமைப்பது கடினம் வாய்ந்தது. ஆனால், பார்க்கும் போது இலகுவானது போலத் தோன்றும் எனினும் அதனை வடிவமைப்பது சிரமமானது அந்த இடம் எல்லாமே அழகாக வந்திருந்தது. அதாவது அனேக இடங்கள் பல பாத்திரங்களின் மிக மெதுவான அசைவாக இருப்பது தேவையாகிறது. காட்சியமைப்பு



## கண்டனன் சீதையை

கணிக்கப்பட்ட விளைவாக அமைந்திருந்தது. எல்லா வகையாலும் பாத்திரங்கள் மேடையில் நிலை நிறுத்தப்பட்ட விதம் சரியாகவும் அழகாகவும் இருந்தது. இந்த நாடகத்தில் மூன்று பெரும் சோகங்களை சண்முகலிங்கம் குறிப்பிடுகிறார்.

1.தசரதன் மரணம்

2.இராமர் காடு செல்லல்

3.சீதையை இராவணன் கவர்ந்தமை

என்பனவாகும். அதனால் இந்த நாடகத்தின் இலயம் சோகத்திற்குரிய பண்பாக அமைகிறது. இதன்காரணமாக இந்நாடகத்திற்கான அசைவு மிருதுவானதாய் இருக்கிறது.

ஏதுமின்றி வெறும் இரண்டு இருக்கைகளோடு வெளி நிரம்பி இருந்தது.

நடிகர்களின் அபிப்பிராயப்படி ஒத்திகைக் காலங்களில் மேலதிகமாக வீடுகளிலும் சுயமாக பயிற்சி செய்ததன் காரணமாகவே தாம் பலவற்றை பாடல் சார்ந்து, நடிப்பு சார்ந்து நிலைநிறுத்த முடிந்தது என்று குறிப்பிட்டனர். சண்முகலிங்கத்தின் நெறியாள்கையில் முதலில் நடிகர்கள்ள தமது விருப்பிற்கு அமைய பாத்திரங்களைக் கட்டியெழுப்ப விட்ட பின்னரே அவற்றை ஒரு ஒழுங்கிற்கு கொண்டு வருவதோடு மேலதிகமான விடயங்களையும் சேர்த்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

நாடக அரங்கக் கல்லூரியின் 1980 ஆண்டுகாலத் தயாரிப்புக்களான "உறவுகள்", "கந்தன் கருணை", "சங்காரம்" போன்ற நாடகங்கள் ஒலிவாங்கி இல்லாமலேயே நடிகரின் கம்பீரக்குரல் மூலம் ஆற்றுகை செய்யப்பட்டது. இன்று தொழில்நுட்பவசதி மனித வலுவின் இயல்பான குரல் எனும் பகுதியின் முனைப்பான செயற்பாட்டை குறைத்துள்ளது என்று இந்நாடக நெறியாளர் குறிப்பிட்டதோடு மேலும் இந்த நாடகம் இயல்பான குரல் விருத்தியை பாடல்கள் மூலம் நடிகனுக்கு ஏற்படுத்துகிறது என்றும் குறிப்பிட்டார். பொதுவாகவே நடிகர்கள் மேடையில் நல்ல பொருத்தமான குரலில் பேசுவதற்கு சங்கீத பயிற்சி முக்கிய பங்காற்றும் இதனை கலையரசு சொர்ணலிங்கம் தனது "நாடகமும் நானும்" எனும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

இசை நாடக நடிப்பு, பாடலை அடியொற்றி வருகிறது என்பது பல நடிகரின் அனுபவங்கள் மூலம் தெரிய வருகின்றது. தமிழினி- "பாட்டுப்பாட நடிப்பு வருகிறது" என்கிறார். அத்தோடு இவர் இசை நாடக அனுபவமிக்கவர். இவரது நடிப்பு, பாடல் சிறப்பாக அமைந்திருந்தது. குரலும் அசைவும் பாத்திரத்திற்கு பொருத்தமாயிருந்ததோடு பார்வையாளரையும் கவர்ந்தது: கிருபாகரன் (அனுமான்)- "பாட்டு சொந்தமாக மாற நடிப்பு வரும்" இவரது நடிப்பும் மிக முக்கியமானது ஏனெனில் பாத்திரமாக வெளிப்படலிலும் ஏனைய பாத்திரங்களுக்கு எதிர்வினை காட்டலிலும் நல்ல முகவெளிப்பாடும் தேவையான உணர்ச்சியும் வெளிப்பட்டது குறிப்பிடத்தக்கது. பவீனா- "(திரிசடை) "ராகம் தான் நடிக்க வைக்கிறது": தவசோதிநாதன்-"மணிக்கூட்டு ஊசல் மாதிரி நடிப்பது மாறி பாத்திர தேவைக்கு நடிப்பது வந்துள்ளது": யஸ்ரின் (ராமன்) - பழைய முறையில் மேடைதான்" ஒத்திகையின தும் கற்றுக் கொள்ளலினதும் களம். ஆனால், இங்கு ஒத்திகையின் நடைமுறைதான் படைப்பாக்கத்தின் மையமாகிறது" என்றார்.

உண்மையில் இராமனது பாத்திர நடிப்பு மிக சிறப்பானது அதாவது பேசும் போது மட்டுமல்ல பாடும் போதும் இராமர் பாத்திரம் முழுமையாக வெளிப்பட்டது. நடை, உடை பாவனை எல்லாமே சரியாக இருந்தது. (தொடரும்)

க.ரதீதரன்

# யாழ்.குடா நன்னீர் கிணறுகளில் மலசலகூட நீர் கலக்கும் அபாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திலுள்ள நன்னீர் கிணறுகளில் மலசல கூட நீர் கலந்து மக்களுக்கு தொற்று நோய் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகரித்துள்ளதாக வேள்ட்விஷன் நிறுவனத்தின் திட்ட முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

யாழ். சாவகச்சேரி நகர சபையின் மீசாலை பொதுநூலக அபிவிருத்தி ஆலோசனை சபையின் உதவியுடன் முன்பள்ளி மாணவர்களுக்கு இலைக்கஞ்சி வழங்கலும் போஷாக்கு பற்றிய கருத்தமர்வும் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில் கிணற்று நீர் வற்றும் காலங்களில் மலசல கூட கழிவு நீரும் கிணற்று நீர் ஊற்றுக்களுடன் கலக்கும் அபாயமும் யாழ். மாவட்டத்தில் காணப்படுகின்றது.

நீர் பரிசோதனையில் இது ஆய்வு செய்யப்பட்டு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மலசல கூடத்திலிருந்து வெளியேறும் கழிவு நீரை மட்டும் வேறு தொட்டிக்குள் செலுத்தி அதனை சுத்திகரிக்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப் படல் வேண்டும்.

மழை காலங்களில் நீரை சேமித்து வேறு தேவைகளுக்கு பயன்படுத்துதல் வேண்டும். சிறு குளங்களை அமைத்து மழை நீரை கடல் நீருடன் சேர விடாது சேமிக்க வேண்டும்.

இது பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த நகரசபை, பிரதேசசபைகள், சனசமூக நிலையங்கள் மற்றும் சமூக மட்ட அமைப்புக்கள் என்பன முன்வர வேண்டும் என்றார். இதே வேளை வடமாகாணத்தில் போஷாக்கென்பது பெரும்பிரச்சினையான விடயமாக உள்ளது. குறிப்பாக முன்பள்ளி மாணவர்கள் மற்றும் இளம் பருவத்தினர் மத்தியில் இது அவதானிக்கப்பட்டுள்ளது.

முன்பள்ளி மாணவர்களின் போஷாக்கு, ஆசிரியர்களின் கல்வி மேம்பாடு மற்றும் முன்பள்ளிகளில் அதிகமாக காணப்படும் வளப்பற்றாக்குறை போன்ற விடயங்கள் அவதானிக்கப்பட்டுள்ளது.

இதற்கான மேம்பாட்டு திட்டங்களை பிரதேச சபைகள், நகரசபைகள், சுகாதார திணைக்களங்கள் மற்றும் கல்வித் திணைக் களங்கள் போன்றவற்றுடன் இணைந்து செயற்படுத்தவுள்ளோம்.

இத்திட்டங்களை மேம்படுத்துவதற்கு பெற்றோர்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என தெரிவித்தார். (அ-2)

## நிர்வாகிகள் தெரிவு

யா/சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரியின் இவ்வாண்டுக்கான பாடசாலை அபிவிருத்திச் சங்க நிர்வாகத் தெரிவு அண்மையில் நடைபெற்றது.

தலைவராக பாடசாலை அதிபர் கு.விமலன், செயலாளராக ம.குணரத்தினம், பொருளாளராக த.நித்தியானந்தன், உபதலைவராக பாடசாலையின் பிரதி அதிபர் இ.ஆனந்தநடராசா உப செயலாளராக ந.செல்வராசா ஆகியோரும் பத்து நிர்வாகக்குழு உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக கல்லூரி அதிபர் அறிவித்துள்ளார். (அ)

# வேற்று நாட்டின் தலையீட்டை தவிர்க்க நாடு தன்னிறைவு அடைய வேண்டும்

## அமைச்சர் பசில் தெரிவிப்பு

எந்த நாடும் தலையிடாது வாழவேண்டுமாயின் நாடு அனைத்து துறைகளிலும் தன்னிறைவு அடைய வேண்டும் எனவும் அதில் மக்களுக்கு முக்கிய பொறுப்பு இருப்பதாகவும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அத்தனகல்ல பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றும்போதே அவர் இதனை கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், நாட்டின் வரலாற்றில் நடைபெற்ற பல சம்பவங்களையும் அச்சுறுத்தல்களையும் இலங்கை எதிர்கொண்டது. நாடு தன்னிறைவு அடைந்திருந்தன் மூலம் பண்டைய காலத்தில் அவற்றை வெற்றி கொள்ள முடிந்தது.

எனினும் பிளவுபட்ட சமூகமாக இலங்கை சமூகம் இருந்தபோது இலங்கை பல்வேறு வகையில் வெளிநாடுகளுக்கு அடிபணிந்திருந்தது. இதனால் அனைத்து குடும்பங்களும் கிராமங்களும் பிரதேசங்களுக்கு, மாகாணங்களும் நாடு என்ற வகையில் அனைத்து துறைகளிலும் தன்னிறைவு பெற நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (அ-2)

# இந்தியாவுடன் இலங்கை விளையாடுகிறது!



**சீனாவை நண்பர் என்றும், இந்தியாவை உறவினர் என்றும் விழித்து இலங்கை மழுப்பி வந்தாலும், உண்மையில் அது சீனாவின் பக்கமே நின்றுகொள்கிறது. இது அண்மைக்காலங்களில் பலமுறை கற்றுத்தந்துள்ள பாடமாக வுள்ளது. இலங்கை மீதான சீனாவின் செல்வாக்கை குறைக்க இப்போது இந்தியாவுக்கு மட்டுமல்ல அமெரிக்காவுக்கும் உள்ள ஒரேவழி ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்துவதுதான். சீனாவின் நெருக்கத்தைக் குறைப்பதற்கு இந்தியா, வைக்கப்போகும் செக் இதுவாகத்தான் இருக்கும். அதன் முதற்படியாகக்கூட ஜெனிவா வாக்கை கருதலாம்.**

இந்தியாவிடமிருந்து விலகி சீனாவை நெருங்கும் இலங்கை ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை இந்தியா ஆதரித்து வாக்களித்தது கடும் வாதப் பிரதிவாதங்களை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக, இந்தியாவின் தேசியப் பத்திரிகைகள்- முக்கியமாக, டெல்லியை மையமாகக் கொண்ட ஆங்கில ஊடகங்கள் மத்திய அரசின் இந்த முடிவை கடுமையாக விமர்சித்துவருகின்றன. மத்திய அரசு, கூட்டணிக்கட்சிகளினதும், தமிழ் நாட்டினதும் நெருக்குதலுக்கு அடிபணிந்து, தேசிய நலனை விட்டுக்கொடுத்து விட்டதாக கடுமையான விமர்சனங்கள் எழுந்துள்ளன. இந்தளவுக்கும் ஜெனிவா தீர்மானத்தை இந்தியா ஆதரித்திருந்தாலும், அதன் கடுமையைக் குறைத்து, இலங்கையைக் காப்பாற்றுவதில் முக்கியபங்கு வகித்தது என்பதை மறந்துவிடலாகாது.

அமெரிக்கா வரைந்த தீர்மானத்தில், நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு, இலங்கை அரசாங்கம் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தின் தொழில்நுட்ப மற்றும் ஆலோசனை உதவிகளைப் பெறவேண்டும் என்று ஆலோசனை

**இன்போதமிழ்**

உதவிகளைப்பெற வேண்டும் என்று கூறப்பட்டிருந்தது. ஆனால், அதற்கு இந்தியா கடும் எதிர்ப்புத் தெரிவித்தது. இந்த வாசகத்தை நீக்குவது தொடர்பாக ஜெனிவாவில் இந்தியத் தூதர் *திலிப் சின்ஹாவுக்கும்*, அமெரிக்கத்தூதர் *எலீன் டோனேஹேக்கும்* இடையில் கடுமையான இழுபறிநிலை காணப்பட்டது. வாக்கெடுப்பு இடம்பெறுவதற்கு சில நாட்களுக்கு முன்னதாகவே, திலிப் சின்ஹாவை ஜெனிவாவுக்கு அனுப்பிவைத்திருந்தது புதுடில்லி. அவர் அங்கு அமெரிக்காவுடன் கடுமையாகப் பேரம்பேசினார். இந்த வாசகத்தை நீக்காதுபோனால், தீர்மானத்தை எதிர்த்து வாக்களிப்போம் என்று மிரட்டினார். விடாப்பிடியாக நின்ற அமெரிக்கா, இதனால் கொஞ்சம் படியிறங்கிவந்து திருத்தம் செய்ய சம்மதித்தது. அதன் பின்னரே

## லெப்.ஜெனரல் பிரகாஸ்மேனனின் கூற்று உண்மையே

தீர்மானத்துக்கு இந்தியா ஆதரவாக வாக்களித்தது.

தீர்மானத்தில் திருத்தம் செய்து, தலைக்கு வந்த ஆபத்து தலைப்பாகையுடன் போகக் காரணமாக இருந்த இந்தியாவை, இலங்கை நன்றியோடு பார்ப்பதாகத் தெரியவில்லை.

ஜெனிவாத்தீர்மானத்தை ஆதரித்தது ஏன் என்று விளக்கமளித்து இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார். அதில் அவர், ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இந்தியா ஒரு சமநிலை போக்கை அறிமுகப்படுத்தியதாக குறிப்பிட்டிருந்தார். அவர் சுட்டிக் காட்டியது, தீர்மானத்தில் திருத்தம் செய்து இலங்கைக்கு பாதகமற்ற நிலையை ஏற்படுத்தியதையேயாகும். இதற்கு இலங்கை அரசாங்கம் பதிலைக்கூட அனுப்பிவைக்கவில்லை. இந்தியாவுக்குக் கடமைப்பட்டுள்ளதாக இலங்கை கூறினாலும், தீர்மானத்தை எதிர்த்து வாக்களித்ததை ஏற்கின்ற மனப்பக்குவம் அரசாங்கத்துக்கு இன்னமும் வரவில்லை. அதேவேளை, இந்தத் தீர்மானவிடயத்தில் இந்தியாவை விமர்சிக்கும் இந்திய ஊடகங்கள், ஜெனிவாவில் இந்தியா என்ன செய்தது என்று பார்க்கவில்லை, எதிற்காக செய்தது என்றும் நோக்கவில்லை. இந்தியா தவறு செய்து விட்டது என்றே விமர்சிக்கின்றன.

முன்னாள் இராஜதந்திரிகளும்கூட இதற்கு விதிவிலக்கல்ல.

தமிழர்கள் சார்பாக இந்தியா நடந்து கொண்டுவிட்டதே என்ற பிரச்சினை அவர்களிடம் உள்ளதா அல்லது இலங்கையைக் கைவிட்டதே என்ற கவலை உள்ளதா என்று தெரியவில்லை.

ஆனால், இதனை சீனாவுடன் இணைத்துப் பார்த்து அச்சம் கொள்கின்றனர் என்பது வெளிப்படையாகவே தெரிகிறது.

இந்தியாவில் உள்ள இராஜ தந்திரிகள் எல்லோரையுமே, இப்போது கனவிலும் நனவிலும் மிரட்டும் ஒரே நாடு சீனாதான்.

ஜெனிவாவில் அமெரிக்காவின் தீர்மானத்தைத் தோற்கடிக்க இலங்கை அரசு கடுமையாகப் போராடிக் கொண்டிருந்தது.

சீனாவும் ரஸ்யாவும் கியூபாவும் தான் இலங்கைக்கு வலுவான ஆதரவைத் தெரிவித்தன.

எனினும் பிறநாடுகளை வளைத்துப் போடும் பிரசாரத்தை மேற்கொள்ள இந்த நாடுகளிடம் மேலதிக உதவியை இலங்கை கோரவில்லை. காரணம் இந்தியா பற்றிய நிச்சயமற்ற நிலை ஒன்று இருந்தது. சீனாவின் உதவியை நாடினால், இந்தியாவைப் பகைக்க நேரிடும் என்ற அச்சம் அரசுக்கு இருந்தது. இந்தியா அப்போது மதில் மேல் பூனையாக இருந்தது.

ஒருகட்டத்தில் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் ஜெனிவா தீர்மானத்தின் போது, இந்தியா என்ன செய்யப் போகிறது என்று நாடாளுமன்றத்தில் அறிவித்தார். அதையடுத்து வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஸ்ணாவுடன் தொடர்பு கொண்டு முடிவை மாற்றுமாறு கோரினார். ஆனால், அதற்கு இந்தியா உடன்படவில்லை. அதன் பின்னர், ஜெனிவாவில் இருந்தபடியே சீனாவின் காலைப் பிடித்தார். வெளிவிவகார அமைச்சரைத் தொடர்புகொண்டு காப்பாற்றுமாறு கேட்டுக்கொண்டார். அதன் பின்னர், சீனா களமிறங்கி குட்டையைக் குழப்பியது. வாக்கெடுப்புக்கு முதல்நாள் மாலைவரை 7 நாடுகளின் உறுதியான ஆதரவையே இலங்கை பெற்றிருந்தது. சீனா, களமிறங்கியதால், மறுநாள் காலை நிலைமை கொஞ்சம் மாறியது. சீனாவின் செல்வாக்கிற்கு உட்பட்ட சில நாடுகள் தமது முடிவை மாற்றிக்கொண்டு எதிர்த்தன. அல்லது நடுநிலை வகிக்க முடிவுசெய்தன. ஆனாலும் சீனா பிடித்துக்கொடுத்த நாடுகளைக் கொண்டு இலங்கையால் தீர்மானத்தை தோற்கடிக்க முடியவில்லை. இந்தநிலையில், தீர்மானத்தின் கடுமையைக்குறைத்து- சர்வதேச அழுத்தங்களில் சிக்கிக் கொள்ளாமல் இந்தியாவைவிட தீர்மானத்தைத் தோற்கடிக்கும்- வெற்றிபெறாத முயற்சிக்குக் கைகொடுத்த சீனாவைத்தான் இலங்கை மதிப்போடு நோக்குகிறது.

சீனாவை நண்பர் என்றும், இந்தியாவை உறவினர் என்றும் விழித்து இலங்கை மழுப்பி வந்தாலும் உண்மையில் அது சீனாவின் பக்கமே நின்றுகொள்கிறது. இது அண்மைக்காலங்களில் பலமுறை கற்றுத்தந்த பாடம். இலங்கையிலும் பிற அண்டை நாடுகளிலும் சீனா செலுத்திவரும் ஆதிக்கம் இந்தியாவுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதே புதுடெல்லியின் கருத்தாக உள்ளது. இந்தியாவிலுள்ள பெரும்பாலான ஊடகங்கள் தமிழர்கள் என்னவானாலும் பரவாயில்லை, சீனாவுக்காக இலங்கையைக் காப்பாற்ற வேண்டும் என்ற நிலையிலேயே இருக்கின்றன. அதனால்தான் இலங்கைக்கு எதிராக வாக்களித்ததும், கோபம் கொப்பளிக்கிறது. ஆனால், இந்த விடயத்தில் மத்திய அரசோ, அதன் கொள்கை வகுப்பாளர்களோ தெளிவான நிலையில் இருப்பதாகவே படுகிறது. இலங்கையை ஒரு தட்டுத் தட்டிவைக்க வேண்டும் என்பதில் அவர்கள் உறுதியாக இருந்துள்ளனர்.

சென்னைப் பல்கலைக்கழகத்தின் பாதுகாப்பு மற்றும் போர்க்கலைத் துறையுடன் இணைந்து தென்பிராந்திய இராணுவத் தலைமையகம் கடந்த வாரம் ஒரு கருத்தரங்கை நடத்தியது. அந்தக் கருத்தரங்கில் உரையாற்றிய, இந்தியாவின் தேசிய பாதுகாப்புச் சபையின் இராணுவ ஆலோசகரான லெப் ஜெனரல் பிரகாஸ்மேனன், இந்தியாவின் முடிவு நன்றாகக் கணிக்கப்பட்டு எடுக்கப்பட்டது என்று குறிப்பிட்டுள்ளார். மத்திய அரசு கூட்டணிக் கட்சிகளின் நெருக்குதலுக்கு ஏற்ப எடுக்கப்பட்ட முடிவு போலத் தோன்றினாலும், இது இலங்கையின் நிலையை அறிந்து ஆராய்ந்து எடுக்கப்பட்ட முடிவு என்று அவர் கூறியுள்ளார். போரில் வென்றிருந்தாலும் இலங்கை நிச்சயமாக நீண்டகாலநோக்கில் அமைதியை இழந்து வருகிறது என்றே நாம் நம்புகிறோம்.

ஏனென்றால் அவர்கள் போதியளவில் செய்யவில்லை. அவர்கள் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றவில்லை. ஜெனீவா தீர்மானத்தின்போது நிச்சயமாக எமது குரல் அந்தக் கோணத்திலேயே இருந்தது. மத்திய அரசாங்கத்தில் கூட்டணிக் கட்சிகள் செல்வாக்குச் செலுத்தியதாக நிச்சயமாக உங்களால் கூறமுடியும். ஆனால், முடிவு தேசிய விருப்பங்களின் அடிப்படையிலேயே அமைந்திருந்தது. இப்படிக் கூறியிருந்தார் லெப்.ஜெனரல் பிரகாஸ்மேனன்.

இவரது இந்தக்கருத்து இந்தியாவின் இன்னொரு பக்கத்தைக் காட்டுகிறது.

இலங்கை அரசு தமக்குக் கொடுத்த வாக்குறுதிகளைக் காப்பாற்றத் தவறியதற்கான தண்டனையாகவே இந்தியாவின் வாக்கு அளிக்கப்பட்டது என்றும் கூறமுடியும்.

இதுபோன்ற எத்தனை காரணங்களைச் சொன்னாலும், சீனா பற்றிய அச்சத்தில் அழ்ந்திருப்போரால் இதையெல்லாம் ஏற்றுக்கொள்ள முடியுமா என்பது சந்தேகம்தான். அதேவேளை, இலங்கை அரசு சீனாவின் பிடிக்குள் சிக்கிப்போய் நீண்டகாலமாகிவிட்டது. அதிலிருந்து இலங்கையை வெளியே கொண்டுவருவதற்காக இந்தியா கையாளும் ஒரு தந்திரமாகவும் இந்த வாக்கை கருதலாம். இந்தியா என்ன செய்தாலும் இலங்கையை சீனாவின் செல்வாக்கில் இருந்து இலகுவில் பிரித்துவிட முடியாது. இதனை புதுடில்லியின் கொள்கை வகுப்பாளர்கள் நன்றாகவே உணர்ந்துள்ளார்கள் என்பதை லெப். ஜெனரல் பிரகாஸ் மேனனின் உரை நன்றாகவே உணர்த்துகிறது. அவர் கூறியதுபோன்று, இந்தியாவுடன் இலங்கை விளையாடுவது உண்மையே இலங்கை மீதான சீனாவின் செல்வாக்கைக் குறைக்க இப்போது இந்தியாவுக்கு மட்டுமல்ல அமெரிக்காவுக்கும் உள்ள ஒரேவழி ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்துவதுதான். சீனாவின் நெருக்கத்தைக் குறைப்பதற்கு இந்தியா வைக்கப் போகும் செக் இதுவாகத்தான் இருக்கும்.



அதன் முதற்படியாகக் கூட ஜெனிவா வாக்கை கருதலாம். இதன் பின்னரும் சீனாவின் வாலில் தொங்கிக்கொள்ள அரசாங்கம் ஆசைப்படுமானால், மகிந்தராஜபக்ச அரசாங்கத்துடன் இந்தியா இனிமேல் நெருக்கமான உறவை வைத்துக்கொள்ள விரும்புமா என்பது சந்தேகம்தான். இந்தியா இப்படியொரு முடிவை எடுத்தால், அதற்குக் காரணம் இலங்கை அரசின் போக்காகவே இருக்கும்.

# இலங்கை, இந்தியா, அமெரிக்கா...

**டெக்கான் க்ரானிக்கள் பத்திரிகையின் பொறுப்பாசிரியர் திரு. பகவான் சிங்கிற்கு துக்ளக் ஆசிரியர் அளித்த பேட்டியிலிருந்து...**

*கேள்வி:- தீவிரவாதத்தை எதிர்க்கின்றோம் என்ற பெயரில் அரசே தீவரவாதத்தில் இறங்கி விடக்கூடாது என்ற வாதத்திற்கு நீங்கள் என்ன சொல்கிறீர்கள்.*

சோ:- ஒருவருடைய சுதந்திரத்தைப் பறிப்பது குற்றம். ஆனால் குற்றவாளிகளை சிறையில் அரசாங்கம் அடைக்கும் போது அவர்களுடைய சுதந்திரத்தை அரசு பறித்து விட்டதாக யாரும் சொல்வதில்லை. குற்றவாளிகளைச் சிறையில் வைப்பது அரசின் கடமை. ஒருவரைக் கொல்வது குற்றம் ஆனால் பொலிஸாரை அடித்து வீழ்த்தி ஒருவன் தப்பித்து ஓட முயன்றால் அவனைச் சுடுவது குற்றமாகாது. அப்படிச் செய்வது பொலிஸாரின் கடமை. அதேபோல் தீவிரவாதத்தின் மூலம் ஒரு நாட்டின் மக்களைப் பெரும் துன்பத்திற்கு ஆளாக்குகின்ற கூட்டத்தை ஒழிப்பது ஒரு அரசின் கடமை. அரசின் அந்தச் செயல் தீவிரவாதமல்ல. அது உறுதியான நடவடிகீகை. அப்படிச் செய்யவில்லை என்றால் அப்போது தான் அந்த அரசு பெரும் தவறு செய்த அரசாகிறது.

இங்கிலாந்தில் சமீபத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சியை உங்களுக்கு நினைவு படுத்துகின்றேன். ஒரு இளைஞன் பொலிஸ்ாரை கண்டவுடன் ஓடினான். அவனைத் துரத்தினார்கள். பிடிக்க முடியவில்லை. நிற்கும் படி கூறினார்கள். அவன் நிற்கவில்லை. பொலிஸார் சுட்டனர்.அவன் இறந்தான். கடைசியில் பார்த்தால் அவன் எந்தத் தவறும் செய்யவில்லை. பொலிஸாரைப் பார்த்ததும் ஏதோ பயத்தில் ஓடியிருக்கிறான். பொலிஸார் நடந்த நிகழ்ச்சியை வர்ணித்து இம்மாதிரி ஒருவர் செய்யும்



மஹிந்த ராஜபக்ஷ

போது எங்களுக்கு வேறு வழி இருக்கவில்லை. சுட்டோம். இது தவிர்க்க முடியாதது என்று சொன்னார்கள். இந்த விளக்கம் அப்படியே ஏற்கப்பட்டது. கடும் விமர்சனத்துக்கு உள்ளாகவில்லை.

அந்த மாதிரி நிகழ்ச்சிகளிலேயே கூட பொலிஸாரின் உரிமை நிலைநாட்டப்படுகின்ற போது தீவிரவாதிகளை எதிர்கொள்வதில் ஒரு அரசு ஸ்கௌட் போல நடந்து கொள்ள வேண்டும் என்றா எதிர்பார்க்க முடியும்? அதற்கு இராணுவமே தேவையில்லையே? பொலிஸே தேவையில்லையே? சாமியார்களை அனுப்பி தீவிரவாதிகளே நீங்கள் யாரையும் கொல்லாதீர்கள். நீங்களும் மனிதர்கள். நாங்களும் மனிதர்கள் ஆயைால் நீங்கள் வன்முறையை கைவிட்டு எல்லோருடனும் சமூகமாக வாழுங்கள் என்று உபதேசம் செய்து விடலாமே? சாமியார்களின் எண்ணிக்கை குறையும். அவ்வளவு தான். ஒவ்வொரு சாமியாராகப் போய் உபதேசம் செய்ய செய்ய அவர்களை இந்தத் தீவிரவாதிகள் சுட்டுக்கொன்றே இருப்பார்கள். சாமியார்களின் எண்ணிக்கை குறையும்.

*கேள்வி:- விடுதலைப்புலிகள் வீழ்ந்த பின்னர் இலங்கையில் எல்லோரும் சமமாக நடத்தப்படுவதற்கான ஏற்பாடுகள் நடக்கும் என்று ராஜபக்ஷ கூறினார். அம்மாதிரி செய்யவில்லையே?*

சோ:- இந்த விடயத்தில் முழுப் பழியும் இலங்கை அரசைச் சார்ந்தது தான். தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இன்னமும் அவர்கள் முனையவில்லை. அவர்களை அம்மாதிரி செய்யத் தூண்டுவது இந்தியாவின் கடமை. ஒரு நாட்டினால் இன்னொரு நாட்டின் மீது ராஜரீக வகையில் எவ்வளவு நிர்ப்பந்தத்தை ஏற்படுத்த முடியமோ அவ்வளவையும் செய்து தமிழர்களுக்கு சம உரிமையை இலங்கை அரசு வழங்குமாறு செய்வது இந்தியாவின் கடமை. ராஜீவ் - ஜெயவர்த்தன ஒப்பந்தத்தை இலங்கை அமுல்படுத்துமாறு இந்தியா வற்புறுத்த வேண்டும். தொடர்ந்து தமிழர்களின் நலன் புறக்கணிக்கப்பட்டு வந்தால் இலங்கையில் மீண்டும் தீவிரவாதம் தலை தூக்கும். அப்போது தோன்றுகிற தீவரவாதம் இலங்கையையே நாசம் செய்கிற அளவுக்கு சக்தியைப் பெற்றுவிடும். இதை இலங்கை உணர்ந்து நாட்டு நலனுக்காகவே கூட தமிழர் பிரச்சினையை தீர்க்க முனைய வேண்டும்.

*கேள்வி:- ராஜீவ்- ஜெயவர்த்தன ஒப்பந்தத்தின் படி பார்த்தால் வடக்குப் பகுதியும் கிழக்குப் பகுதியும் இணைந்து ஒன்றாக இருக்க வேண்டுமே? ஆனால் இப்போது அப்படி இல்லையே?*

சோ:- இல்லை. அந்த ஒப்பந்தத்தின் படி கிழக்கும் வடக்கும் ஒன்றாக இருப்பது ஒரு ரெஃபரேண்டத்தின் படி நடக்க வேண்டும். அதாவது மக்கள் வாக்கெடுப்பின் படி நடக்க வேண்டும்.

*கேள்வி:- அமெரிக்கா, மனித உரிமை மீறல் தீர்மானத்தை இலங்கைக்கு எதிராக கொண்டு வரக் காரணம், தமிழர்கள் பால் உள்ள அக்கறை அல்ல என்றும் தனது வர்த்தக மற்றும் ராஜரீக நலன்களை கருத்தில் கொண்டு தான் அமெரிக்கா இப்படிச் செய்கிறது என்றும் கூறப்படுகிறதே?*

சோ:-இந்தத் தீர்மானத்தின் மூலமாக அமெரிக்காவின் வர்த்தகம் எப்படி பாதுகாக்கப்படுகின்றது என்பது எனக்குப் புரியவில்லை. முன்பு இஸ்ரேலை மனித உரிமைக் குழுவில் குறி வைத்ததால் அமெரிக்கா இப்போது மற்றவர்களின் மீது பார்வையைச் செலுத்துகின்றது. அந்தப் பார்வை முதலில் இலங்கையின் மீது விழுந்திருக்கின்றது. இஸ்ரேல் பாதிக்கப்பட்டபோது அமெரிக்கா மனித உரிமை குழுவையே புறக்கணித்தது. அதற்குக் கொடுத்து வந்த நிதியை நிறுத்தியது. ஆனால் இப்போது ஒபாமாவின் ஆட்சியில் ஒருமாறுதல் செய்யப்பட்டிருக்கிறது. அதே சமயத்தில் இப்போதும் கூட அவர்கள் என்ன செய்கிறார்? நீ அன்று இஸ்ரேலைச் செய்தாய் அல்லவா? இன்று இலங்கையைச் செய்கிறேன். நாளை வேறு ஒன்றையும் செய்வேன் என்ற வகையில் செயற்படுகிறார்கள். நாளை அவர்களின் பார்வை காஷ்மீர் பக்கம் திரும்பினால் என்ன செய்வது? அப்போது நமது நிலைமை என்ன?

*கேள்வி:- இஸ்ரேலையும் இலங்கையையும் இணைத்துப்பேசுவவது எப்படிச் சரியாகும்? இந்த இரண்டு நிலைமைகளும் ஒன்றுதானா?*

சோ:- நான் அந்த இரு நாடுகளையும் இணைத்துப் பேசவில்லை. அந்தப் பிரச்சினைகள் சமமானவை என்றும் நான் சொல்லவில்லை. இஸ்ரேல் விடயத்தில் ஐ.நா.வின் மனித உரிமை குழு குறுக்கிட்ட போது அமெரிக்கா இப்படி ஒரு நாட்டை மட்டும் குறிப்பிட்டு செயல்படுவது முற்றிலும் தவறானது என்று கூறியது. அந்த காரணத்தால் தான் மனித உரிமை குழுவின் நடவடிக்கை அரசியல் ரீதியாகாது என்றும் கண்டித்தது. அப்போது அதற்கெல்லாம் மனித உரிமைக் குழுவில் செவிசாய்க்காததால் அதற்கு அளித்து வந்த நிதி உதவியை கூட அமெரிக்கா நிறுத்தி விட்டது. அதைப் புறக்கணித்தது. அந்தக் குழுவிற்கும் எங்களுக்கும் சம்பந்தம் இல்லை என்று கூறிவிட்டது. இப்போது ஒபாமா வந்தபோது அந்தப் புறக்கணிப்பு விலக்கப்பட்டிருக்கிறது. அதே சமயத்தில் நீ இஸ்ரேலுக்குச் செய்ததை நாங்கள் இலங்கைக்கு செய்கிறோம் என்று ஐ.நா.வின் மனித உரிமை குழுவைப் பார்த்து அமெரிக்கா பேசுகிறது. இதுதானே இப்போது நடக்கிறது? அதைத் தான் நான் சுட்டிக்காட்டினேன்.



சோ

அடுத்தாக இதைப்போல் ஒரு தீர்மானத்தை காஷ்மீர் விடயத்தில் அவர்கள் கொண்டு வந்தால் அப்போது இந்தியாவின் நிலைமை என்ன என்பதையும் நாம் யோசித்து கொள்ள வேண்டும் என்பதற்காக அந்த இஸ்ரேல் விடயத்தை சுட்டிக் காட்டினேன்.

*கேள்வி:- இலங்கை இந்து மகா சமுத்திரத்தில் இருக்கின்ற சிறிய தீவு. அங்கு வளர்ந்து வருகிற சீனர்களின் செல்வாக்கு காரணமாக அந்த தீவு சர்வதேசப் பார்வையில் இப்போது முக்கியமாகி விட்டது என்று சொல்வீர்களா?*

சோ:-சர்வதேசப் பார்வையில் முக்கியமாகியதோ இல்லையோ நமது பார்வையில் அது நிச்சயமாக முக்கியமாகத்தான் இருக்க வேண்டும். மேலும் மேலும் சீனாவின் அரவணைப்பை நாடும்



ராஜீவ் காந்தி

வகையில் இலங்கையை நாம் நடத்தப் போகிறோமா? விடுதலைப்புலிகளுடனான மோதலின்போது இந்தியா பெரும்பாலும் ஒதுங்கியே இருந்தது. அப்போது சீன உதவியை இலங்கை நாட சீனாவின் செல்வாக்கு அங்கு வளர ஆரம்பித்தது. அதே மாதிரி நாம் மீண்டும் மீண்டும் நடந்து கொள்வது நமக்கு நல்லதல்ல.

*கேள்வி:- சரி இந்தியா என்னதான் செய்ய வேண்டும்.என்று சொல்கிறீர்கள்.*

சோ:- நான் ஏற்கனவே சொன்ன மாதிரி இந்திய- இலங்கை ஒப்பந்தத்தை முழுமையாக நிறைவேற்ற இலங்கை அரசை நாம் நிர்ப்பந்திக்க வேண்டும். அங்கே உள்ள தமிழர்கள் சிங்களவர்களுக்கு இணையாக எல்லா உரிமைகளையும் பெற்று வாழ இலங்கை அரசு வழி செய்ய வேண்டும். அதற்கு இந்தியா உதவ வேண்டும். அதே சமயத்தில் இதையெல்லாம் சாதித்துக் தருவதற்காக இலங்கைக்குத் தேவையான உதவிகளை இந்தியா செய்ய வேண்டும். ஒரு அமைதியான நாடாக இலங்கை மீண்டும் தன்னைத் தானே மாற்றிக்கொள்ள வேண்டும். அதற்கும் இந்தியாவின் உந்துதல் தேவைப்படும. பொருளாதார உதவிகள் எங்கெல்லாம் தேவைப்படுகிறதோ அங்கெல்லாம் அதை அளிக்க இந்தியா முன்வர வேண்டும். இதையெல்லாம் செய்கின்ற போது தமிழர்களுக்கு அங்கே முழு நியாயம் கிடைக்கச் செய்ய வேண்டும் என்ற இலக்கை இந்தியா மறந்து விடக்கூடாது. .

*கேள்வி:- தமிழக மக்களும் இங்கே உள்ள தமிழ்க் கட்சிகளும் இதற்கு உதவி செய்கிற வகையில் என்ன செய்ய வேண்டும்.*

சோ:- பேசாமல் இருந்தாலே போதும் என்று நினைக்கின்றேன். இங்கே உள்ள சில தமிழ்த்தலைவர்கள் தான் பிரபாகரனின் முடிவுக்கு காரணமானார்கள். சதாம் உசேன் விடயத்தில் என்ன நடந்தது? உலக நாடுகள் எல்லாம் நிர்ப்பந்தித்து அமெரிக்காவை தன் மீது எந்த நடவடிக்கையும் எடுக்க விடாமல் செய்து விடும் என்று கடைசி வரை அவர் நம்பிக் கொண்டிருந்தார். அமெரிக்கப்படைகள் அங்கே நுழைந்த பின்னர் கூட இந்த மோதல்கள் எல்லாம் நின்று விடும் உலக நாடுகள் அதைப் பார்த்துக் கொள்ளும் என்று அவர் நம்பினார். ஆனால் கடைசியில் என்ன நடந்தது? அவர் இறந்தார்.

அதேபோல் தான் பிரபாகரனும் இங்குள்ள தமிழத் தலைவர்கள் செய்த பிரசாரத்தை நம்பி அவர்கள் தனக்காக குரலை ஓங்கி எழுப்பி மத்திய அரசை நிர்ப்பந்தித்து இலங்கை அரசின் இராணுவ நடவடிக்கைகளை நிறுத்தி விடுவார்கள் என்று எதிர்பார்த்தார். கடைசி வரை இந்த எதிர்பார்ப்பிலேயே அவர் இருந்ததால் தான் இறுதியில் அவர் தனது முடிவையே சந்திக்க வேண்டி வந்தது. இந்த மாதிரி அவர் எதிர்பார்த்து மோசம் போனதற்கு இங்கே உள்ள தமிழ்த்தலைவர்கள் தான் காரணம்.

இங்கே உள்ள தமிழ்த்தலைவர்களுக்கு இங்கே பெரிய செல்வாக்கில்லை. ஆனால் அவர்களால் இலங்கையில் இந்த நாசத்தை சாதிக்க முடிந்தது. அவ்வப்போது இவர்கள் தாங்களே ஒரு படையைத் திரட்டிக்கொண்டு இலங்கைக்குச் சென்று விடுவதாகக் கூட மிரட்டி வந்தவர்கள் என்பதை மறந்து விடக்கூடாது. உங்களுடைய பத்திரிகையில் பிரபாகரன் குடும்பத்தோடு சரண் அடைந்தபோது சுடப்பட்டதாக செய்தி வந்திருக்கின்றது. இதை இங்குள்ள தமிழ்த்தலைவர்கள் ஒப்புக் கொள்ளப் போகிறார்களா? அப்படிச் செய்து விட்டால் விடுதலைப்புலிகளின் வீர பிரதாபங்களை பற்றிய பிரசாரமே அடிபட்டு விடுமே? அதனால் அதை அவர்கள் ஒப்புக் கொள்ள மாட்டார்கள்.

*கேள்வி:- இலங்கை தமிழர் விடயத்தில் மத்திய அரசுக்கான தனது ஆதரவை தி.மு.க. வாபஸ் வாங்கினாலும் வாங்கும் என்ற பேச்சு இருப்பதால் மத்திய அரசு ஆட்டம் கண்டு விட்டதாக நினைக்கிறீர்களா?*

சோ:- மத்திய அரசு கவிழ கலைஞர் காரணமாகி விட மாட்டார் என்பது மற்ற எல்லோரையும் விட பிரதமருக்கும் சோனியா காந்திக்கும் நன்றாக தெரியும் ஏனென்றால் கலைஞருக்கு மத்திய அரசின் உதவி தேவை. அதன் உதவி இல்லாவிட்டால் வழக்குகளில் சிக்கியுள்ள அவரைச் சேர்ந்தவர்கள் மேலும் பல சோதனைகளை சந்திக்க நேரிடலாம்.

மத்திய அரசின் ஆதரவு இருக்கும் வரை தான் அந்த வழக்குகளில் இருந்து தப்பிக்க ஏதாவது வாய்ப்புகளைத் தேட அவரால் முடியும். அது மட்டுமல்ல ஜெயலலிதாவை அரசியல் ரீதியாக சந்திப்பதற்கு கூட அவருக்கு மத்திய அரசின் பலம் தேவை. காங்கிரஸை அ.தி.மு.க. பக்கம் துரத்தி விடுவதில் காங்கிரஸ் கூட்டணியை அ.தி.மு.க. விரும்பாமல் இருக்கலாம். ஆனால் காங்கிரசுக்கு வேறு வழியில்லை என்ற நிலையை உண்டாக்குவதால் கலைஞருக்கு என்ன இலாபம்? ஆகையால் இதை அவர் செய்ய மாட்டார். கட்சி வாழ்வதற்காக முன்பு திராவிட நாட்டை தியாகம் செய்தார்கள். இப்போது குடும்பம் வாழ்வதற்காக அவர் இலங்கைப் பிரச்சினையை தியாகம் செய்வாரே ஒழிய மத்திய அரசு பதவியை விட்டு விட மாட்டார்.

# விசாரிக்கப்படக்கூடும் என்ற அச்சத்தில் வெளியேறவுள்ள ஜெனரல் பிரசன்ன

(கொழும்பு)

லண்டனில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் பாதுகாப்பு ஆலோசகராகப் பணியாற்றும் மேஜர் ஜெனரல் பிரசன்ன சில்வா போர்க்குற்றச்சாட்டுகள் தொடர்பாக பிரித்தானியாவில் விசாரணைக்கு உட்படுத்தப்படலாம் என்ற அச்சத்தில் விரைவில் கொழும்பு திரும்பவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

பிரித்தானியாவின் தி கார்டியன் நாளேடு இந்தக் தகவலை வெளியிட்டுள்ளது. விடுதலைப்புலிகளுக்கு எதிரான இறுதிப் போரில் 55 ஆவது பிரிவுக்கும் 59 ஆவது பிரிவுக்கும் தளபதியாக இருந்த மேஜர் ஜெனரல் பிரசன்ன சில்வா பெருமளவு பொதுமக்கள் கொல்லப்படக் காரணமாக இருந்தவர் என்ற குற்றச்சாட்டுக்கு உள்ளாகியுள்ளார்.

மருத்துவமனைகள் மற்றும் பாதுகாப்பு வலயங்கள் மீதான பீரங்கித் தாக்குதல்களை மேற்கொண்டு தமிழ் மக்களைப் படுகொலை செய்து போர்க்குற்றம் இழைத்த இவர் மீது பிரித்தானியாவில் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று உலகத் தமிழர் பேரவை கோரியுள்ளது.

போர்க்குற்றங்களுக்கு காரணமானவர் என்று குற்றம் சாட்டப்பட்டுள்ள மேஜர் ஜெனரல் பிரசன்ன சில்வா லண்டனில் குடும்பத்தினருடன் தங்கியுள்ள போதும் அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கத் தவறியதற்கு எதிராக பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் வில்லியம் ஹக்கிக்கு எதிராக உலகத் தமிழர் பேரவை சட்ட நடவடிக்கை ஒன்றில் இறங்கியுள்ளது.

அத்துடன் மேஜர் ஜெனரல் பிரசன்ன சில்வா மீதான குற்றச்சாட்டுகள் அடங்கிய மனு ஒன்று ஸ்கொட்லன்ட்யார்ட் பொலிஸாரிடமும் கையளிக்கப்பட்டுள்ளது. தற்போது ஈஸ்டர் காலம் என்பதால் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட இரண்டு வாரங்களாகும் என்று சட்டவாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தநிலையில் பிரித்தானியாவில் தாம் விசாரிக்கப்படக்கூடும் என்ற அச்சத்தினால் மேஜர் ஜெனரல் பிரசன்ன சில்வா லண்டனில் இருந்து விரைவில் வெளியேறவுள்ளார்.

இதுகுறித்து அரசாங்கப் பேச்சாளர் ஒருவர் தகவல் தெரிவிக்கையில், மேஜர் ஜெனரல் பிரசன்ன சில்வாவின் 18 மாதகால பாதுகாப்பு ஆலோசகர் பதவிக்காலம் ஏற்கனவே முடிந்து விட்ட நிலையில் அவர் நாடு திரும்பவுள்ளதாக கூறியுள்ளார்.

இந்த வழக்கமான மாற்றத்துக்கும் உலகத் தமிழர் பேரவையின் சட்ட நடவடிக்கைக்கும் தொடர்பு இல்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# இரண்டாம் தவணை 23 ஆம் திகதி ஆரம்பம்

*கல்வி அமைச்சு*

(கொழும்பு)

இரண்டாம் தவணை கல்வி நடவடிக்கைகளுக்காக அனைத்து அரச பாடசாலைகளும் எதிர்வரும் 23 ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இதேவேளை, அனைத்து அரச முஸ்லிம் பாடசாலைகளும் இரண்டாம் தவணைக்காக எதிர்வரும் 16 ஆம் திகதி திறக்கப்படும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

அனைத்து அரச பாடசாலைகளுக்கான முதலாம் தவணை விடுமுறை வழங்கப்பட்டுள்ளது. (அ-2)

# முதியவர் ஒருவரை தாக்கி 10 இலட்சம் ரூபா கொள்ளை



(கொழும்பு)

கொழும்பு கொட்டாஞ்சேனையில் முதியவர் ஒருவரை தாக்கி வழிப்பறி கொள்ளை ஒன்று இடம்பெற்றுள்ளது. இச்சம்பவம் நேற்று முன்தினம் பிற்பகல் 2.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது. இச்சம்பவம் குறித்து தெரியவருவதாவது,

தனியார் வங்கி ஒன்றிலிருந்து 10 இலட்சம் ரூபா பணத்தை பெற்று விட்டு கொட்டாஞ்சேனை பிக்கரிங்ஸ் வீதியால் நடந்து கொண்டிருந்த முதியவரை வெள்ளை வானில் பின் தொடர்ந்து வந்த கும்பல் ஒன்று கடுமையாக தாக்கி விட்டு பணத்துடன் தப்பிச் சென்றுள்ளதாக தெரிய வருகிறது. குறித்த வீதியில் சனநடமாட்டம் குறைவான சந்தர்ப்பத்தை பயன்படுத்தியே இவ்வழிப்பறிக்கொள்ளை இடம்பெற்றுள்ளது. (அ-2)

# உயர்வகுப்பை சேர்ந்தவர்களுக்கு ஏற்ற வகையிலேயே நிதிக்கொள்கை

*கபீர் ஹாசீம் எம்.பி. குற்றச்சாட்டு*

அரசாங்கம் நாட்டில் வகுப்பு பயங்கரவாதத்தை விதைக்க முயற்சிப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசிம் தெரிவித்துள்ளார்.

சமூகத்தின் ஓர் குறிப்பிட்ட வகுப்பை சேர்ந்தவர்களுக்கு மட்டும் நன்மை ஏற்படும் வகையில் அரசாங்கம் தனது நிதிக்கொள்ளைகளை அமுல்படுத்துகின்றது என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

குறிப்பாக செல்வந்த சமூகத்தை திருப்திப்படுத்தும் நோக்கில் அரசாங்கத்தின் பொருளாதார கொள்கைகள் வகுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

சொகுசு வாகனங்களுக்கான இறக்குமதி வரி 524 வீதமாக காணப்பட்டதாகவும் கடந்த ஆண்டு இந்த வரி 250 வீதமாக குறைக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தற்போது அந்த வரி 350 வீதமாக உயர்த்தப்பட்டுள்ளது எனவும் இது கடந்த கால வரியை விடவும் குறைவானது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். எனினும் சாதாரண வாகனங்களுக்கான வரிகள் 40 வீதத்தால் உயர்த்தப்பட்டுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறான நடவடிக்கைகளின் மூலம் சாதாரண பொதுமக்களின் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கி வருவதாகவும் செல்வந்த வர்க்கத்தினருக்கு எவ்வித பாதிப்பும் கிடையாது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தை திருப்திப்படுத்தும் நோக்கில் அரசாங்கம் சாதாரண பொதுமக்கள் மீது மேலதிக சுமைகளை திணித்து வருவதாக குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# வடமாகாண முஸ்லிம்கள் பற்றி கூறப்பட்டுள்ள பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த வேண்டும்

*அமைச்சர் றிசாத் வலியுறுத்து*

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் வடமாகாண முஸ்லிம்களின் இனச் சுத்திகரிப்பு குறித்து 8 இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் அதனை அரசாங்கம் நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதை தமது கட்சி வலியுறுத்தவுள்ளதாகவும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தேசிய தலைவரும் அமைச்சருமான றிசாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

வடக்கு முஸ்லிம்களின் மீள்குடியேற்றம் தாமதமடைவதாகவும் இதனால் பல பிரச்சினைகளை இம் மக்கள் எதிர்கொள்வது குறித்து அமைச்சர் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். மேலும் தெரிவிக்கையில்,

தற்போது ஏற்பட்டுள்ள சமாதான சூழலில் வடமாகாணத்தில் இருந்து இடம்பெயர்க்கப்பட்ட முஸ்லிம்களின் மீள்குடியேற்றம் இடம் பெறுகின்றது. சுமார் 70 சதவீதமானவர்கள் மீள்குடியேற தமது பதிவுகளை உரிய பிரதேச செயலகங்களுக்கு சமர்ப்பித்துள்ளனர்.

இருந்த போது அவர்களுக்கான இருப்பிட அமைவிடங்கள் ஏற்படுத்துவது தொடர்பில் பல சிக்கல்கள் ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் பழைய புதிய அகதிகள் என்று பிரித்து அனுகப்படுவதன் மூலமும் முஸ்லிம்கள் மத்தியில் நம்பிக்கையீனங்களை அதிகரித்துள்ளன.

இந்நிலை மாற்றப்படுவதோடு நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரையில் கூறியுள்ள வடமாகாண முஸ்லிம்கள் பற்றி பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற அழுத்தத்தை நாம் தொடர்ந்து கொடுக்க தீர்மானித்துள்ளோம் என்று அவர் மேலும் கூறினார். (அ-2)

# இந்திய சர்வகட்சிக்குழு வருகை நட்புறவுக்கான எடுத்துக்காட்டு

ஜெனீவாவில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை பேரவையில் இலங்கைக்கு எதிராக கொண்டு வரப்பட்ட பிரேரணைக்கு இந்தியா ஆதரவளித்தது என்பதற்காக இரண்டு நாடுகளுக்கும் இடையிலான உறவில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை என்பதற்கு இந்திய சர்வகட்சி எம்.பிக்கள் குழுவின் விஜயம் சிறந்த உதாரணமாக அமையும் என்று வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கருணாதிலக்க அமுனுகம தெரிவித்துள்ளார்.

இந்திய எம்.பிக்களின் இலங்கை விஜயம் குறித்து விபரிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில், நாங்கள் இந்திய தூதுக்குழுவினரை கௌரவத்துடன் வரவேற்போம் இலங்கை இந்திய நாடுகளுக்கிடையில் மிகவும் நெருக்கமான உறவு காணப்படுகின்றது என்றும் வெளிவிவகார செயலாளர் குறிப்பிட்டார்.

இந்திய சர்வகட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் குழு எதிர்வரும் 16 ஆம் திகதி இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளது. அவர்கள் வடக்கு உள்ளிட்ட பல்வேறு பிரதேசங்களுக்கு விஜயம் செய்யவுள்ளனர். (அ-2)

# 14 இலங்கை மீனவர்கள் விடுதலை

இந்தியாவில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 14 இலங்கை மீனவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இந்த மீனவர்களில் ஒன்பது பேர் இன்றைய தினம் நாட்டிற்கு வருகைதரவுள்ளதாக கடற்தொழில் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் லால் டி சில்வா குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவில் இறுதியாக தடுத்து வைக்கப்பட்டிருந்த 19 இலங்கை மீனவர்களில் இந்த 14 பேர் தொடர்பான சட்ட நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதன் அடிப்படையிலேயே அவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளதாக உதவிப் பணிப்பாளர் தெரிவித்தார்.

ஏனைய ஐந்து மீனவர்களும் அடுத்த வாரமளவில் இலங்கை திரும்பவுள்ளதாக அவர் கூறினார். இதன் பிரகாரம் இந்தியாவில் இன்னும் ஐந்து இலங்கை மீனவர்களே தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார். (அ-2)

# கியூபா தூதுவராக தமரா குணநாயகம்?



சுவிட்சர்லாந்து ஜெனீவாவுக்கான இலங்கையின் தூதுவராக பணியாற்றி வரும் தமரா குணநாயகம் மீண்டும் கியூபாவிற்கான இலங்கையின் தூதுவராக நியமிக்கப்படலாம் என இலங்கை வெளிவிவகார அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜெனீவாவுக்கான இலங்கை தூதுவராக தற்போது பெல்ஜியத்திற்கான இலங்கை தூதுவராக பணியாற்றி வரும் ரவிநாத ஆரியசிங்க நியமிக்கப்படவுள்ளதாக கூறப்படுகிறது. (அ-2)

# வாகனம் நாட்டிற்கு சுமையானது வரி அதிகரிப்பிற்கு இதுவே காரணம்

## ஊடக அமைச்சர் கூறுகிறார்

**தேசத்தைக் கட்டியெழுப்பல் உட்பட மக்களுக்கு தொடர்புடைய ஐந்து வகையான வரிச்சட்டத்தை நிறைவேற்றி அதன்மூலம் மக் கள், வியாபாரிகள் எனப் பலதரப்பட்டவர்களுக்கு வரிச்சலுகை வரி குறைப்பு செய்துள்ளோம். ஆயினும் இது குறித்து பேசாது வாகன வரி அதிகரிப்பை குறித்தே பேசுகின்றனர் என தகவல் ஊடகத்துறை பதில மைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.**

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் மாநாடு நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்றபோது அவர் மேற்கண்ட வாறு தெரிவித்தார்: அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் ஐவருக்கு ஒரு வாகனம் என்ற அடிப்படையில் வாகனங்களின் பாவனை வேகமாக அதிகரித்து காணப்படுகிறது.

வாகனங்களின் பாவனை நாட்டுக்கு சுமையாக அமைந்திடாமல் இருப்பதற்காக வேண்டியே வாகனங்களின் இறக்குமதி வரியை அதிகரிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவ்வாறு கட்டுப்படுத்தாவிடின் அடுத்து வரும் இரண்டு வருடங்களில் இந்த நாட்டிலுள்ள வீதிகளில் பாரிய வாகன நெரிசல்கள் ஏற்படும். அதனால் பாரிய சவால்களுக்கு முகம் கொடுக்க நேரும் என்றும் சுட்டிக்காட்டினார். கடந்த 2009 ஆம் ஆண்டில் 2 இலட்சத்து 11 ஆயிரத்து 679 ஆக இருந்த வாகன இறக்குமதியின் எண்ணிக்கை 2011 ஆம் ஆண்டளவில் 5 இலட்சத்து 23 ஆயிரத்து 963 ஆக அதிகரித்துள்ளது. இதனால் எரிபொருளின் பாவனை 2086 மெட்றிக்தொன்னிலிருந்து 230 மெற்றிக்தொன்னாக அதிகரித்துள்ளது.

எனவே, மசகு எண்ணெய் இறக்குமதி செய்வதற்கான நிதி ஒரு இலட்சத்து 11 ஆயிரத்து 715 மில்லியன் ரூபாவிலிருந்து ஒரு இலட்சத்து 49 ஆயிரத்து 746 மில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார். எனவே, வாகனங்களின், பாவனை நாட்டிற்கு சுமையாக அமையும் பட்சத்தில் அவற்றை கட்டுப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்க வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

எனவே, எவரதும் நிபந்தனைகளுக்கு அடிபணிந்து அரசாங்கம் இந்த தீர்மானத்தை எடுக்கவில்லைஎன்பதைதிட்டவட்டமாகதெரிவித்தஅமைச்சர் நாட்டின் தற்போதைய நிலைமையை கருத்திற்கொண்டே இந்ததீர்மானத்தைஅரசுஎடுத்ததாவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

(அ-2)

## சுகாதார அமைச்சரின் பொன்மொழிகள்

(கொழும்பு)

வடக்கு மற்றும் கிழக்கில் புலிகளின் நடவடிக்கைகள் காணப்படுவதாக வெளியான செய்திகளில் உண்மையில்லை. உள்ளார்ந்த பாதுகாப்பிற்கு தேவையான அனைத்து பொறிமுறைகளையும் படையினர் மேற்கொண்டுள்ளனர் என்று இராணுவத் தலைமையகம் குறிப்பிட்டுள்ளது.

இது தொடர்பாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவன் வணிகசூரிய . கூறுகையில், புலிகளின் செயற்பாடுகள் வட, கிழக்கில் காணப்படுவதாக ஊடகங்களில் செய்திகள் வெளிவந்தன.

இச் செய்திகளுக்கான ஆதாரங்கள் இல்லை. கிழக்கில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட் டுள்ளது. எனவே மேற்படி செய்திகளை ஏற்றுக் கொள்ள முடியாது.

எவ்வாறாயினும் நாட்டின் உள்ளார்ந்த பாதுகாப்புகளில் இராணுவம் உஷார் நிலையில் செயற்படுவதுடன் பொலிஸாருக்கு உதவும் நோக்கில் பல விடயங்களையும் மேற்கொள்கின்றோம் என்றார். (அ-2)

# கொள்கை வட்டி வீதத்தை உயர்த்த மத்திய வங்கி முடிவு

வங்கி வட்டி வீதங்களில் தாக்கம் செலுத்துகின்ற இலங்கை மத்திய வங்கியின் கொள்கை வட்டி வீதத்தை உயர்த்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் வர்த்தக நடவடிக்கைகளின் முடிவிலிருந்து அமுலாகும் வகையில் மீள்கொள்வனவு வீதம் 7.75 ஆக அமைந்திருந்ததுடன் மீள் விற்பனை வீதம் 9.75 வரை அதிகரித்துக் காணப்பட்டதாக இலங்கை மத்திய வங்கி குறிப்பிட்டுள்ளது.


கடந்த மாதத்தில் கொள்கை வட்டி வீதம் அதிகரிக்கப்பட்ட போதிலும் கடன் வழங்கல் தொடர்ந்தும் உயர்ந்த மட்டத்தில் காணப்படுவதாக இலங்கை மத்திய வங்கி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கடந்த பெப்ரவரி மாதத்தில் கடன் வழங்கல் எல்லையை மட்டுப்படுத்துமாறு இலங்கை மத்திய வங்கி வணிக வங்கிகளுக்கு உத்தரவிட்டிருந்தது.

இதற்கமைய எதிர்காலத்தில் வணிக வங்கிகளின் வட்டி வீதங்கள் தொடர்ந்தும் அதிகரிக்கப்படவுள்ளதாகஇலங்கை மத்திய வங்கியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-2)

# தமிழர் நிலை குறித்து விவாதிப்போரும் இந்தியக் குழுவில் இடம்பெற வேண்டும்

## பா.ஜ.க.தலைவர் பொன்.ராதாகிருஷ்ணன் வலியுறுத்து



(சென்னை)

இலங்கை செல்லும் எம்.பிக்கள் குழுவில் அனைத்துக் கட்சியினரும் இடம்பெற வேண்டும் என்று தமிழக பா.ஜ.க. தலைவர் பொன். இராதா கிருஷ்ணன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து சென்னையில் செய் தியாளர்களிடம் நேற்று முன்தினம் அவர் கூறியதா வது,

இலங்கையில் தமிழர்களின் நிலை குறித்தும் தமிழர் பகுதிகளில் இந்திய அரசின் உதவியுடன் நடைபெறும் மறுவாழ்வுப் பணிகள் குறித்தும் ஆராய்வதற்காக மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் சுஷ்மா சுவராஜ் தலைமையில் எம்.பி.க்கள் குழு எதிர்வரும் 16 இல் இலங்கை செல்ல விருக்கிறது.

இக் குழுவில் இடம்பெற இந்திய கம்யூனிஸ்ட் விடுதலைச் சிறுத்தைகள் உள்ளிட்ட கட்சிகளுக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை என்றும் மத்திய அரசின் அழைப்பை அ.தி.மு.க. ஏற்கவில்லை என்றும் செய்திகள் வெளியாகியுள்ளன. இலங்கை செல்லும் எம்.பி.க்கள் குழுவில் அனைத்துக் கட்சியினரும் குறிப்பாக தமிழகத்தைச் சேர்ந்த கட்சிகள் இடம்பெற வேண்டும் என்பதே பா.ஜ.க.வின் விருப்பம்.

ம.தி.மு.க. , பா.ம.க. போன்ற பதிவு செய்யப்பட்ட கட்சிகளின் தலைவர்க ளும் குழுவில் இடம்பெற்றால் ஈழத் தமிழர்களுக்கு நியாயம் கிடைக்க வழிவகுக்கும். மத்திய அரசு அனைத்துக் கட்சியினருக்கும் அழைப்பு விடுக்க வேண்டும் என்றார். (அ-2)

# பரிந்துரைகளின் சில பகுதிகள் ஏற்கனவே நடைமுறையில் உள்ளன

## பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய தெரிவிப்பு

13 ஆம் திருத்தச்சட்டத்தின் ஊடாக ஏற்கனவே நாட்டில் அதிகாரம் பகிரங்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சில அரசியல்வாதிகளினால் விடுக்கப்படும் கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ள முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். குறிப்பாக காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் தொடர்பில் சில அரசியல் வாதிகளின் கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என அவர் தெரிவித்துள்ளார். உண்மையை கண்டறியும் ஆணைக்குழுவினால் பரிந்துரை செய்யப்பட்டுள்ள அரசியல் ரீதியிலான காரணிகளை தவிர்ந்த ஏனையவற்றை அமுல்படுத்துவதில் சிக்கல் கிடையாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தேசிய கீதத்தை தமிழ் மொழியில் பாட வேண்டும் என்ற பரிந்துரையை நடை முறைப்படுத்த முடியாது என அவர் தெரிவித்துள்ளார்.

எனினும் சில பரிந்துரைகள் ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாகவும் சிலவற்றை அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு கிழக்கில் இயங்கி வந்த ஆயுதக் குழுக்களின் ஆயுதங்களை களைதல் மற் றும் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளை விடுதலை செய்தல் ஆகிய பரிந்துரைகள் ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாக பாதுகாப்பு செயலாளர் தெரிவித்துள்ளார். (அ-2)

# பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தாவிட்டால் உடனடியாக பொதுத்தேர்தலை நடத்துங்கள்

## புதிய சிஹல உறுமய கூறுகிறது

(கொழும்பு)

கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை செயற்படுத்த முடியாவிட்டால் அரசாங்கம் உடனடியாக பதவியில் இருந்து விலகி பொதுத்தேர்தல் ஒன்றை நடத்த வேண்டும் என புதிய சிஹல உறுமய மற்றும் ருகுணு மக்கள் கட்சி என்பன தெரிவித்துள்ளன.

சர்வதேசத்தில் ஏற்படுத்தப்படும் அழுத்தங்கள் போன்றவற்றை எதிர்நோக்காமல் அதனை புறந்தள்ளி காலம் தாழ்த்துவதால் நாடும் மக்களும் ஸ்திரமற்ற நிலைமைக்கு சென்று நாடு மீண்டும் நெருக்கடியான நிலைமையை எதிர்நோக்கும் எனவும் அந்த கட்சிகள் சுட்டிக்காட்டியுள்ளன.

நாட்டில் அனைத்து துறைகளிலும் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்கு அரசாங்கமே நேரடியாக பொறுப்புக்கூற வேண்டும். இந்த பிரச்சினைகளை தீர்த்து மக்களுக்கு நிவாரணங்களை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நாட்டை சீர்குலைத்து மக்களை கொல்லாமல் கொல்லாது நாட்டில் புதிய நிர்வாகம் ஒன்றை ஏற்படுத்துவதற்காக பொதுத் தேர்தலை நடத்த வேண்டும் எனவும் அந்த கட்சிகள் தெரிவித்துள்ளன. (அ-2)


## பருத்தித்துறை நகரசபை அறிவித்தல்

**திண்மக்கழிவகற்றல்**

திண்மக்கழிவகற்றல் தொடர்பாக உக்கக்கூடிய குப்பைகள் மட்டுமே எமது சபையால் அகற்றப்படும். மேலதிகமாக சேரும் உக்க முடியாத வாழைக்குற்றி போன்ற குப்பைகளுக்கு அலுவலகத்தில் 500 /= கட்டணம் செலுத்தும் பட்சத்தில் அக்குப்பைகள் எம்மால் அகற்றப்படும்.

மேலும் தங்கள் பகுதிக்குள் எமது உழவு இயந்திரம் வருகை தரும் தினத்தில் மட்டுமே உக்கக்கூடிய குப்பைகளை உரிய முறைப்படி பையினுள் கட்டி வைத்து ஒத்துழைப்பினை வழங்கவும். உழவு இயந்திரம் சென்றபின்னர் எக்காரணம் கொண்டும் குப்பைகள் தெருவோரத்தில் வைக்கப்படக்கூடாது. தங்கள் வீடுகளுக்கு முன்புறமாகவுள்ள தெருவோரங்களை தாங்களே துப்பரவு செய்து சுகாதாரம் பேணப்பட வேண்டும்.

தவிசாளர்
நகரசபை, பருத்தித்துறை.

(சி-6281)



## வெளிக்கள நிலையம் தொண்டைமானாறு ஆண்டுப் பொதுக்கூட்டம்

FWC

இடம்:- யாழ்.இந்துக் கல்லூரி
திகதி:-21.04.2012 சனிக்கிழமை முற்பகல் 10.30 மணி

தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டத்திற்கு அனைத்து உறுப்பினர்களையும் தவறாது சமுகம் கொடுக்கும் வண்ணம் வேண்டுகின்றோம்.

வெளிக்கள நிலையம்,
தொண்டைமானாறு.

(8098)

செயலாளர்.

# யாழ். திருநெல்வேலி திருவளர் மிகு ஸ்ரீ நீலாயதாட்சி அம்பிகா சமேத ஸ்ரீ காயாரோகண சுவாமி தேவஸ்தான மஹா கும்பாபிஷேக காட்சிகள்



புதுப்பொலிவு பெற்று நிற்கும் ஆலய முகப்புத் தோற்றம்

கம்பீரமாய் காட்சி தரும் இராஜ கோபுரம்

ஸ்ரீ காயாரோகண சுவாமிக்கு பூஜை....

ஆலய சுற்று விக்கிரகங்கள்

அழைத்து வரப்பட்ட பசு....

அந்தணர்கள் ஆசி வழங்கல்....

மூல மூர்த்தியை தளவாடியில் தரிசித்தல்...

அலை என திரண்ட அடியார்கள் கூட்டம்

# பாகிஸ்தானுடன் நெருக்கத்தை அதிகரிக்க விரும்புகிறோம்

## இலங்கை உயர்ஸ்தானிகர் அழைப்பு

(கொழும்பு)

பாகிஸ்தானுடனான வர்த்தக உறவுகளை மேம்படுத்திக் கொள்ள இலங்கை அதிக ஆர்வம் கொண்டுள்ளதென பாகிஸ்தானுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் ஜயலத் வீரகொடி தெரிவித்துள்ளார்.

இரு நாடுகளும் அரசியல் ரீதியில் சிறந்த நட்புறவைக் கொண்டு இயங்கி வருவதாகவும் வர்த்தக நடவடிக்கையிலும் இதனை கடைபிடிக்க எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பாகிஸ்தான் ராவல்பண்டியில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற பாகிஸ்தான் வர்த்தக சங்கத் தலைவர் ஜவாத் அக்தார் பாத்தியுடனான சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தொற்காசிய வலயத்தில் உள்ள பெரிய நாடுகளான பாகிஸ்தான்- இலங்கைக்கு இடையிலான வர்த்தக உறவுகள் வலய மட்டத்தில் நன்மைகளை ஏற்படுத்தக் கூடியதாக இருக்கும் என அவர் கூறியுள்ளார்.

இலங்கை- பாகிஸ்தானில் முதலீடுகளை செய்ய எதிர்பார்த்துள்ளதாகவும் பாகிஸ்தான் வர்த்தகப் பிரதிநிதிகள் இலங்கைக்கு விஜயம் செய்து சந்தை கேள்விகள் குறித்து ஆராய வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானும் இலங்கையும் சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ள போதும் இரு நாடுகளுக்கும் இடையில் மிகக் குறைவான 344 மில்லியன் டொலர் தொகை வர்த்தகமே இடம்பெற்று வருவதாக பாகிஸ்தான் வர்த்தக சங்கத் தலைவர் ஜவாத் அக்தார் பாத்தி இதன் போது சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே இலங்கை -பாகிஸ்தானுக்கு இடையிலான வர்த்தக உறவுகள் மேம்படுத்தப்பட வேண்டும் என அவர் கோரியுள்ளார். (அ-2)

# உதைபந்தாட்டப் போட்டி

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான அமரர் முருக்ர் வேலாயுதம் ஞாபகார்த்த சுற்றுக் கேடயத்துக்கான உதைபந்தாட்டப் போட்டி இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். மல்லாகம் மகா வித்தியாலய மைதானத்தில் உதவிக் கல்விப் பணிப்பாளர் மு.நடராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ.ராஜேந்திரன் , சிறப்பு விருந்தினராக பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆர். தமிழ்மாறன், கௌரவ விருந்தினராக ஓய்வு பெற்ற உப அதிபர் திருமதி கமலாதேவி வேலாயுதம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ)

# தொண்டு நிறுவன பணியாளர் படுகொலை; தொடர் விசாரணை நடத்த மீண்டும் முயற்சி

ஏ.சீ.எப். என்ற பிரெஞ்சு தொண்டு நிறுவன பணியாளர் படுகொலைச் சம்பவம் தொடர்பில் மீளவும் விசாரணைகளை ஆரம்பிக்க அந்நாட்டு தூதரகம் ஆர்வம் காட்டி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

2006 ஆம் ஆண்டு மூதூரில் ஏ.சீ.எப். அமைப்பைச் சேர்ந்த 17 தன்னார்வ தொண்டர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை மீள ஆரம்பிக்க பிரான்ஸ் தூதரகம் முயற்சித்து வருவதாகக் குறிப்பிடப்படுகின்றது. விசாரணைகள் தொடர்பில் பிரான்ஸ் தூதுவர் கிறிஸ்டின் ரொபிக் கோன் சட்டமா அதிபரை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

வழக்கு விசாரணைகள் தொடர்பில் தூதுவர் ரொபிக் கோன் சட்டமா அதிபரிடம் பல கேள்விகளை எழுப்பியுள்ளார்.

இதேவேளை, மூதூர் தன்னார்வத் தொண்டு பணியாளர் படுகொலை மற்றும் திருகோணமலை மாணவர் படுகொலை ஆகிய சம்பவங்கள் தொடர்பில் மீள விசாரணைகள் நடத்தப்படும் என முன்னாள் சட்டமா அதிபர் மொஹான் பீரிஸ் ஜெனீவா அமர்வுகளில் உறுதியளித்திருந்தார். சம்பவம் தொடர்பான விசாரணைகள் குறித்து சர்வதேச மன்னிப்புச் சபை கேள்வி எழுப்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# டிரான் அலஸ் மீது நிதி புலனாய்வு பிரிவு அழுத்தத்தை பிரயோகித்தது

## விக்கிலீக்ஸ் தகவல்

(கொழும்பு)

ஜனநாயத் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் டிரான் அலஸ் மீது அழுத்தங்களை பிரயோகிக்க அரசாங்கம் நிதிப் புலனாய்வுப் பிரிவினை பயன்படுத்திக் கொண்டதாக விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதரக அதிகாரிகளினால் அந்நாட்டு இராஜாங்கத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட குறிப்பில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

நிதிப் புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பொறுப்பாளர் டிரான் அலசின் சொத்துக்களை முடக்கும் உத்தரவில் கையொப்பமிட மறுத்ததாக குறிப்பிடப்படுகின்றது.

அரசாங்கத்தின் வற்புறுத்தல் காரணமாக நிதிப் புலனாய்வுப் பிரிவு பொறுப்பாளர் இந்த உத்தரவில் கையொப்பமிட்டார்.

மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ராலின் அழுத்தம் காரணமாக நிதிப் புலனாய்வுப் பிரிவு பொறுப்பாளர் சொத்துக்களை முடக்கும் உத்தரவில் கையொப்பமிட்ட தாக அமெரிக்கத் தூதரகம் அறிவித்துள்ளது.

உத்தரவில் கையொப்பமிட்டு சில தினங்களில் குறித்த அதிகாரி தமது பதவியை இராஜினாமா செய்துள்ளார். 2007 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 14 ஆம் திகதி அமெரிக்கத் தூதுவர் ரொபேர்ட் ஓ பிளேக்கினால் இந்த தகவல் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. டிரான் அலசின் சொத்துக்களை முடக்க பாதுகாப்பு அமைச்சிற்கு அதிகாரம் கிடையாது என நீதிமன்றம் அறிவித்திருந்தது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவசர காலச் சட்டத்தின் கீழ் பாதுகாப்பு அமைச்சினால் சொத்துக்களை மடக்க முடியாது என மற்றுமொரு நீதிமன்றம் அறிவித்திருந்தது என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# வடக்கு கிழக்கில் புலிகளின் செயற்பாடுகள் எதுவுமில்லை

## இராணுவப் பேச்சாளர்

(கொழும்பு)

உள்நாட்டு அரசாங்க வைத்தியர்கள் தனியார் சேவையில் ஈடுபடுவதில் சிக்கல் இல்லை என சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். 230 வைத்தியர்களுக்கான நியமனம் வழங்கும் நிகழ்வொன்றில் வைத்து மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அரசாங்க வைத்தியர்கள் தமது தேசிய சேவையை நிறைவு செய்ததன் பின்னர் சர்வதேச அளவிலான சேவைகளை மேற்கொள்ள அனுமதிக்கப்படுவர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்க வைத்தியர்கள் தமது பணிகளை முழுமையாக செய்வதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

இலட்சியத்தை அடைய கடக்க வேண்டிய தூரத்தை பற்றிக் கவலையில்லை. ஆனால் அதை நோக்கி முதல் அடி வைப்பதுதான் கடினமானது. -டூமார்க்வஸ்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# இலங்கை அரசைக் கண்டிப்போர் இந்தியக் குழுவிலிருந்து நீக்கம்

## திருமாவளவன் கண்டனம்

இலங்கையில் தமிழர் பகுதிகளில் நடக்கும் சீரமைப்பு பணிகளை பார்வையிட எம்.பி.க்கள் குழு அனுப்பப்படும் என்று பாராளுமன்றத்தில் பிரதமர் மன்மோகன் சிங் அறிவித்தார். இதையடுத்து எதிர்க் கட்சித் தலைவர் சுஷ்மா சுவராஜ் தலைமையில் எம்.பிக்கள் குழு அமைக்கப்பட்டுள்ளது.

இந்த குழுவில் தி.மு.க சார்பில் டி.கே.எஸ் இளங்கோவன் இடம் பெற்றுள்ளார்.

இது குறித்து நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் பேசியபோதே விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல்.திருமாவளவன் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

காங்கிரஸ் சார்பில் தமிழக எம்.பிக்கள் கிருஷ்ணசாமி, என்.எஸ்.வி.சித்தன், சுதர்சன நாச்சியப்பன், மாணிக் தாகூர் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

பா.ஜ.க சார்பில் வெங்கையா நாயுடு சேர்க்கப்பட்டுள்ளார். குழுவில் வடமாநில எம்.பிக்கள் சிலரும் உள்ளனர்.

ஆனால் இலங்கை அரசை கண்டிக்கும் கட்சிகள் இந்த குழுவில் சேர்க்கப்படவில்லை. குறிப்பாக ம.தி.மு.க, விடுதலை சிறுத்தைகள், இந்திய கம்யூனிஸ்ட் கட்சிகள் புறக்கணிக்கப்பட்டுள்ளன.

இலங்கைக்கு எதிர்வரும் 16 ஆம் திகதி இந்திய பாராளுமன்றக் குழு பயணமாகிறது. இதில் விடுதலை சிறுத்தைகள் புறக்கணிக்கப்பட்டு உள்ளனர். இலங்கை அரசின் நிர்ப்பந்தம்தான் இதற்கு காரணம்.

பிரபாகரனின் தாயார் இறந்த போது நான் இலங்கை சென்ற போது கொழும்பு விமான நிலையத்திலேயே தடுத்து நிறுத்தி திருப்பி அனுப்பி விட்டனர். இது இந்தியாவுக்கு அவமானம் என்றார். (அ-2)

# 51 ஆவது படைப்பிரிவின் புத்தாண்டு நிகழ்வுகள்

51 ஆவது படைப்பிரிவிற்கு இராணுவ வீரர்கள் தமது பிரிவிற்கு உட் பட்ட கிராமங்களின் பங்களிப்புடன் சித்திரைப் புத்தாண்டை நடத்த ஏற்பாடு செய்துள்ளதாக டி.பி.விக்கிரம ஆராச்சி அறிவித்துள்ளார்.

இதற்கமைவாக இந்நிகழ்வுகள் எதிர்வரும் 10 ஆம் திகதி காலை 6 மணிமுதல் பிற்பகல் ஒரு மணிவரை இப்படைப்பிரிவின் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதில் திறந்த சைக்கிளோட்டப் போட்டி (ஆண்கள்),திறந்த சைக்கிளோட்டப்போட்டி (பெண்கள்), மரதன் திறந்தபோட்டி (ஆண், பெண்), ஆண்களுக்கான கிறீஸ் மரம் ஏறும் (திறந்த போட்டி), கயிறு இழுத்தல் (ஆண்கள்), பெண்கள்), தலையணை சமர் (இராணுவ வீரர்கள்) யானைக்கு கண் வைத்தல் (திறந்தபோட்டி), குருடன் பானை உடைத்தல் (திறந்தபோட்டி), தடை தாண்டல் ஓட்டப் போட்டி (இராணுவ, சிவில் அதிகாரிகள்), பணிஸ்சாப்பிடுதல் (12 வயதுக்குகீழ்ப்பட்ட சிறுவர்களுக்கானது), பலூன் உடைத்தல் (12 வயதுக்கு கீழ்ப்பட்ட சிறுவர்களுக்கானது), முட்டை பிடித்தல் (திறந்தபோட்டி), வினோதவுடை (திறந்த போட்டி), சித்திரை அழகி (திறந்த போட்டி), சங்கீதக்கதிரை (திறந்தபோட்டி), என்பன நடைபெறவுள்ளன.

மேலும் ஆண்களுக்கான சைக்கிளோட்டப்போட்டி எதிர்வரும் 9 ஆம் திகதி காலை6மணிக்கும் பெண்களுக்கான சைக்கிளோட்டப்போட்டி 7 மணிக்கும் நடை பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## இசை நிகழ்வு

(மாவிட்டபுரம்)

இந்திய தேசிய விருது பெற்ற கலை இளமணி ஆர். காஷ்யப் மகேஷ்குழுவினரின் பக்தி இன்னிசை நிகழ்வு இன்று சனிக்கிழமை மாலை 3 மணிக்கு மாவிட்டபுரம் அருள்மிகு ஸ்ரீ கந்தசுவாமி திருக்கோவிலில் நடைபெறவுள்ளது.(அ)

## மஹோற்சவம்

யுத்தம் நிறைவடைந்த பின்னர் உருத்திரபுரம் மாணிக்கபிள்ளையார் வருடாந்த மகோற்சவம் கடந்த புதன் கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 11 நாட்கள் திருவிழா நடைபெறும்.

எதிர்வரும் 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை புதுவருடத்தினத்தன்று தேர்த் திருவிழா இடம்பெறும். (அ-3,254)

## தொலைக்காட்சியை தியாகம் செய்யத் தயாரா?

யாழ்ப்பாணம், கல்வியை மூலதனமாகக் கொண்ட மண். புத்திசாலிகளின் இருப்பிடம் என்ற பெருமையும் யாழ்ப்பாணத்திற்கு உண்டு.

இவையாவற்றுக்கும் மேலாக வாண்மை மிக்க ஆசிரியர்கள், பக்குவமான மாணவர்கள் என்ற பண்பாடுகளுக்கும் குறைவேயில்லை.

இப்படியாக இருந்த யாழ்ப்பாணத்தின் சமகால நிலைமை என்ன? என்று ஒருகணம் சிந்தித்தாக வேண்டும்.

பெற்றோர்களால் பிள்ளைகளைக் கண்காணிக்கவும் கட்டுப்படுத்தவும் முடியவில்லை.

ஆசிரியர்களுக்கு மரியாதை செலுத்தக்கூடிய மாணவர்கள் இல்லை.

வயது, பதவி என்பவற்றுக்கு அறவே மதிப்புக் கிடையாது.

இப்படியான நிலையில் தியாகத்தோடு கற்பிக்கும் ஆசிரியர்களை எதிர்பார்ப்பது முடியாத காரியமே.

இத்தகைய நிலைமைகள் எங்கள் பிள்ளைகளின் கல்வியை சங்காரம் செய்கின்றன.

இதற்கு மேலாக எனது பிள்ளையின் உயர்வுக்காக எங்கள் உணர்வுகளை, தேவைகளை, ஆசைகளைத் தியாகம் செய்ய வேண்டும் என்ற எண்ணம் பெற்றோருக்கும் கிடையாது.

சுருங்கக்கூறின் பெற்றோர்கள் தொலைக்காட்சி பார்ப்பதை தியாகம் செய்தால் போதும். எங்கள் பிள்ளைகளின் கல்வியை, அவர்களது ஒழுங்கு கட்டுப்பாட்டை தரம் மிக்கதாக நாம் உயர்த்தமுடியும்.

பெற்றோர்கள் தொலைக்காட்சிப் பெட்டிகளுக்கு முன்னால் குந்தியிருந்து தொடர் நாடகங்களின், கந்தறுப்புகளுக்கு கண்ணீர் விட்டு அழுது கொட்டிக் கொண்டிருக்க,

பிள்ளகைள் கையடக்கத் தொலைபேசியில் உரையாடல் இன்பத்தை அனுபவித்துக் கொண்டிருக்கின்றனர்.

நிலைமை இதுவாயின் எங்களுக்கு விடிவு எப்படிக்கிடைக்கும்?

இங்கு குறிப்பிடப்படுவதெல்லாம் பொருத்தமானவர்களுக்கேயாகும்.

எங்கள் மண்ணில் தொலைக்காட்சிப் பெட்டியை பெட்டிக்குள் பூட்டி வைத்தவர்கள் இருக்கிறார்கள்.

இன்னும் சிலர் செய்திக்காக- தகவலுக்காக மட்டும் தொலைக்காட்சியை பயன்படுத்துபவர்களும் உளர்.

இத்தகையவர்கள் தங்கள் பிள்ளைகளின் கல்வியிலும் அவர்களின் நடத்தைகளிலும் உயர் பெறுமானத்தை அடைந்துள்ளனர்.

எனவே, அன்புக்குரிய பெற்றோர்களே!

தொலைக்காட்சி பார்ப்பதை நாம் தியாகம் செய்வோமாயின், எங்கள் பிள்ளைகளின் வாழ்வியல் உயர்வைக் காண முடியும்.

எங்களால் எங்கள் பிள்ளைகளுக்காக தொடர் நாடகத்து ஆசையை துறக்கவில்லை என்றால் எங்கள் வயோதிபத்தில் எங்கள் பிள்ளைகள் எங்களை எப்படிப் பராமரிப்பார்கள்?

ஆகையால் எங்கள் பிள்ளைகளின் எதிர்காலம் ஏற்றம் மிகுந்ததாக அமைய,

தொலைக்காட்சிப் பெட்டிக்கு முன்னால் குந்தியிருந்து கற்பனைக் கவலையால் கண்ணீர் வடிக்கும் கொடூரத்தைக் கைவிடுவோம்.

இதற்கு அடுத்தபடியாக பிள்ளைகளின் கைகளில் இருக்கின்ற கையடக்கத் தொலைபேசிகளை பக்குவமாக நழுவச் செய்து புழுதிப் புதை குழியில் புதைப்போம். அந்தப் புதைகுழியில் இருந்து எங்கள் பெருவாழ்வு உயிர்த்தெழும். நம்புங்கள்; நாளைய உயிர்த்த ஞாயிறு மீது இது சத்தியம்.

## செயலமர்வு

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலயப் பாடசாலைகளின் இடைநிலை வகுப்புகளில் (தரம் 6 தொடக்கம் தரம் 9 வரை) 2 ஆம் மொழியினை (சிங்களம்) கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான பயிற்சிச் செயலமர்வு நாளை ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை காலை 8.30 மணிக்கு மாங்குளம் ஆசிரியர் வள மத்திய நிலையத்தில் நடைபெறவுள்ளதாக துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி எல்.மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார். (ந)

## பொங்கல் விழாவும் குளிர்த்தியும்

மாவிட்டபுரம்-வீணியவரை ஸ்ரீ இராஜ இராஜேஸ்வரி அம்பாள் தேவஸ்தானத்தில் பங்குனித்திங்கள் பொங்கல் விழாவும் குளிர்த்தியும் நாளை மறுதினம் திங்கட்கிழமை பகல் நடைபெறவுள்ளதாக தேவஸ்தான பிரதம குரு அறிவித்துள்ளார். (அ)

## சங்கராந்தி அபிஷேகம்

மாவிட்டபுரம்-வீணியவரை ஸ்ரீ இராஜஇராஜேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் எதிர்வரும் 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு வருடசங்கராந்தி அபிஷேகம் விசேட பூசைகள் என்பன நடைபெறவுள்ளதாக ஆலய பிரதம குரு பிரம்மஸ்ரீ அ.துரைசாமி ஐயர் அறிவித்துள்ளார். (அ)

# வாகன உடைமை மாற்ற படிவம் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

வாகன உடைமை மாற்றம் தொடர்பான பாவனையிலுள்ள எம்ரி ஏ-6, 8 படிவங்களைப் பொதுமக்கள் எவ்வித கட்டணமுமின்றி தமது பிரதேச செயலகங்களில் பெற்றுக் கொள்ள முடியும்.

வெளியிடங்களில் விற்கப்படும் படிவங்களைப் பெற்றுக்கொள்வதைத் தவிர்க்கு மாறும் யாழ். மாவட்ட செயலகப் போக்குவரத்துத் திணைக்களத்தின் சார்பில் அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் அறிவித்துள்ளார்.

மேலும் குறித்த படிவங்கள் தனியார் கடைகளில் விற்பனை செய்யப்படுவது தண்டனைக்குரிய குற்றமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

### உன்னை மறைத்துக்கொள்



மனிதனிடம் உள்ள சுயநலத்தை வெளியேற்றி னால் மறுபக்கம் வழியாக இறைவன் நுழைகிறான். சுயநலம் அகன்றுவிட்டால் இறைவன் மட்டுமே இதயத்தில் இருப்பான்.

விக்கிரகத்தை கடவுள் என்று கூறலாம். கடவுளையே விக்கிரகமாக நினைக்கும் தவறைத் தவிர்க்க வேண்டும்.

நாமே நமக்கு சொர்க்கத்தை உருவாக்கிக் கொள்கிறோம். நரகத்தில் கூட சொர்க்கத்தை உருவாக்க நம்மால் முடியும்.

நாம் அன்பிற்காகக் கடவுளை அன்பு செய்ய வேண்டும். கடமைக்காகக் கடமை செய்ய வேண்டும்.

நம்மிடமுள்ள தெய்வீக இயல்பை வெளிப்படுத்துவதற்கான ஒரே வழி பிறர் தங்கள் தெய்வீக இயல்பை வெளிப்படுத்துவதற்கு உதவி செய்வது தான்.

இறைவன் தன்னை நன்றாக மறைத்துக் கொண்டு மகத்தான செயல்களில் ஈடுபடுகிறான். அதே போல் ஒருவன் தன்னை மறைத்துக் கொண்டு (தன் செயல்பாடுகளைப் பற்றி பெருமையடிக்காமல்) செயல்பட்டால் உலகில் சாதிக்க முடியும்.

# பாக்.கிற்குரிய மதிப்பை வழங்கினால் மட்டுமே உறவு வலுப்பெறும்

## ஜனாதிபதி சர்தாரி திட்டவட்டம்

(லாகூர்)

பாகிஸ்தானுக்கு உரிய மதிப்பை அளித்தால்தான் அமெரிக்காவுடனான உறவு வலுவடையும் என்று அமெரிக்காவிடம் பாகிஸ்தான் ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரி திட்டவட்டமாக கூறியுள்ளார்.

அமெரிக்காவின் வெளியுறவுத் துறை துணை அமைச்சர் தாமஸ் நிடெல் பாகிஸ்தான் ஜனாதிபதி சர்தாரியை நேற்று முன்தினம் லாகூரில் சந்தித்துப் பேசினார். அப் போது பாகிஸ்தான் தரப்பிலான கருத்துக்களை சர்தாரி முன்வைத்தார்.

பயங்கரவாதிகளை ஒழிக்கின்றேன் என்கிற பெயரில் பாகிஸ்தானில் பழங்குடியின மக்கள் வசிக்கும் பகுதியில் ஆளில்லா விமானம் மூலம் நடத்தப்படும் தாக்குதலில் அப்பாவிப் பொதுமக்கள் பலர் உயிரிழந்துள்ளனர்.

இது மிகவும் கவலையளிக்கும் விடயமாகும். இது பாகிஸ்தானின் இறையாண்மைக்கு எதிரானது.

இதுபோல சொந்த மக்களைக் காப்பதற்குப் பதில் அவர்கள் மீது தாக்குதல் நடத்தும் விமானங்களுக்கு விமான தளத்தில் அனுமதி அளிப்பது உள்ளிட்ட செயல்கள் உள்ளூர் மக்களிடையே அரசின் மீது அவநம்பிக்கையை ஏற்படுத்தும். அனைத்துக்கும் மேலாக கடந்த ஆண்டு நவம்பர் மாதம் பாகிஸ்தானின் எல்லைப் பகுதியில் நேட்டோ படையினர் நடத்திய வான் வழித்தாக்குதலில் 24 இராணுவ வீரர்கள் உயிரிழந்தனர்.

இது நாட்டு மக்களிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இது குறித்து விசாரிக்க நாடாளுமன்ற குழு அமைக்கப்பட்டுள்ளது.

இக்குழு அளிக்கும் அறிக்கையை முழுமையாக விவாதித்த பின்னரே நேட்டோ படைகளுக்கு பாகிஸ்தான் வழியாக பாதையைத் திறந்து விடுவது குறித்து முடிவு எடுக்கப்படும் என்று சர்தாரி கூறினார்.

போதைப் பொருட்கடத்தல், தீவிரவாத குழுக்களுக்கு நிதி உதவி உள்ளிட்ட விடயங்கள் இப்பிராந்தியத்தில் மிகப் பெரும் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது.

இவ்விரண்டு விடயங்களும் உடனடியாக கவனிக்கப்படவேண்டியவை என்றும் தாமஸ் நிடெசிடம் சர்தாரி குறிப்பிட்டார்.

நேட்டோ படைகள் இந்த விடயத்தை தீவிரமாக கண்காணித்து எல்லையில் போதைப் பொருள் கடத்தலை தடுக்கும். அதேநேரத்தில் தீவிரவாதக் குழுக்களுக்கு நிதி உதவி கிடைப்பதையும் முற்றிலுமாக ஒழிக்க வேண்டும் என்றார்.

(அ-2)





# மியன்மாரின் சீர்திருத்தத்திற்கு தேர்தல் முடிபு ஒரு முன்னோடியாகும்

## பான் கீ மூன் புகழாரம்



மியன்மார் நாட்டு பாராளுமன்ற இடைத் தேர்தல் அமைதியான முறையில் நடந்ததற்கு அந்த நாட்டு மக்களை ஐக்கிய நாடுகள் சபை பொதுச் செயலாளர் பான் கீ மூன் பாராட்டியுள்ளார்.

மியன்மார் நாட்டில் இராணுவ ஆட்சி நடைபெற்று வருகின்றது. இந்த சூழ்நிலையில் அங்கு பாராளுமன்றத்தில் 45 இடங்களுக்கு இடைத்தேர்தல் நடைபெற்றது. இதில் ஆங்சாங் சூகி தலைமையிலான எதிர்க்கட்சி 43 இடங்களில் வெற்றி பெற்றுள்ளது. மேலும் இராணுவ ஆட்சி நடக்கும் நாட்டில் தேர்தல் அமைதியாகவும் நேர்மையாகவும் நடந்ததாக கூறப்படுகின்றது. இதற்கு அவர் பாராட்டு தெரிவித்துள்ளார். மியன்மார் நாட்டில் மேற்கொள்ளப்படவிருக்கும் சீர்திருத்தத்திற்கு இந்த தேர்தல் முடிபு ஒரு முன்னோடியாகும் என்று அவர் கூறியுள்ளார். மியன்மார் நாட்டில் இராணுவ ஆட்சியை முடிவுக்கு கொண்டு வந்து அங்கு ஜனநாயகத்தை ஏற்படுத்தும் நடவடிக்கையாக பாராளுமன்றத்தில் 48 இடங்களுக்கு இடைத்தேர்தல் நடைபெற்றது. (அ-2)



ஈஸ்டர் பண்டிகை நாளை ஞாயிற்றுக்கிழமை கொண்டாடப்பட இருப்பதையொட்டி உக்ரைன் தலைநகர் கீவ் நகர வீதியோர மரங்கள் மீது தொங்கவிடப்பட்டுள்ள ஈஸ்டர் முட்டைகளைப் படத்தில் காணலாம்.

# சிரியாவிலிருந்து துருக்கிக்கு தஞ்சம் கோரும் அகதிகள் அதிகரிப்பு



சிரியாவில் இருந்து தப்பி ஓடும் பொதுமக்களின் எண்ணிக்கை மிகவும் வேகமாக அதிகரித்துள்ளதாக துருக்கி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

துருக்கியின் எல்லை நகரங்களில் ஒன்றான ரெய்கன்லியில் இருந்து வரும் தகவலின் படி சுமார் ஆயிரம் அகதிகள் துருக்கியை வந்தடைந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இது கடந்த மாதங்களை விட மிக அதிகமாகும்.

இதுவரை 24 ஆயிரத்திற்கும் அதிகமான மக்கள் துருக்கியில் தஞ்சமடைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் அமைதி உடன்படிக்கை ஒன்றை அமுல்படுத்த விளையும் நிலையில் ஐ.நா. அரபு லீக்கின் சிரியாவுக்கான தூதுவரான கோபி அனான் சிரிய அரசாங்கத்தின் முக்கிய கூட்டாளி நாடான ஈரானுக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார். இத்தகவலை அவரது பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# சயீத்தின் மறைவிட ஆதாரத்தை தாருங்கள்; பாகிஸ்தானுக்கு அமெரிக்கா நெருக்கடி

தீவிரவாதி சயீத் மறைவிடம் பற்றிய ஆதாரங்களை தரும்படி பாகிஸ்தானுக்கு அமெரிக்கா நெருக்கடி கொடுத்துள்ளது. ஹபீஸ் சயீத்துக்கு எதிராக கடுமையான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு பாகிஸ்தானுக்கு அமெரிக்கா நெருக்கடி கொடுத்துள்ளது. அவனது இருப்பிடம் மற்றும் அவனை பற்றிய பலமான ஆதாரங்களை தரும்படியும் அமெரிக்கா வற்புறுத்தி வருகிறது. சயீத் மட்டுமன்றி அவரது மைத்துனரும் தீவிரவாத அமைப்பின் மற்றொரு தலைவருமான அப்துல் ரஹ்மான் மக்கி என்பவனுக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்க அமெரிக்கா வலியுறுத்தி வருகின்றது.

இது தொடர்பாக அமெரிக்க வெளியுறவுதுறை செய்தித் தொடர்பாளர் மார்க்டோனர் அளித்த பேட்டியில் கூறியிருப்பதாவது, சயீத் மற்றும் அப்துல் ரஹ்மான் மக்கி ஆகிய இருவரும் எங்கு இருக்கின்றார்கள் என்பது பாகிஸ்தானுக்கு நன்கு தெரியும். இருவரும் பாகிஸ்தானில் சுதந்திரமாக நடமாடி வருகின்றார்கள். இது குறித்து அங்குள்ள ஒவ்வொரு பத்திரிகையாளருக்கும் கூட நன்கு தெரியும். இருவரையும் எவ்வாறு கண்டுபிடிப்பது என்பது எங்களுக்கும் நன்றாகவே தெரியும். ஆனாலும் பாகிஸ்தான் அரசிடம் இருந்து தகவல் வர வேண்டும் என்றே எதிர்பார்க்கின்றோம். சயீத் பற்றிய உறுதியான ஆதாரங்கள் பாகிஸ்தானிடம் கேட்டிருக்கின்றோம். அந்த தகவல்களை வைத்தே சயீத்தை நீதிமன்றில் நிறுத்தி தண்டனை பெற்று தர முடியும். அமெரிக்காவில் உள்ள நீதிமன்றிலோ அல்லது வெளிநாட்டு நீதிமன்றிலோ அவன் நிறுத்தப்பட்டு தண்டனை உறுதியாக வாங்கித் தர முடியும் என அவர் கூறினார். (அ-2)

# இந்திய மாணவர்களின் வேலைவாய்ப்பு விசாவை இங்கிலாந்து இரத்து செய்தது

(லண்டன்)

இங்கிலாந்தில் உயர் படிப்பை முடிக்கும் இந்திய மாணவர்கள் தொடர்ந்து 2 ஆண்டுகளுக்கு வேலை செய்வதற்கு தரப்படும் விசாவை அந்நாட்டு அரசு இரத்து செய்துள்ளது.

மேல்படிப்புக்காக இங்கிலாந்து செல்ல நினைப்பவர்களுக்கு இது அதிர்ச்சி அளிப்பதாக உள்ளது. இங்கிலாந்து பல்கலைக்கழகங்களில் உயர்பட்டப்படிப்பை முடிக்கும் இந்திய மாணவர்கள் படிப்புக்குப் பின் பணி என்ற திட்டத்தின் கீழ் 2 ஆண்டுகளுக்கு வேலை செய்யும் வகையில் விசா வழங்கப்படுகிறது.

ஐரோப்பிய யூனியன் அல்லாத ஏனைய அனைத்து நாடுகளைச் சேர்ந்த மாணவர்களுக்கும் இது பொருந்தும்.


படிப்பை முடித்தவுடன் 2 ஆண்டுகளுக்கு வேலை உறுதி என்பதால் படிப்பு செலவை நிச்சயம் எடுத்து விடலாம் என்ற நம்பிக்கையில் இந்திய மாணவர்கள் செலவை பற்றி கவலைப்படாமல் இங்கிலாந்து செல்கிறனர்.

இந்நிலையில் இதுபோன்ற விசாவை இன்று முதல் இரத்து செய்வதாக அந்நாட்டு உள்துறை அலுவலகம் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளது. இப்போதைய பிரதமர் டேவிட் கமரூன் தேர்தல் பிரசாரத்தின் போது வெளிநாட்டினர் வருகையை கட்டுப்படுத்துவேன் என வாக்குறுதி அளித்திருந்தார். அதன்படி இந்த அறிவிப்பு வெளியாகி இருப்பது குறிப்பிடத்தக்கது.

இதனால் இந்த ஆண்டு படிப்பை முடிக்கும் மாணவர்களும் வேறு வழியில் விசா பெற்றால் மட்டுமே தொடர்ந்து இங்கிலாந்தில் பணியாற்ற முடியும்.

இல்லாவிட்டால் தாயகம் திரும்ப வேண்டியது தான். மேலும் அரசின் "இந்த முடிவால் வெளிநாட்டு மாணவர்கள் வருகை கடுமையாக பாதிக்கும் என பல்கலைக்கழகங்களும் பிரிட்டிஷ் கவுன்சிலும் எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

(அ-2)



மத்திய கிழக்கு நாடுகளுக்கான அமெரிக்காவின் சிறப்புத்தூதர் டேவிட் ஹாலே (இடது) ரமலாநகரில் பாலஸ்தீன ஜனாதிபதி முகம்மது அப்பாஸ்சை சந்தித்ததைப் படத்தில் காணலாம்.

# கொழும்பு டெஸ்ட்: இலங்கை மீண்டும் முன்னிலை



இங்கிலாந்துக்கு எதிரான இரண்டவது டெஸ்ட் போட்டியின் நான்காம் நாளான நேற்று இலங்கை அணி அதிரடியாக விளை யாடி மீண்டும் முன்னணியில் உள்ளது.

இலங்கை-இங்கிலாந்து அணிகள் மோதும் இரண்டாவது டெஸ்ட் போட்டி கொழும்பில் நடைபெற்று வருகின்றது.

முதல் இன்னிங்ஸில் இலங்கை அணி 275 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களை யும் இழந்தது. இரண்டாம் நாள் ஆட்டநேர முடிபில் இங்கிலாந்து அணி ஒரு விக்கெட்டை இழந்து 154 ஓட்டங்களை எடுத்திருந்தது.

நேற்று முன்தினம் மூன்றாம் நாள் ஆட் டத்தில் இங்கிலாந்து அணியின் திரோட், குக் அபார ஆட்டத்தை தொடர்ந்தனர். குக் (94) சதம் அடிக்கும் வாய்ப்பை நழுவ விட்டார். ஹேரத் சுழலில் திரோட் 64 ஓட்டங்களுக்கு சிக்கினார்.

பின் அசத்தலாக ஆடிய பீற்றர்சன், டெஸ்ட் அரங்கில் தனது 20-வது சதம் அடித்தார். இவர் 151 ஓட்டங்களில் ஹேரத்தின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார்.

இயன் பெல் (18), பிரையர் (11) சோபிக்க வில்லை. சமித் பட்டேல் 29 ஓட்டங்கள் எடுத்தார்.

இறுதியில் இங்கிலாந்து அணி முதல் இன்னிங்ஸில் 460 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது.

இதன்மூலம் 185 ஓட்டங்களால் முன் னிலை பெற்றது.


இலங்கை சார்பில ஹேரத் 6 விக்கெட் டுக்களையும், டில்சான் 2 விக்கெட்டுக்களை யும் கைப்பற்றினர்.

பின்னர் இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த இலங்கை அணி மூன்றாம் நாள் ஆட்டநேர முடிபில் விக்கெட் இழப்பின்றி 4 ஓட்டங்களை எடுத்திருந்தது.

181 ஓட்டங்கள் பின்னிலைய்யில் இலங்கை அணி நான்காம் நாளான நேற்று ஆட்டத்தை ஆரம்பித்தது.

ஆரம்ப வீரராக களமிறங்கிய தம்மிக பிரசாத் 5 பவுண்டரியுடன் 34 ஓட்டங்கள் எடு த்து, டில்சானுடன் இணைந்து 41 ஓட்டங் களைச் சேர்த்தபோது பிரசாத், ஸ்ரீபன் பின் னின் பந்துவீச்சில் பிரஸ்னனிடம் பிடிகொ டுத்து ஆட்டமிழந்தார்.

டில்சானும், சங்கக்காரவும் இணைந்து அணியின் ஓட்ட எண்ணிக்கையை 104 ஓட்டங்களுக்கு உயர்த்தினர். டில்சான் 35 ஓட்டங்கள் எடுத்திருந்தபோது சுவான் வீசிய பந்து துடுப்பில் பட்டு பிடியில் ஆட்டமிழந் ததாக கருதி நடுவர் தீர்ப்பு கொடுத்தார்.



டில்சான் முறையீடு செய்தார். ஆனால் மறுபரிசீலனையிலும் சரியாக தெரியாத போதே நடுவர் தீர்ப்பு சரியென்று ஆட்டமிழந் ததாக அறிவிக்கப்பட்டது.

சங்கக்கார 21 ஓட்டங்களில் ஆட்டமிழந் தார். பின்னர் களமிறங்கிய திலான் சமரவீரவும் 47 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.


அடுத்து களமிறங்கிய சுராஜ் ராண்டீவ் ஓட்டங்கள் எதுவுமின்றி ஆட்டமிழந்தார்.

நான்காம் நாள் ஆட்டநேர முடிபில் இலங்கை அணி 91 ஓவர்களில் 6 விக்கெட் டுக்களை இழந்து 218 ஓட்டங்கள் எடுத்து 33 ஓட்டங்கள் முன்னிலைய்யில் உள்ளது.

அணித் தலைவர் மஹேல ஜெயவர்த்தன 55 ஓட்டங்களுடனும், அஞ்சலோ மத்யூஸ் 3 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் களத்தில் உள்ளனர்.

இங்கிலாந்து அணி சார்பில் கிரேம் சுவான் அதிகபட்சமாக 4 விக்கெட்டுக்களைகைப்பற்றினார்.

## மும்பையை சொந்த மண்ணில் வீழ்த்தி புனே வாரியர்ஸ் 29 ஓட்டங்களால் வெற்றி




ஐ.பி.எல். கிரிக்கெட் தொடரில் மும்பை இந்தியன்ஸ் அணிக்கு எதிராக நேற்றைய ஆட்டத்தில் புனே வாரியஸ் அணி 29 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றிபெற்றது.

ஐந்தாவது ஐ.பி.எல். இருபது-20 கிரிக்கெட் தொட ரின் மூன்றாவது ஆட்டத்தில் மும்பை இந்தியன்ஸ்- புனே வாரியஸ் அணிகள் மோதின.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற மும்பை இந்தி யன்ஸ் அணியின் அணித் தலைவர் ஹர்பஜன்சிங் களத் தடுப்பை தெரிவு செய்தார்.

இதனையடுத்து புனே வாரியஸ் அணி துடுப்பெடுத் தாடத் தொடங்கியது. தொடக்க வீரராக களமிறங்கிய மணிஸ் பாண்டே ஓட்டங்கள் எதுவு மின்றி மலிங்கவின் பந்துவீச் சில் ஆட்டமிழந்தார். மற்றொரு தொடக்க ஆட்டக்காரரான அணித் தலைவர் சௌரவ் கங்குலியும் மூன்று ஓட்டங்களிலேயே ஆட்டமிழந்தார்.

அடுத்து களமிறங்கிய வேய்ன் பர்னெல் 11 ஓட்டங்களிலும் கல்லம் ஃபெர்குசன் 12 ஓட் டங்களிலும் ஆட்டமிழந்தனர். பின்னர் களம் இறங்கிய ராபின் உத்தப்பா 36, ஸ்டிவன் சிமித் 39 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழந்தனர். மும்பை வீரர்களின் பந்துவீச்சில் புனே அணியின் விக்கெட்டுக்கள் சரிய தொடங்கியது.

மற்ற வீரர்கள் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர். ராகுல்சர்மா ஓட்டங்கள் ஏதுமின்றி ஆட்டமிழந்தார்.

இறுதியில் புனோ வாரியஸ் அணி 20 ஓவரில் 9 விக்கெட் இழப்பிற்கு 129 ஓட்டங்கள் எடுத்தது.

மும்பை அணி தரப்பில் லசித் மலிங்க, முனாப் பட்டேல் ஆகிய இருவரும் தலா 2 விக்கெட்டும் ஹர்பஜன் சிங், ஓஜா, பொல்லார்ட் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டும் கைப் பற்றினர்.

இதனையடுத்து 130 ஓட்டங்கள் இலக்குடன் மும்பை இந்தியன்ஸ் அணி களமிறங்கியது. முதல் ஆட்டத்தில் ஆட்டநாயகன் விருதைத் தட்டிச்சென்ற தொடக்க வீரர் ரிச்சர்ட் லெவி ஓட்டங்கள் எதுவும் இன்றி ஆட்டமிழந்தார்.


மற்றொரு தொடக்க ஆட்டக்காரரான அம்பதி ராயுடு ஒரே ஒரு ஓட்டத்திலேயே கார்த்திக் பிடியில் ஆட்டமிழந்தார். அடுத்துக் களம் இறங்கிய ரோகித் சர்மாவும் ஒரு ஓட்டத்தில் உத்தப்பா பிடியில் ஆட்டமிழந்தார்.

அடுத்துக்களமிறங்கிய ஜேம்ஸ் பிராங்களினும் ; தினேஷ் கார்த்திக்கும் தலா 32 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தனர்.

அடுத்துக் களமிற்ங்கிய சூரியகுமார் யாதவ் ஓட்டங்கள் ஏதுமின்றி சாமுவேல்ஸ் பந்தில் ஆட்டமிழந்தார். அடுத்தடுத்து விக்கெட்டுக்கள் சரிந்தன.

இறுதியில் மும்பை இந்தின்ஸ் அணி 20 ஓவரில் 9 விக்கெட் இழப்பிற்கு 100 ஓட்டங்கள் மட்டுமே எடுத்து 29 ஓட்டங்கள் வித்தியாசத்தில் படுதோல்வியடைந்தது.

## ராஜஸ்தான் அணி 31 ஓட்டங்களால் கிங்ஸ் லெவின் பஞ்சாப்பை வென்றது



ஐ.பி.எல்.சீசன் 5 தொடரின் 4-வது ஆட்டம் நேற்று ஜெய்ப்பூரில் நடைபெற்றது.

இதில் ராகுல் ராவிட் தலைமையிலான ராஜஸ்தான் றோயல்ஸ் அணியும், அடம்ஸ் கில்கிறிஸ்ட் தலைமையிலான கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணியும் மோதின.

நாயணச் சுழற்சியில் வென்ற பஞ்சாப் அணி முதலில் பந்து வீச்சை தேர்வு செய்தது.

இதனால் ராஜஸ்தான் றோயல்ஸ் அணி துடுப்பெடுத்தாடக் களமிறங்கியது.

இந்த அணியின் அணித் தலைவர் ராகுல் ராவிட்டும், அஜின்கிய ராகானேவும் ஆரம்ப வீரர்களாக களமிறங்கினர்.

ராவிட்டும், ரகானேயும் அதிரடி ஆட்டத்தில் ஈடுபட்டனர்.

சிறப்பாக ஆடிய ராவிட் 28 ஓட்டங்கள் எடுத்திருந்தபோது ஆட்டமிழந்தார்.

அடுத்த வந்த மனேரியா ஓட்டக்கணக்கை ஆரம்பிக்காமலேயே ஆட்டமிழந்தார்.

இவரையடுத்து ரகானேயுடன் பிரட் ஹட்ஜ் ஜோடி சேர்ந்தார்.

ரஹானே அதிரடியால் அணியின் ஓட்ட எண்ணிக்கை வேகமாக உயர்ந்தது.

ரகானே 98 ஓட்டங்களில் ஆட்டமிழந்து சதமடிக்கும் வாய்ப்பை தவறவிட்டார்.

ஹாட்ஜ் 21 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.பின்னர் வந்த ஷா 14 ஓட்டங்களும் ஹுப்பர் 11 ஓட்டங்கள் எடுத்தும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இறுதியில் 20 ஓவர்கள் முடிபில் ராஜஸ்தான் றோயல்ஸ் அணி 4 விக்கெட்டு இழப்பிற்கு 191 ஓட்டங்களைக் குவித்தது.

பின்னர் 192 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் கமிறங்கிய பஞ்சாப் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட் இழப்பிற்கு 160 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது.

இதனால் ராஜஸ்தான் றோயல்ஸ் அணி 31 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

**இன்றைய போட்டிகள்:**

**இரவு 8 மணிக்கு :சென்னை-டெக்கான் சார்ஜர்ஸ்**

**மாலை 4 மணிக்கு :பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் -டில்லி டேர்டெவில்ஸ்**

# தென்மராட்சியில் இன்று புலமைபரிசில் பரீட்சை

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளிலுள்ள தரம் 5 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பயிற்சிப் பரீட்சை இன்று காலை 8 மணிக்கு 8 நிலையங்களில் நடைபெறுகின்றது.

இப் பரீட்சைக்கான அனுசரணை தெய்வானைப்பிள்ளை ஞாபகார்த்தமாக ஆசிரியர் க.தவயோகராஜா வழங்கவுள்ளார். (ந)

# ஆளுங்கட்...

அமெரிக்க பொருட்களை நிராகரித்து காலனித்துவ ஆதிக்கத்தை முறியடிக்கும் வித்தையை எமக்கு கற்றுக் கொடுத்துள்ளார் என ரில்வின் சில்வா குறிப்பிட்டார்.

மேலும், மின்குமிழ்களை மக்கள் இரவு நேரத்திலேயே மிகவும் அதிகமாக பயன்படுத்துவதர்ல் மின்குமிழ்களின் தேவை உண்மையில் இரவு நேரத்திலேயே வேண்டப்படுகின்றன.

இவ்வாறான ஓர் நிலைமையில் மற்றுமொரு மந்திரவாதியான அமைச்சர் சம்பிக்க ரணவக்க இரவு 8 தொடக்கம் 10 மணிவரை மின்குமிழ்களை அணைக்குமாறு கோருகின்றார். இது மிகவும் வேடிக்கையாக உள்ளது என ரில்வின் சில்வா குறிப்பிட்டார். (ந-8,11)

**CAC College of Arts & Commerce**
கந்தர்மடம் சந்தி, பலாலி வீதி, யாழ்.
A/L 2014, 2013 வர்த்தக பிரிவு
ஆரம்பம்: இன்று மாலை 3 மணிக்கு
கணக்கீடு: R.சுகிர்தன்
பொருளியல்: K.பிரதீபன்
வணிககல்வி: J.ராம்
(8124)
A/L 2014 ஆரம்ப தேர்ச்சியிலிருந்து
A/L 2013 புதிய தேர்ச்சிகள்
கணக்கீடு பங்குடமை
பொருளியல் தேர்ச்சி 4+5
பேரினப் பொருளாதாரம்...
தனிப்பாட அனுமதியும் வழங்கப்படும்
கலைப் பிரிவு திங்கள் 4 மணிக்கு
மேலதிக விபரங்கள் நாளை...

**தேவை**
யாழ் பல்கலைக் கழகத்தில் கல்வி க்கற்கும் மாணவர் ஒருவருக்கு திருநெல்வேலியை அண்மித்த பகுதிகளில் போதிய வசதிகளுடன் பாதுகாப்பான தங்குமிடம் தேவை.
தொடர்புகளுக்கு:-
078 3679510
(8058)

புதிய **நாவலர் கல்வி நிலையம்**
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்திசந்தி, யாழ்.
**O/L Day Class**
ஆரம்பம்: 09.04.2012 திங்கள் காலை 8 மணி
"கடந்த வருட O/L Day Class பிரிவில் 90% மாணவர்களை சித்தி அடைய வைத்த ஒரே ஒரு கல்வி நிலையம்"
(C-6292)
அனுமதிகளை உடன் பதிவு செய்யவும்

**Excavator விற்பனைக்கு**
HITACHI 80, IHI 30 ஆகிய இரு EXCAVATORS விற்பனைக்குண்டு. சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் பார்வையிடலாம்.
விபரங்களுக்கு:-
0777 266801
(8097)

# த.தே.கூட்டமைப்புக்கு அர...

இருப்பினும் சிவில் நிர்வாகம் மீண்டும் ஏற்படுத்தப்படவேண்டும்எனஅவர்கள்விரும்புகின்றனர். அவர், 13 ஆவது திருத்தத்தை தனது இலக்காக வைத்திருப்பதாக எனக்கு மிகத் தெளிவாகக் கூறினார்.

சகல கட்சிகளும் 13 ஆவது திருத்தத்தை ஏற்றுக்கொண்டுள்ளதால் நாடாளுமன்ற தெரிவுக்குழு தேவையற்றது என த.தே. கூட்டமைப்பு தலைவர் கருதுகின்றார்.

வடபகுதிக்கான தனது விஜயத்தை முடித்துக் கொண்ட நேஸ்பி பிரபு, அங்கு நடைபெறும் கண்ணிவெடி அகற்றும் பணிகள், மீள்குடியேற்ற நடவடிக்கைகளை வியந்து பேசினார்.

இந்த செயற்பாடுகளின் கடினத்தன்மையை சர்வதேச சமூகம் அறியாதுள்ளது என அவர் கூறினார்.

இடம்பெயர்ந்த முஸ்லிம்களின் பிரச்சினைகள் குறித்து ஜனாதிபதியை தான் சந்திக்கும்போது பேசவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

உலகத் தமிழர் பேரவை, பிரித்தானிய தமிழர் பேரவை என்பவற்றின் செல்வாக்குக்கு அப்பால் த.தே.கூட்டமைப்பு இருப்பதாக நான் கருதுகின்றேன்.

சனல் 4 வீடியோ குறித்து அவர் கூறும்போது, பகுதியளவில் அரசாங்கத்துக்கு சொந்தமான ஒரு தொலைக்காட்சி இவ்வாறான உண்மைக்குப் புறம்பான விடயங்களை கொண்ட ஆவணத்தை வெளியிட்டமை சரியானது அல்ல. இலங்கையில் நடைபெறும் இலங்கை-இந்திய போட்டிகளை பி.பி.சி ஒளிபரப்புவதைத் தடுக்க சனல் 4 முயன்றமை தொடர்பான பிரச்சினையை தான் கருத்திலெடுக்கப் போவதாகவும் அவர் தெரிவித்தார்.

தனது இலங்கை விஜயத்தின் போது அமைச்சர்கள் ஜீ.எல்.பீரிஸ், ரவூப் ஹக்கீம், றிசாத் பதியூதீன், வாசுதேவ நாணயக்கார, பசில் ராஜபக்ஷ, கோத்தபாய ராஜபக்ஷ, டக்ளஸ் தேவானந்தா, எதிர்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரை சந்தித்தார்.

யாழ்ப்பாணம், வவுனியா, அம்பாந்தோட்டை, காலி ஆகிய பிரதேசங்களுக்கு விஜயம் செய்த அவர் யாழ்.ஆயர், வடமாகாண ஆளுநர், யாழ்.கிளிநொச்சி அரசாங்க அதிபர்கள், வர்த்தக - கைத்தொழில் சம்மேளனம், பிரித்தானிய உயர்ஸ்தானிகர் ஆகியோரையும் சந்தித்தார். (ந-8,11)

# இந்தியாவுடன் செய்த ஒப்...

இதற்கமையவே இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் சிறியரக மோட்டார் வாகனங்கள், முச்சக்கர வண்டிகள், மோட்டார் சைக்கிள்கள் ஆகியவற்றுக்கான இறக்குமதி வரியை அரசாங்கம் அதிகரித்துள்ளது.

சிறியரக வாகனங்களுக்கு இறக்குமதிவரி அதிகரிக்கப்பட்ட போதிலும் இந்தியாவைத் தவிர்ந்த ஏனைய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் சொகுசு வாகனங்களுக்கான வரி அதிகரிக்கப்படவில்லை.

இவ்வாறு வரி அதிகரிக்கப்பட்டதன் மூலம் இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் மாருதி வாகனம், டாட்டா நேனோ மோட்டார் வாகனம் ஆகியவற்றின் விலை 5 இலட்சம் முதல் 8 இலட்சம் வரை அதிகரித்துள்ளது. இந்த வாகனங்கள் தற்போது 16 முதல் 17 இலட்சம் வரை விற்பனையாகின்றது.

இத்னைத்தவிர முச்சக்கரவண்டியொன்றின் விலை ஒரு இலட்சம் முதல் ஒரு இலட்சத்து 30 ஆயிரம் வரை அதிகரித்துள்ளது.

இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் மோட்டார் சைக்கிள் ஒன்றின் விலை 80 ஆயிரம் ரூபாயினால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதில் மற்றுமொரு கட்டமாக இந்திய ஒயில் நிறுவனத்திற்கு (ஐ.ஓ.சி.) குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள திருகோணமலை துறைமுக எண்ணெய்க் குதங்களுக்கான ஒப்பந்தத்தை இரத்துச் செய்வதற்கு தேவையான ஆலோசனைகள் சட்டமா அதிபர் திணைக்களத்திடம் இருந்து கோரப்பட்டுள்ளன.

இதுகுறித்து எண்ணெய் வளத்துறை அமைச்சர் சுசில் பிரேமஜயந்த கருத்துத் தெரிவிக்கும் போது இந்திய எண்ணெய் நிறுவனத்துடன் ஒப்பந்தம் ஒன்றை செய்து கொள்வதற்கான அதிகாரம் இலங்கை எண்ணெய் வளத்துறை நிறுவனத்திற்கு இல்லை எனவும் இதற்கான அதிகாரம் திறைசேரியிடமே இருப்பதாகவும் கூறியிருந்தார்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையில் ஏப்ரல் 8ஆம் திகதி முதல் 10ஆம் திகதிவரை புதுடில்லியில் தென்னாசிய அரசியல் ஆய்வு நிறுவனம் என்ற மாநாடு நடைபெறவுள்ளது.

இந்த மாநாடு முடிபடைந்த பின்னர் இலங்கை அரசாங்கத்தின் இந்தியா மீதான பழிதீர்க்கும் செயற்பாடுகள் தீவிரப்படுத்தப்படவுள்ளதாக அரசாங்கத்தின் சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் தெரிவித்தார்.

அத்துடன் குறித்த இந்திய மாநாட்டில் கலந்துகொள்ளும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, ம்ங்கள சமரவீர, ரணில் விக்கிரம சிங்க ஆகியோரின் செயற்பாடுகள்குறித்து விரிவான அறிக்கையொன்றை தாக்கல் செய்யுமாறு ஜனாதிபதி அரச புலனாய்வு பிரிவினருக்கு உத்தரவிட்டுள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ந-8,11)

# எதிர்க் கட்சிகளின் மேதின நிக...

மேற்கொள்ளவும் முடிபு எடுக்கப்பட்டது.

அத்துடன், பொதுக்கூட்டத்திற்காக அமைக்கப்படும் மேடையில் தனியொரு கட்சியை பிரதிபலிக்காது, பங் கொள்ளும் அனைத்துக் கட்சிகளையும் பிரதிபலிக்கும் வண்ணக் கொடிகள் நாட்டப்படுவதாகவும், பேரணியிலும் அதேபோன்று நடைமுறைகளைக் கடைப்பிடிப்பதாகவும் முடிபெடுக்கப்பட்டது.

இது குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் கருத்துத் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணத்தில் மேதினக் கூட்டத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையில் நடத்தவென தீர்மானிக்கப்பட்டுள்ளது. இம் முடிபு கூட்டமைப்பின் அனைத்து உறுப்பினர்களின் முடிபேயாகும்.

இதன்படி மே தினத்துக்கான அனைத்து ஏற்பாடுகளையும் கூட்டமைப்பே மேற்கொள்ளும். அத்துடன், நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை செயற்படுத்தவும் அடிப்படைச் சம்பளம் 12,500 ரூபாயாக வழங்க வேண்டும் எனவும், மீள்குடியேற்றம் குறிப்பிட்ட கால எல்லைக்குள் நிறைவுறுத்த வேண்டும் எனவும் அரசிற்கு கோரிக்கை விடுத்து கோஷம் எழுப்புவதாகவும் முடிபு செய்யப்பட்டது.

இதேவேளை, யாழ்ப்பாண நகரில் அல்லாது பிறிதொரு இடத்தில் மே தின நிகழ்வை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாநகராட்சி தற்போது ஆளும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கட்டுப்பாட்டில் உள்ளதால், அனுமதி பெறுவதில் தடங்கல்கள் ஏற்படும்.

இதன் காரணமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வசமுள்ள இடத்தில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டது. (ந-8,11)

# புலிகள்...

தாக்குதல் சம்பவம் ஒன்றில் உயிரிழந்த ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளேயின் நான்காவது நாள் நினைவுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டுமக்களை தவறான பாதைக்கு இட்டுச் சென்று அழிவை ஏற்படுத்திய பயங்கரவாத செயற்பாடுகளை எவ்வாறாயினும் மறக்க முடியாது எனவும் அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (ந-8,11)

# தொண்டு நிறுவன பணி...

தூதுவர், பல கேள்விகளை கேட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

திருகோணமலையில் ஐந்து மாணவர்களும், மூதூரில் 17 உதவி நிறுவனப் பணியாளர்களும் கொலை செய்யப்பட்டமை தொடர்பான விசாரணைகள் மீண்டும் தொடங்கப்படும் என முன்னாள் சட்டமா அதிபர் மொஹான் பீரிஸ் கடந்த பெப்ரவரி மாதம் ஜெனிவாவில் இலங்கை பற்றிய ஆர்வம் கொண்டிருந்த நாடுகளின் பிரதிநிதிகளுடன் பேசிய போது உறுதியளித்திருந்தார்.

இந்த விசாரணைகளுக்கு என்ன நடந்தது என அறிவதில் சர்வதேச மன்னிப்புச் சபை மிகுந்த ஆர்வமாக இருந்தது. இந்தவிடயம் தொடர்பாக ஆராய்வதற்கென நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கை ஏன் வெளியிடப்படவில்லை எனவும் சர்வதேச மன்னிப்புச் சபை கேட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-8,11)

**கிளிநொச்சியில்**
ஆங்கில மொழிக்கல்வியில் முன்னோடி
ELTC
ENGLISH LANGUAGE TEACHING COLLEGE (Pvt) Ltd
UK Qualified ஆசிரியரின் கற்பித்தலில்
பாடசாலை மாணவர்கள் விடுமுறையினை பயனுள்ளதாக கழித்திட,
- One Month English Course
விசேட கட்டணம் 2000/-
- Spoken English (04 Months)
(50% கட்டணக் கழிவு) வழங்கப்படும்.
- Kids English சிறுவர்களுக்கான ஆங்கிலம் (முதல்மாதக் கட்டணக் கழிவு வழங்கப்படும்)
- Special English Classes (பாடசாலை மாணவர்களுக்கானது)
- Kids computer சிறுவர்களுக்கான கணனி.
அனைத்து கற்கைநெறிகளிற்கும் விசேட கட்டணக் கழிவு வழங்கப்படும்.
- ஆங்கில மொழியிலே முன்பள்ளி
English Medium Preschool
ஆரம்பம் 08.04.2012 04 மணி
மேலதிக தொடர்பிற்கு
EXECUTIVE BRANCH
0779101787
HEAD OFFICE
0770743131
167, வைரவ புளியங்குளம்,
வவுனியா.
(சி-6285)

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**
ஏமது வித்தியாலய முதல்வர்
திரு.முத்துத்தம்பி செல்வஸ்தான் அவர்கள்
03.04.2012 அன்று கொழும்பு பண்டார நாயக்கா ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் கல்விமாணிப் பட்டம் பெற்றமையை இட்டு வாழ்த்துவதுடன் மேலும் பல பட்டங்களைப்பெற்று பார் போற்றிட வாழ்கவென பாராட்டி வாழ்த்துகிறோம்

வாழ்த்துவோர் :- நலன்புரிக் கழகம்
யா/ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயம்

இப்பத்திரிகை வலம்புரி அ[illegible] ஸ்தாபனத்தாரால் இல.3.2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.04.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.